# தகவல் தொழில்நுட்பவியல் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

## மானியக் கோரிக்கை எண். 31

## 2017-2018


## டாக்டர். எம். மணிகண்டன்

### தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2017

# தகவல் தொழில்நுட்பவியல் துறை

## மானியக் கோரிக்கை எண்.31

# கொள்கை விளக்கக் குறிப்பு 2017-2018

## பொருளடக்கம்


| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| I | **முன்னுரை** | 1-5 |
| II | **தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்)** | 6-61 |
| 2.1 | முன்னுரை | 6-7 |
| 2.2 | தகவல் தொழில்நுட்பவியல் தொழில்துறை மேம்பாடு: எல்காட் நிறுவனத்தின் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (எல்கோசெஸ்) | 8 |
| 2.2.1 | எல்கோசெஸ் - சோழிங்க நல்லூர், சென்னை | 9-11 |
| 2.2.2 | எல்கோசெஸ்- விளாங்குறிச்சி, கோயம்புத்தூர் | 11-13 |
| 2.2.3 | எல்கோசெஸ் - இலந்தைகுளம், மதுரை | 13-16 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 2.2.4 | எல்கோசெஸ்- வடபழஞ்சி, மதுரை | 16-18 |
| 2.2.5 | எல்கோசெஸ்- நவல்பட்டு, திருச்சி | 18-21 |
| 2.2.6 | எல்கோசெஸ் - கங்கை கொண்டான், திருநெல்வேலி | 21-23 |
| 2.2.7 | எல்கோசெஸ் – ஜாகீர்அம்மா பாளையம், சேலம் | 23-25 |
| 2.2.8 | எல்கோசெஸ் - விஸ்வநாதபுரம், ஓசூர் | 25-27 |
| 2.3 | தொழில்முனைவோர் மையம் | 27-28 |
| 2.3.1 | தொழில்முனைவோர் மையம், சென்னை | 27 |
| 2.3.2 | தொழில்முனைவோர் மையம், கோயம்புத்தூர் | 28 |
| 2.4 | சோழிங்கநல்லூர் எல்கோ செஸ்ஸில் ஒரு தகவல் தொழில் நுட்பவியல் கட்டடம் அமைத்தல் | 29 |
| 2.5 | கிராமப்புற வணிக வெளிப்பணி | 29-30 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| | மையங்கள் (Rural Business Process Outsourcing Centres (RBPO) | |
| 2.6 | கொள்முதல் பிரிவு | 30-32 |
| 2.7 | மடிக்கணினி வழங்கும் திட்டம் | 33-34 |
| 2.8 | மின் ஆளுமைப் பிரிவு | 34-38 |
| 2.8.1 | அரசுத் துறைகளுக்காக உருவாக்கப்பட்ட சில வலை தளங்கள் | 37 |
| 2.8.2 | நிரந்தர பதிவு மையங்கள் (PECs) | 37-38 |
| 2.9 | தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு | 38-59 |
| 2.9.1 | தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு (TAMIL NADU STATE WIDE AREA NETWORK) | 40-45 |
| 2.9.1(அ) | தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு - செங்குத்து இணைப்பு (TNSWAN – Vertical Connectivity) | 41-43 |
| 2.9.1(ஆ) | தமிழ்நாடு பெரும் பரப்பு | 43-44 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| | வலையமைப்பு - கிடைமட்ட இணைப்பு (TNSWAN – Horizontal Connectivity) | |
| 2.9.1(இ) | பதிலி இணைப்பு (Redundant Connectivity) | 44-45 |
| 2.9.2 | தேசிய அறிவுத்திறன் வலையமைப்பு (National Knowledge Network -NKN) | 45-47 |
| 2.9.3 | இணைய குத்தகை இணைப்பு (Internet leased line) மற்றும் பல்நெறி முறை அடையாள நிலைமாற்றி (Multi Protocol Label Switching (MPLS)) இணைப்பு | 47-48 |
| 2.9.4 | தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் (Tamil Nadu State Data Centre-TNSDC) | 48-53 |
| 2.9.4 (அ) | தமிழ் நாடு மாநிலத் தரவு மையம் -1 | 48-52 |
| 2.9.4(ஆ) | தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் - 2 | 52-53 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 2.9.5 | மூலக்கணினி பண்ணை (Server Farm) | 53-54 |
| 2.9.6 | பேரிடர் மீட்பு மையம் (Disaster Recovery Centre – DRC) மற்றும் அருகாமை பேரிடர் மீட்பு மையம் (NLDRC) | 54-57 |
| 2.9.6(அ) | பேரிடர் மீட்பு மையம் - திருச்சி (DRC-TRICHY) | 54-56 |
| 2.9.6(ஆ) | தேசியத் தரவு மையம் - புனே (NDC-PUNE) | 56 |
| 2.9.6(இ) | அருகாமை பேரிடர் மீட்பு மையம் (Near Line Disaster Recovery Centre – NLDRC) | 56-57 |
| 2.9.7 | மாநிலத் தரவு மையத்தில் மேகக் கணினிய உட்கட்டமைப்பு (Cloud Infrastructure at Tamil Nadu State Data Centre) | 57-58 |
| 2.9.8 | மின்னஞ்சல் தீர்வு | 58-59 |
| 2.10 | நிதிநிலை செயல்பாடு | 59-61 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| III | **மின் ஆளுமை ஆணையரகம் / தமிழ்நாடு மின்னாளுமை முகமை** | 62-119 |
| 3.1 | முன்னுரை | 62-64 |
| 3.2 | நிறுவன வடிவமைப்பு | 64-73 |
| 3.2.1 | மாநில உயர்மட்ட குழு | 64-65 |
| 3.2.2 | மின் ஆளுமை ஆணையரகம் | 66-67 |
| 3.2.3 | தமிழ்நாடு மின்ஆளுமை முகமை | 68-69 |
| 3.2.4 | நிறுவன அமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பப் பணியாளர் தொகுப்பு | 69-70 |
| 3.2.5 | மாநில மின் குறிக்கோள் குழு (SeMT) | 70-72 |
| 3.2.6 | மாவட்ட மின்ஆளுமை சங்கம் (DeGS) | 71-73 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 3.3 | தமிழ்நாடு மின்ஆளுமை முகமையின் பல்வேறு திட்டங்கள் | 73-117 |
| 3.3.1 | மின் மாவட்டத் திட்டம் (e-District Programme) | 73-85 |
| 3.3.2 | அரசு இ-சேவை மையங்கள் (Arasu e-Sevai Centres) | 85-88 |
| 3.3.3 | மாநில சேவை இணையதளம் / மாநில சேவைகள் விநியோக நுழைவாயில் (State Portal / State Services Delivery Gateway) | 89-90 |
| 3.3.4 | திறன் மேம்பாடு (Capacity Building) | 90-92 |
| 3.3.5 | திறன் மேம்பாட்டிற்கான சிறப்பு மையம் (Centre of Excellence for Capacity Building) | 92-94 |
| 3.3.6 | தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு (TNGIS) | 94-98 |
| 3.3.6(அ) | தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு (TNGIS) நடைமுறைப்படுத்துதல் | 94-97 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 3.3.6(ஆ) | முறைப்படுத்தப்பட்ட இலக்க முகவரி எண் உருவாக்குதல் (Creation of Standardised Digital Address Number) | 98 |
| 3.3.7 | மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையம் (STATE RESIDENT DATA HUB) | 98-100 |
| 3.3.8 | ஆதார் நிரந்தர பதிவு மையம் | 101-102 |
| 3.3.9 | மின் அலுவலகம் (e-Office) | 103 |
| 3.3.10 | மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட துறைகளுக்கு வசதி அளித்தல் (Facilitation for Mission Mode Departments) | 103-105 |
| 3.3.11 | தகவல் தொழில் நுட்பப் பாதுகாப்பு தணிக்கை | 105-106 |
| 3.3.12 | இணையதள சேவை விளக்கக் கோப்பகம் | 106-107 |
| 3.3.13 | திட்டக் கண்காணிப்பு மென்பொருள் | 107-108 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 3.3.14 | அரசு அலுவலர்களுக்கான மின்-கற்றல் பாடங்கள் | 108 |
| 3.3.15 | மின்ஆளுமை ஊக்குவிப்பு நிதி | 109 |
| 3.3.16 | குறுந்தகவல் மூலமாக சேவை நிலை தெரிந்து கொள்ள வசதி | 109-110 |
| 3.3.17 | மின்ஆளுமைக்கான தர கையேடு (e-Governance Standards Manual) | 111 |
| 3.3.18 | இ-தால் ( e-Taal) | 111-112 |
| 3.3.19 | மின் - கையொப்பமிடல் வசதி (e-Sign) | 112 |
| 3.3.20 | உள்ளங்கையில் சான்றிதழ் திட்டம் (Ullangaiyil Sandridhazh Scheme) | 113-114 |
| 3.3.21 | தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப (மின்னணு சேவைகள் வழங்குதல்) விதிகள், 2016 | 114-117 |
| 3.4 | நிதி நிலை செயல்பாடுகள் | 118-119 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| IV | **தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம்** | 120-143 |
| 4.1 | முன்னுரை | 120-121 |
| 4.2 | நோக்கம் | 122 |
| 4.3 | பின்னணி மற்றும் வளர்ச்சி | 122-123 |
| 4.4 | உட்கட்டமைப்பு | 123-124 |
| 4.5 | நிறுவனத்தின் அமைப்பு | 124-125 |
| 4.6 | சென்னை மாநகர சேவை துவக்கம் | 125-126 |
| 4.7 | டிஜிட்டல்மயமாக்கம் | 126-127 |
| 4.8 | டிஜிட்டல்மயமாக்க தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் எடுத்துவரும் நடவடிக்கைகள் | 128-130 |
| 4.8(அ) | செட்டாப் பாக்ஸ், நிபந்தனை அணுகல் அமைப்பு (Conditional Access System (CAS)) மற்றும் சந்தாதாரர் மேலாண்மை அமைப்பு (Subscriber Management System (SMS)) கொள்முதல் | 128-129 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 4.8(ஆ) | தமிழ்நாடு முழுவதற்கும் டிஜிட்டல் சேவையை கொண்டுவர எடுத்து வரும் நடவடிக்கைகள் | 129-130 |
| 4.9 | தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் அரசு இ-சேவை மையங்கள் | 130-132 |
| 4.10 | நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்கள் (PECs) | 132 |
| 4.11 | அதிவேக அகன்ற அலைவரிசை இணையதள சேவைகள் | 133-135 |
| 4.12 | இலவச பொது WiFi சேவைகள் மற்றும் பள்ளிகளுக்கு இணைய வசதி | 136-137 |
| 4.13 | தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் நிதிநிலை செயல்பாடு | 137-139 |
| 4.14 | 2013-14-ஆம் ஆண்டின் நிதிநிலை செயல்பாடு | 139-141 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 4.15 | 2014-15-ஆம் ஆண்டின் நிதிநிலை செயல்பாடு | 141 |
| 4.16 | 2015-16-ஆம் ஆண்டின் நிதிநிலை செயல்பாடு | 142 |
| 4.17 | 2016-17-ஆம் ஆண்டின் நிதிநிலை செயல்பாடு | 142-143 |
| **V** | **தமிழ் இணையக் கல்விக்கழகம்** | 144-171 |
| 5.1 | முன்னுரை | 144 |
| 5.2 | நோக்கம் | 145-146 |
| 5.3 | செயல்பாடுகள் | 146-147 |
| 5.3.1 | கல்வித் திட்டங்கள் | 146 |
| 5.3.2 | கணினித் தமிழ் | 146 |
| 5.3.3 | மின்னூலகம் | 147 |
| 5.3.4 | தமிழ் மென்பொருள் உருவாக்கல் (Tamil Software Development) | 147 |
| 5.3.5 | தமிழ்க் கலை மற்றும் பண்பாட்டுக் கூறுகளை ஆவணப்படுத்தலும் காப்பதும் | 147 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 5.4 | கல்வித் திட்டங்கள் | 148-150 |
| 5.5 | தகவலாற்றுப்படை | 152-153 |
| 5.6 | மின்நிகண்டு, மின்கற்றல் இணையதளம் மற்றும் மின்னுருவாக்கம் | 153-156 |
| 5.6.1 | தமிழ் மின் நிகண்டு | 153-154 |
| 5.6.2 | மின்கற்றல் இணையதளம் (e-Learning Portal) | 155 |
| 5.6.3 | நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள் மின்னுருவாக்கம் | 155-156 |
| 5.7 | தமிழ்க் கலை மற்றும் பண்பாட்டுக் கூறுகளை ஆவணப்படுத்திப் பாதுகாத்தல் மற்றும் தகவலாற்றுப்படை மாதாந்திர சொற்பொழிவு | 157 |
| 5.8 | தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் பரப்புரைப்பணிகள் | 157-160 |
| 5.8.1 | கணித்தமிழ்ப் பேரவை | 158 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 5.8.2 | தமிழ்ப் பெருங்களஞ்சியத் திட்டம் | 159 |
| 5.8.3 | கல்வி சார்ந்த காணொலிகளின் தமிழ்த் தன்னிலையாக்கம் | 159-160 |
| 5.8.4 | பொதுவளம் மற்றும் படைப்பாக்க முயற்சிகள் | 160 |
| 5.9 | புதிய செயல் திட்டங்கள் | 161-171 |
| 5.9.1 | தமிழ் தரவகம் உருவாக்கம் | 161-162 |
| 5.9.2 | பகுப்பாய்வு கருவிகள் உருவாக்கம் | 162-164 |
| 5.9.2(அ) | சொல் எண்ணிக்கைக் கண்டறியும் கருவி | 162 |
| 5.9.2(ஆ) | சொற்களை வகைப்படுத்தும் கருவி | 162-163 |
| 5.9.2 (இ) | வரிவடிவ கணிப்புக் கருவி | 163 |
| 5.9.2 (ஈ) | முன்பின் சொற்களைக் கண்டறியும் கருவி | 163 |
| 5.9.2 (உ) | கோப்பின் பெயர் மாற்றி | 163 |
| 5.9.2(ஊ) | துறைப் பகுப்பி | 164 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 5.9.3 | மின்நூலகம் | 164-165 |
| 5.9.4 | ஒருங்குறிமுறை | 166 |
| 5.9.5 | அனைத்து வரியுருக்களுக்கான குறியீடு | 166 |
| 5.9.6 | தமிழ் மென்பொருள்கள் உருவாக்கம் | 166-169 |
| 5.9.7 | புதிய பாடத்திட்டங்கள் உருவாக்குதல் | 169 |
| 5.9.8 | ஆசிரியர்களுக்குப் பயிற்சி | 169-170 |
| 5.9.9 | கல்வி மேலாண்மை | 170 |
| 5.9.10 | மாணவர்களுக்கான குறுஞ்செயலிகள் | 170 |
| 5.9.11 | படைப்பாக்க பொதும உரிமம் | 171 |
| **VI** | **தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம்** | 172-194 |
| 6.1 | முன்னுரை | 172-174 |
| 6.2 | செயல்பாடுகள் | 174-188 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 6.2.1 | ஆசிரியர் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் | 174-176 |
| 6.2.2 | திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் | 176-178 |
| 6.2.3 | தொழில் முனைவு மேம்பாட்டுத் திட்டம் | 178-179 |
| 6.2.4 | இளைஞர் மேம்பாட்டுத் திட்டம் | 179-180 |
| 6.2.5 | ஆய்விதழ்கள் மற்றும் பிரசுரங்கள் | 180-182 |
| 6.2.5 (அ) | ICTACT-யின் சர்வதேச ஆய்விதழ்களுக்கான இண்டெக்ஸ் காப்பர்நிக்கஸ் மதிப்பு | 181 |
| 6.2.5(ஆ) | ICTACT-யின் சர்வதேச ஆய்விதழ்களுக்கான குளோபல் இம்ப்பேக்ட் பேக்டர் மதிப்பு | 182 |
| 6.2.6 | டிஜிட்டல் மேம்பாட்டுத் திட்டம் | 183-184 |
| 6.2.7 | தொழிற்துறை மற்றும் கல்வி நிறுவனத் தொடர்புத் திட்டம் | 184-188 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 6.3 | ICTACT விருதுகள் | 188-189 |
| 6.4 | 2016-17-ல் முடிவு பெற்ற அரசுத் திட்டங்கள் | 190-192 |
| 6.5 | 2017-2018-ல் நடைமுறையில் உள்ள தமிழக அரசின் திட்டங்கள் | 193-194 |
| **VII** | **தமிழ்நாடு பைபர்நெட் கார்ப்பரேஷன் லிமிடெட் (TANFIINET)** | 195-198 |
| **VIII** | **விருதுகள்** | 199-206 |
| 8.1 | தமிழக அரசால் வழங்கப்படும் விருதுகள் | 199-201 |
| 8.1.1 | அரசுத் துறைகளுக்கான மின் ஆளுமைக்கான மாண்புமிகு முதலமைச்சரின் உயரிய விருது | 199-200 |
| 8.1.2 | மாணவர்களுக்கான மின் ஆளுமைக்கான மாண்புமிகு முதலமைச்சரின் உயரிய விருது | 200 |
| 8.1.3 | சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான | 201 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| | தமிழ்நாடு அரசின் மின் ஆளுமை விருது | |
| 8.2 | தகவல் தொழில்நுட்பவியல் துறையால் பெறப்பட்ட விருதுகள் | 201-206 |
| 8.2.1 | மாண்புமிகு முதலமைச்சரின் சிறந்த நடைமுறைக்கான விருது-2015 | 201-202 |
| 8.2.2 | 2014-ஆம் ஆண்டிற்கான "வெப் ரத்னா" விருது | 202 |
| 8.2.3 | 2016-ஆம் ஆண்டிற்கான "வெப் ரத்னா" விருது | 203-204 |
| 8.2.4 | அதிக அளவில் ஆதார் அட்டைகள் அச்சிட்டமைக்காக கேபிள் டிவி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட விருது | 204-205 |
| 8.2.5 | மின் ஆளுமை இயக்குநரகம் மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை–கனெக்ட் 2016 மின் ஆளுமை விருது | 205-206 |

# அத்தியாயம் – I

## முன்னுரை

தகவல் தொழில்நுட்பம் தற்போது உலகப் பொருளாதாரம் மற்றும் வணிகத்தின் உந்து சக்தியாகத் திகழ்கிறது. தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பப் புரட்சியினாலும், இதில் நிகழ்ந்துவரும் பெரிய அளவிலான மாற்றங்களினாலும், செழிப்புடன் வளரத் துடிக்கும் அனைத்து நாடுகளும் விரும்பும் முக்கியத் துறையாக தகவல் தொழில் நுட்பவியல் துறை மாறியுள்ளது.

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் அளிப்பதில், தமிழ் நாடு உகந்த இடமாகத் தொடர்கிறது. தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளான வங்கியியல், நிதி சேவைகள் மற்றும் காப்பீடு (Banking, Financial Services and Insurance - BFSI), சுகாதாரத் திட்ட மேலாண்மை (Health Systems Management), கணினி சார்ந்த வடிவமைப்பு (Computer Aided Design - CAD) மற்றும் கணினி சார்ந்த

பொறியியல் (Computer Aided Engineering - CAE) போன்றவற்றின் சிறப்பிடமாக மாநிலத்தை மாற்றும் வகையில் திறன்வாய்ந்த மனித வளத்தைத் திறம்பட உருவாக்கியுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட"தமிழ்நாடு தொலை நோக்கு பார்வை, 2023" ஆவணத்தில்,

> **"தமிழ்நாடு, பொறுப்பான மற்றும் வெளிப்படையான ஆளுமையால் முன்னேற்றம், பாதுகாப்பு மற்றும் அனைத்து தரப்பு மக்களுக்கும் சம வாய்ப்பு என்ற போற்றத்தக்க ஒரு கலாச்சாரத்தை எட்டும்.**"

- என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல் ஆளுமையில் தமிழகம் இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் முன்னோடியாகத் திகழ்கிறது. பொது மக்களுக்கான சேவைகளை உடனுக்குடன், நம்பகமான மற்றும் வெளிப்படையான முறையில் அளித்திடும் வகையிலான தீர்வுகளை உருவாக்குவதும், அதனைச் செயல்படுத்துவதுமே நல் ஆளுமை (Good Governance) எனப்படும்.

மேற்காணும் நோக்கத்தினை எய்திடும் வகையில் அரசின் சேவைகளை மக்களுக்கு முனைப்புடன், விரைவாக அளித்திடவும், தகவல்களை விரைந்து பரிமாறிடவும் ஏதுவாக தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பை தமிழக அரசு திறம்படப் பயன்படுத்தி வருகிறது.

மின் ஆளுமைப் பயன்பாட்டை உறுதி செய்திடவும், தகவல் தொழில்நுட்பத் தொழிலில் தமிழக அரசுக்குத் துணை நிற்கவும் ஏதுவாக தகவல் தொழில்நுட்பவியல் துறை தோற்றுவிக்கப்பட்டது. மக்களுக்குத் தரமான கேபிள் டிவி சேவை வழங்குவது, தமிழ் கணினியம், மாணவர்கள் மற்றும் தொழில் முனைவோர்க்கு தகவல் தொழில்நுட்பத்தில் பயிற்சியளிப்பது போன்ற சேவைகள் வழங்குவதுடன், பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவது என தொடர் உருமாற்றங்களுடன் இத்துறை தொடர்ந்து சிறந்த முறையில் பங்காற்றி வருகிறது.

தகவல் தொழில்நுட்பவியல் துறையின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு :

- **குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தினை தகவல் மற்றும் தகவல்தொடர்பு தொழில்நுட்பம் வாயிலாக உயர்த்துதல்;**
- **மாநிலத்திலுள்ள தகவல் தொடர்பு மற்றும் மின்னணு தொழில்துறை வளர்ச்சியை ஊக்குவிக்க உறுதுணை புரிதல்;**
- **கிராம மற்றும் நகர மக்களிடையே தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் உள்ள இடைவெளியை நிரப்புதல்;**
- **தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதியை கணிசமாக உயர்த்துதல்;**
- **தகவல் தொழில்நுட்பம் சார்ந்த ஆளுமையில் தமிழகத்தை சிறந்த மாநிலமாக ஆக்குதல்;**
- **இணையம் வாயிலாக அரசின் தகவல் மற்றும் பரிமாற்றம் சார்ந்த சேவைகளை குடிமக்களின் இருப்பிடத்திலேயே அளித்தல்;**

- **நியாயமான கட்டணத்தில் கேபிள் டிவி சேவைகள் மற்றும் அகன்ற அலைவரிசை இணையவழி சேவைகளை அனைத்து இல்லங்களுக்கும் அளித்தல்;**
- **இணையம் வாயிலாக தமிழை கற்பித்தல் மற்றும் கணினித் தமிழை உயர்நிலைக்கு எடுத்துச் செல்லுதல்.**

# அத்தியாயம் - II

# தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்)

## 2.1 முன்னுரை

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்), 1956ஆம் ஆண்டைய இந்திய நிறுவனங்கள் சட்டத்தின்கீழ், 21.03.1977 அன்று பதிவு செய்யப்பட்டு, 1982-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் சேவைகளை வழங்கி வருகிறது.

தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்களை மேம்படுத்துதலும், பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் அரசுத்துறை நிறுவனங்களின் தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் கொள்முதல் செய்தலும், மின்ஆளுமை மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சேவைகளுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவிப் பணிகளை செய்வதும் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் முதன்மையான பணிகளாகும்.

தமிழக அரசுக்குத் தேவையான தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வன்பொருள் கொள்முதல், மென்பொருள் உருவாக்கம் மற்றும் பெரிய முழுமைப்பணி தகவல் தொழில்நுட்பவியல் திட்டங்கள் ( Major turnkey IT Projects) ஆகியவற்றிற்கு விருப்பக் கொள்முதல் முகமையாகவும் (Optional Procurement Agency) மற்றும் மத்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறையின் முக்கிய தகவல் தொழில்நுட்பவியல் கட்டமைப்புத் திட்டங்களுக்குத் தொழில்நுட்ப உதவி புரியும் முகமையாகவும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் திகழ்கிறது. மிகப் பெரிய தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்புத் திட்டங்களான தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு, தமிழ்நாடு மாநிலத் தரவு மையம், மேகக்கணினியம் மற்றும் தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையம் போன்ற திட்டங்கள் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் செயல்படுத்தப்படுகிறது.

**2.2 தகவல் தொழில்நுட்பவியல் தொழில்துறை மேம்பாடு : எல்காட் நிறுவனத்தின் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (எல்கோசெஸ்)**

தமிழக அரசின் கொள்கை அடிப்படையில், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களான சென்னை, கோயம்புத்தூர், மதுரை (இரண்டு இடங்கள்), திருச்சி, சேலம், திருநெல்வேலி மற்றும் ஓசூர் ஆகிய 8 இடங்களில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்ந்த சேவைகளுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலங்களை (எல்கோசெஸ்) உருவாக்கி உள்ளது.

மேற்குறிப்பிட்ட 8 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் 68,900 நேர்முக வேலை வாய்ப்பையும் மற்றும் 1,37,800 மறைமுக வேலைவாய்ப்பையும் ஏற்படுத்தியுள்ளன. இந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் மென்பொருள் ஏற்றுமதி 2015-16-ஆம் ஆண்டு ரூ.17,266 கோடியாக இருந்தது.

**2.2.1 எல்கோசெஸ் - சோழிங்கநல்லூர், சென்னை**

சென்னை, சோழிங்கநல்லூர் கிராமத்தில் 377.08 ஏக்கர் நிலப்பரப்பில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் ஓர் எல்கோசெஸ்ஸை உருவாக்கியுள்ளது. அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் 6,358 சதுரடி கொண்ட ஒரு நிர்வாகக் கட்டடத்தையும் ரூ.43.26 கோடி முதலீட்டில் அமைத்துள்ளது. இந்த எல்கோசெஸ்சில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மொத்த முதலீடு ரூ.195.35 கோடியாகும்.

இந்த எல்கோசெஸ்சில் பின்வருமாறு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவைகள் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது : -

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்-கீட்டின் அளவு (ஏக்கரில்) | தொழில் நுட்ப கட்டட அளவு (சதுர அடியில்) | இயக்கம் மற்றும் பணியாளர்-களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | விப்ரோ | 80 | 27 இலட்சம் | 19,000 |
| 2. | எச்.சி.எல் | 50 | 22 இலட்சம் | 18,000 |
| 3. | சத்யம் | 50 | 6.25 இலட்சம் | 4,200<br>2 இலட்சம் சதுர அடியில் தகவல் தொழில் நுட்பக் கட்டடப் பணி நடைபெறு கிறது. |
| 4. | சதர்லேண்ட் குளோபல் சர்வீசஸ் லிட். | 15 | தகவல் தொழில் நுட்பக் கட்டடப் பணி நடைபெற்று வருகிறது. | |
| 5. | காக்னிசன்ட் டெக்னாலஜி சொலுஷன்ஸ் லிட் | 20 | 28 இலட்சம் | 18,000 இருக்கை வசதியுடன் 12,000 பணியாளர்-களுடன் இயங்கி வருகிறது. |
| 6. | போர்டு மோட்டார் பிரைவேட் லிமிடெட் | 28 | இணை மேம்பாட்டாளர் ஒப்புதல் பெறப்பட்டு 26,06,291 சதுரடி கட்ட்டப் பணி நடைபெற்று வருகிறது. | |





**படம் 1**

### 2.2.2 எல்கோசெஸ்-விளாங்குறிச்சி,கோயம்புத்தூர்

கோயம்புத்தூர், விளாங்குறிச்சி கிராமத்தில் 62 ஏக்கர் நிலப்பரப்பில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் ஓர் எல்கோசெஸ்ஸை உருவாக்கியுள்ளது. அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.19 கோடி முதலீட்டில் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் 3,524 சதுர அடி கொண்ட ஒரு நிர்வாகக் கட்டடம் ரூ.1.22 கோடி முதலீட்டில் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 23.5.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இந்த எல்கோசெஸ்சில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மொத்த முதலீடு ரூ.72.50 கோடியாகும்.

இந்த எல்கோசெஸ்சில் பின்வருமாறு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது: -

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்-கீட்டின் அளவு (ஏக்கரில்) | தொழில்நுட்ப கட்டட அளவு (சதுர அடியில்) | இயக்கம் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | விப்ரோ | 9.5 | 3.5 இலட்சம் | 2,000 |
| 2 | டைடல் பார்க் கோயம்புத்தூர் லிட் | 9.5 | 17 இலட்சம் | இதில் 9.14 இலட்சம் சதுரடி தகவல் தொழில் நுட்பத்திற்காக ஒதுக்கப் பட்டுள்ளது. தற்போது 8.39 இலட்சம் சதுரடி முழுமையாக நிரப்பப்பட்டு 50 தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்கள் 11,000 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன. 952 இருக்கைகள் கொண்ட வளர்ச்சி மையம் 70,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | சதுரடியில் 28 தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளன. |




படம் 2

### 2.2.3 எல்கோசெஸ் - இலந்தைகுளம், மதுரை

மதுரை, இலந்தைக்குளம் கிராமத்தில் 28.91 ஏக்கர் நிலப்பரப்பில் தமிழ்நாடு மின்னனு நிறுவனம் ஓர் எல்கோசெஸ்ஸை உருவாக்கியுள்ளது. அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் 50,000 சதுரடி கொண்ட ஒரு நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் கட்டடம் ரூ.26 கோடி முதலீட்டில் அமைத்துள்ளது. இந்த எல்கோசெஸ்சில் தமிழ்நாடு மின்னனு நிறுவனத்தின் மொத்த முதலீடு ரூ.34.41 கோடியாகும்.

இந்த எல்கோசெஸ்சில் பின்வருமாறு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :-

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) | தொழில் நுட்பக் கட்டட அளவு (சதுர அடியில்) | இயக்கம் மற்றும் பணியாளர்-களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | ஹனிவெல் டெக்னாலிஜிஸ் லிட். | 11.25 | 50,000 | 600 |
| 2. | செல்லா சாஃப்ட்வேர் பிரைவேட் லிட். | 2.25 | துவக்க நிலையில் உள்ளது. | |
| 3. | எச்.சி.எல் இன்போ சிஸ்டம்ஸ் லிட். | 6.75 | 5,00,000 | கட்டடப் பணி துவங்கப்பட்டு விட்டது. |

50,000 சதுர அடியில் கட்டப்பட்ட எல்காட் நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்பவியல் கட்டடத்தில் வாடகை அடிப்படையில் பின்வருமாறு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :-

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | ஒதுக்கீடு செய்யப் பட்ட இடத்தின் அளவு ( சதுர அடியில்) | இயக்கம் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | கேலக்சி இன்ஃபோடெக் | 2,508 | 30 |
| 2. | ஏ.எம்.பி.சி. டெக்னாலஜீஸ் பிரைவேட் லிமிடெட் | 3,277 | 15 |
| 3. | சாய் பி.பி.ஓ சர்வீசஸ் லிமிடெட் | 15,181 | 310 |
| 4. | நியாமோ என்டர்பிரைசஸ் சொலுஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 30,120 | 250 |
| 5. | சிவிஜஏசி கன்சல்டிங் | 9,136 | துவக்க நிலையில் உள்ளது. |

இந்த எல்கோசெஸ்சில், தமிழ்நாடு மின்னணு நிறுவனம், 100 சதவீதம் நில ஒதுக்கீடு குத்தகை அடிப்படையிலும் மற்றும் கட்டப்பட்ட கட்டடத்தில் இட ஒதுக்கீடு வாடகை அடிப்படையிலும் செய்துள்ளது.






படம் 3

## 2.2.4 எல்கோசெஸ்- வடபழஞ்சி, மதுரை

மதுரை, வடபழஞ்சி கிராமத்தில், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 245.17 ஏக்கர் நிலப்பரப்பில் ஓர் எல்கோசெஸ்ஸை உருவாக்கியுள்ளது. இந்த எல்கோசெஸ்சில் இந்திய அரசு 213 ஏக்கர் பரப்பளவிற்கு சிறப்புப் பொருளாதார மண்டல அந்தஸ்து அளித்துள்ளது. அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.14.99 கோடி முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ளன. இதில் இரயில்வே மேம்பாலம் கட்டுமானப் பணிகள் ரூ.18 கோடி முதலீட்டில் நடைபெற்று வருகிறது. மேலும் 50,000 சதுரடி கொண்ட நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் ரூ.21.13 கோடி முதலீட்டில் நடைபெற்று வருகிறது. இந்த

எல்கோசெஸ்சில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மொத்த முதலீடு ரூ.63.73 கோடியாகும்.

இந்த எல்கோசெஸ்சில் பின்வருமாறு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :-

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1. | எச்.சி.எல் | 60 |
| 2. | சத்யம் | 50 |
| 3. | சதர்லேண்ட் குளோபல் சர்வீசஸ் லிட். | 5 |
| 4. | செயின்-சிஸ் சாஃப்ட்வேர் எக்ஸ்போர்ட்ஸ் (பி) லிட். | 20 |
| 5. | எம்பயர் ஃபோட்டோ வோல்டிக் சிஸ்டம்ஸ் பி. லிட்., சென்னை | 25 (சிறப்புப் பொருளாதார மண்டல அந்தஸ்து அல்லாத நிலம் ) |
| 6. | காலிபர் பாய்ண்ட் | 5 |

| | | |
|---|---|---|
| 7. | ஹெல்த் பிளான் சிஸ்டம்ஸ் (இந்தியா) பிரைவேட் லிட் | 2 |
| 8. | காக்சிடெல் டெக்னாலஜிஸ் பி.லிட். | 2 |

### 2.2.5 எல்கோசெஸ்- நவல்பட்டு, திருச்சி

திருச்சி, நவல்பட்டு கிராமத்தில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 147.61 ஏக்கர் நிலப்பரப்பில் ஓர் எல்கோசெஸ்ஸை உருவாக்கியுள்ளது. இதில் இந்திய அரசு 123.23 ஏக்கர் பரப்பளவிற்கு சிறப்புப் பொருளாதார மண்டல அந்தஸ்து அளித்துள்ளது. அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் 50,000 சதுரடி கொண்ட நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் கட்டடம் ரூ.33.21 கோடி முதலீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்த எல்கோசெஸ்சில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மொத்த முதலீடு ரூ.60 கோடியாகும்.

இந்த எல்கோசெஸ்சில் பின்வருமாறு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவை

நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது : -

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1. | டபிள்யு என்.எஸ். குளோபல் சர்வீசஸ் பிரைவேட் லிட். | 5 |
| 2. | ஐ.லிங்க் மல்டி டெக் சொலுஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 2 |
| 3. | எச்.சி.எல் இன்ஃபோ சிஸ்டம்ஸ் | 2 (சிறப்புப் பொருளாதார மண்டல அந்தஸ்து அல்லாத நிலம்) |
| 4. | சதர்லேண்ட் குளோபல் சர்வீசஸ் லிமிடெட் | 10 |
| 5. | அசிஸ்ட் இண்டர்நேஷனல் பி.லிட். | 3 |
| 6. | ஜைலாக் சிஸ்டம்ஸ் லிட் | 5 |
| 7. | அன்லிமிடெட் இனொவேஷன்ஸ் இந்தியா பி.லிட் | 5 |
| 8. | விடார்ட் டெக்னாலிஜிஸ் | 2 |
| 9. | ஹெல்த் பிளான் சிஸ்டம்ஸ் (இந்தியா) பி.லிட் | 2 |

தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் 50,000 சதுர அடியில் கட்டப்பட்ட தொழில்நுட்பவியல் கட்டடத்தில் வாடகை அடிப்படையில் பின்வருமாறு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இதில் 100 சதவீத இடமும் நிரப்பப்பட்டுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தின் அளவு (சதுர அடியில்) | இயக்கம் மற்றும் பணியாளர்-களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | ஐ லிங்க் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட் | 6,668 | 80 |
| 2. | சயின்டிபிக் பப்ளிஷிங் நிறுவனம் | 30,381 | 1,300 |
| 3. | ஊரம் டெக்னாலஜி சொலுஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 5,976 | 40 |
| 4. | விடார்ட் டெக்னாலஜிஸ் | 3,643 | 60 |
| 5. | பேரிடர் மீட்பு மையம் | 5,963 | 15 |

| | | | |
|---|---|---|---|
| 6. | ஜிஜ டெக் கேமிங் கோ. இண்டியா பி. லிட். | 4,919 | துவக்க நிலையில் உள்ளது. |
| 7. | விஆர் டெல்லா ஐடி சர்வீசஸ் பி. லிட். | 2,541 | துவக்க நிலையில் உள்ளது. |





படம் 4

### 2.2.6 எல்கோசெஸ் - கங்கைகொண்டான், திருநெல்வேலி

திருநெல்வேலி, கங்கைகொண்டான் கிராமத்தில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 500 ஏக்கர் நிலப்பரப்பளவில் ஓர் எல்கோசெஸ்ஸை உருவாக்கியுள்ளது. இதில் இந்திய அரசு 290 ஏக்கர் பரப்பளவிற்கு சிறப்புப் பொருளாதார மண்டல அந்தஸ்து அளித்துள்ளது. 100 ஏக்கர் நிலப்பரப்பளவிற்குத் தேவையான அனைத்து

உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.13.56 கோடி முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், 50,000 சதுரடி கொண்ட நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடம் ரூ. 16 கோடி முதலீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்த எல்கோசெஸ்சில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மொத்த முதலீடு ரூ. 55.22 கோடியாகும்.

‘இந்த எல்கோசெஸ்சில் பின்வருமாறு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :-

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1. | சின்டெல் இன்டர்நேஷனல் பி.லிட் | 100 |
| 2. | சதர்லேண்ட் குளோபல் சர்வீசஸ் லிட். | 10 |
| 3. | ஏ அன்ட் டி காஸ்மிக் பவர் | 25 (சிறப்புப் பொருளாதார மண்டல அந்தஸ்து அல்லாத நிலம்) |
| 4. | டெக்கான் ஐ சர்வீசஸ் | 2 |

திருவாளர்கள் சின்டெல் இன்டர்நேஷனல் பி.லிட். நிறுவனம் இணை வளர்ச்சியாளர் தகுதியை 100 ஏக்கர் நிலப்பரப்பளவிற்கு பெற்று, தங்களுடைய 2.60 இலட்ச சதுரடி கொண்ட தகவல் தொழில்நுட்பவியல் கட்டடப் பணிகளை முடித்து உற்பத்தியை விரைவில் துவக்கவுள்ளது.






படம் 5

### 2.2.7 எல்கோசெஸ் - ஜாகீர்அம்மாபாளையம், சேலம்

சேலம், ஜாகீர்அம்மாபாளையம் கிராமத்தில், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 164.26 ஏக்கர் நிலப்பரப்பளவில் ஓர் எல்கோசெஸ்ஸை உருவாக்கியுள்ளது. முதற்கட்டமாக 53.33 ஏக்கர் நிலப்பரப்பளவிற்கு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் 50,000 சதுரடி கொண்ட நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் கட்டடம் ரூ.29.32 கோடி

முதலீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்த நிர்வாக மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் கட்டடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 23.5.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இந்த எல்கோசெஸ்சில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மொத்த முதலீடு ரூ.34.60 கோடியாகும்.

இந்த எல்கோசெஸ்சில் பின்வருமாறு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :-

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1. | டி.பி.பிரொபஷனல் | 3 |
| 2. | வீ. டெக்னாலிஜிஸ் | 9.49 |
| 3. | மகிமா டெக்னாலிஜிஸ் பி.லிட் | 3 |
| 4. | ஜி.டி.பி இன்ஃபோடெக் சொலுஷன்ஸ் லிமிடெட் | 2.5 |
| 5. | செனோவெட் இன்ஃபோடெக் பி.லிட் | 1.25 |

திருவாளர்கள் வீ. டெக்னாலிஜிஸ் நிறுவனம் இணை வளர்ச்சியாளர் தகுதியைப் பெற்று, தங்களுடைய 20,000 சதுரடி (சுமார்) கொண்ட தகவல் தொழில்நுட்பவியல் கட்டடத்தின் ஒரு பகுதிப் பணியை முடித்து 250 பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.





படம் 6

### 2.2.8 எல்கோசெஸ் - விஸ்வநாதபுரம், ஓசூர்

ஓசூர், விஸ்வநாதபுரம் கிராமத்தில், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 174.47 ஏக்கர் நிலப்பரப்பில் ஓர் எல்கோசெஸ்ஸை உருவாக்கி உள்ளது. அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.19 கோடி முதலீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 50,000 சதுரடி கொண்ட

நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் கட்டடப் பணிகள் ரூ.21 கோடி முதலீட்டில் முடியும் தருவாயில் உள்ளது. இந்த எல்கோசெஸ்சில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மொத்த முதலீடு ரூ.41.74 கோடியாகும்.

இந்த எல்கோசெஸ்சில் பின்வருமாறு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :-

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1. | ஓகாயா இன்போகாம் பிரைவேட் லிமிடெட் | 10 |
| 2. | சி.ஆர்.எம். ஐ.டி.சொல்யூஷன்ஸ் லிட் | 3 |
| 3. | சி.ஆர்.எம் இன்போடெக் இந்தியா பி.லிட் | 2 |




படம் 7

## 2.3 தொழில்முனைவோர் மையம்

### 2.3.1 தொழில்முனைவோர் மையம், சென்னை

தொழில்முனைவோரின் திறனை மேம்படுத்தவும் அவர்களுக்கு உத்வேகத்தை அளிக்கவும் 90 இருக்கைகள் கொண்ட ஒரு தொழில்முனைவோர் மையம், 6,860 சதுரடியில் ரூ.3,53,15,800/- மதிப்பீட்டில், டைடல் பார்க் சென்னையில் முதல் தளத்தில் வாடகை அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளது. இம்மையத்தில் நாஸ்காம் நிறுவனம் அறிவுசார் பங்குதாரராக செயல்படும்.

படம் 8

### 2.3.2 தொழில்முனைவோர் மையம், கோயம்புத்தூர்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 23.9.2016 அன்று அறிவித்தபடி 64 இருக்கை வசதி கொண்ட ஒரு தொழில்முனைவோர் மையம் ரூ.2.07 கோடி முதலீட்டில் டைடல் பார்க் கோயம்புத்தூர் லிட்., கோயம்புத்தூரில் நாஸ்காம் நிறுவனத்தை அறிவுசார் பங்குதாரராக கொண்டு நிறுவப்பட உள்ளது. இந்த தொழில்முனைவோர் மையத்தை நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 2.4 சோழிங்கநல்லூர் எல்கோசெஸ்ஸில் ஒரு தகவல் தொழில்நுட்பவியல் கட்டடம் அமைத்தல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 23.9.2016 அன்று அறிவித்தபடி, சென்னை, சோழிங்கநல்லூர் எல்கோசெஸ்ஸில் 2 இலட்சம் சதுர அடி பரப்பளவில், ரூ. 80 கோடி முதலீட்டில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவைகள் வழங்கும் சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்களுக்கு ஒரு தகவல் தொழில்நுட்பக் கட்டடம் அமைக்கப்பட உள்ளது.

## 2.5 கிராமப்புற வணிக வெளிப்பணி மையங்கள் (Rural Business Process Outsourcing Centres - RBPOs)

சமுதாய மற்றும் பொருளாதார வசதிகளில் பின்தங்கியுள்ள கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கி வேலைவாய்ப்பு வழங்கவும், அதன் மூலம் அவர்கள் நகரங்களுக்கு குடிபெயராமல் இருக்கவும், அரசு, மேம்படுத்தப்பட்ட வணிக வெளிப்பணிக் கொள்கையை வெளியிட்டது.

ஒவ்வொரு கிராமப்புற வணிக வெளிப்பணி மையத்திற்கும் அதிகபட்சம் ரூ.5 இலட்சத்திற்குட்பட்டு வன்பொருள் மற்றும் இதர உபகரணங்களுக்கு மூலதன முதலீடாக 20% மூலதன மானியமும், ரூ.2.25 இலட்சம் பயிற்சி மானியமும் அளிப்பதற்கு இக்கொள்கையில் வழிவகை உள்ளது.

திருவாளர் சதர்லேண்ட் குளோபல் சர்வீஸஸ் (வெளிப்பணி மைய நிறுவனம்) அவர்களால் 50 பணியாளர் கொண்ட கிராமப்புற வணிக வெளிப்பணி மையம் நாவலூர் - குட்டப்பட்டு கிராமம், திருவரங்கம், திருச்சி மாவட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டபடி, எல்காட் நிறுவனத்தின் வழிகாட்டுதல் மற்றும் ஒத்துழைப்பின்படி அமைக்கப்பட்டுள்ளது.

## 2.6 கொள்முதல் பிரிவு

அரசுத் துறைகளுக்குத் தகவல் தொழில்நுட்பப்பிரிவு சார்ந்த வன்பொருள்களை துறைகளுக்கு கொள்முதல் செய்யவும் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளை

வழங்கவும், விருப்பக் கொள்முதல் முகமையாக தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தை (எல்காட்) தமிழக அரசு நியமித்துள்ளது. எல்காட் நிறுவனம் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வன்பொருள்களை சமீபத்திய உள்ளமைவுடன் (Configuration) கூடிய மூலக்கணினிகள் (Servers), மேசைக்கணினிகள் (Desktop Computers), மடிக்கணினிகள் (Laptop Computers), அச்சுப்பொறிகள் (Printers), ஒளிஉணரி (Scanner), தடையில்லா மின்சாதனம் (UPS), படவீழ்த்தி (Projector), திறன்பேசி (Smart Phone), தகவல் தொழில்நுட்ப நுகர்வுப் பொருட்கள் (IT Consumables) மற்றும் அனைத்து வலையமைப்பு சார்ந்த கருவிகளை (Network Devices) மலிவான விலையில் கொள்முதல் செய்து பல துறைகளுக்கும் வழங்கி வருகிறது.

மேலும், எல்காட் நிறுவனம் இணைய நெறி முறை சார்ந்த ஒளிப்படக் கண்காணிப்புக் கருவி (IP Camera Surveillance System) மற்றும் சிறப்புப் பொருட்களான ஊர்தி கண்காணிப்பு முறை (Vehicle Monitoring System), தொலை மருத்துவ

உபகரணங்கள் (Telemedicine Equipments) முதலியவற்றைக் கொள்முதல் செய்து வழங்கி வருகிறது.

எல்காட் நிறுவனம், அனைத்துத் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த உற்பத்திப் பொருட்களை முக்கிய அரசுத் துறைகளான வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நில அளவை மற்றும் நிலத்தீர்வைத் துறை, பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை, போக்குவரத்துத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வனத்துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, வேளாண்மைத் துறை, பள்ளிக் கல்வித் துறை, உயர்கல்வித் துறை, வணிகவரி மற்றும் பதிவுத் துறை, மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், பெருநகர சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் தமிழகத்திலுள்ள அனைத்து நீதி மன்றங்கள், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை போன்ற நிறுவனங்களுக்கு வழங்கி வருகிறது.

## 2.7 மடிக்கணினி வழங்கும் திட்டம்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் கணினித் திறனை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் தமிழக அரசு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 15.09.2011-இல் தொடங்கி வைக்கப்பட்டது.

முதல் கட்டமாக 8,98,866 மடிக்கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு 2011-12 ஆம் ஆண்டிற்கு வழங்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக 2012-13-ஆம் ஆண்டில் 7,56,000 மடிக்கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. மூன்றாம் கட்டமாக, 2013-14ஆம் ஆண்டில் 5,65,000 மடிக்கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

நான்கு மற்றும் ஐந்தாம் கட்டங்களாக (2014-15 மற்றும் 2015-16) 10,16,028 மடிக்கணினிகள் (நான்காம் கட்டமாக 4,96,999 மடிக்கணினிகள் மற்றும்

ஐந்தாம் கட்டமாக 5,19,029 மடிக்கணினிகள்) கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

ஆறாம் கட்டமாக (2016-17), 20,210 மடிக்கணினிகள் 2015-2016-ஆம் ஆண்டுக்கான கொள்முதலில் மீதம் இருந்த மடிக்கணினிகளிலிருந்து வழங்கப்பட்டுள்ளன மற்றும் தேவை பட்டியலில் 5.16 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் பணி ஜூலை மாதம் 2017 முதல் தொடங்கும்.

## 2.8 மின் ஆளுமைத் துறை

மின்னாளுமை திட்டங்கள் வாயிலாக, அரசுத் துறைகளின் சேவைகளை திறம்படவும், வெளிப்படையாகவும் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி, விரைவாக வழங்கிட மென்பொருள் பயன்பாட்டுத் தீர்வுகளை எல்காட் நிறுவனத்தின் மின்னாளுமைத் துறை வழங்கி வருகிறது. இதுமட்டுமன்றி, எல்காட் நிறுவனமானது பல்வேறு அரசுத் துறைகளுக்காக, அத்துறையின் மென்பொருள் தேவைகளை ஆய்வுசெய்து,

தேர்ந்தெடுக்கப்பட்ட மென்பொருள் நிறுவனங்கள் மூலமாக வெற்றிகரமாக திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மேலும், அரசுத்துறைகளுக்கு பயன்பாட்டு மென்பொருளை இயக்குவதற்கு ஏதுவாக வசதி மேலாண்மை சேவையைத் தேர்ந்தெடுக்கப்பட்ட மென்பொருள் நிறுவனங்கள் மூலமாக வழங்கி வருகிறது.

இதுவரை எல்காட் நிறுவனத்தின் மின் ஆளுமைத் துறை வாயிலாக செயல்படுத்தப்பட்ட முக்கிய திட்டங்கள் சில பின்வருமாறு :-

1. இணையவழி மின் தூக்கி உரிம மேலாண்மை அமைப்பு – மின் ஆய்வகத் துறை.

2. மாநில திறன் வளர்ச்சி கழகத்திற்காக – திறன் பதிவு வலை பக்கம்.

   இதன் மூலம் 250-க்கும் மேற்பட்ட பயிற்சியாளர்களிடம் இணையவழியில் பதிவு செய்து மாணவர்கள் பயிற்சி மேற்கொள்ளலாம். மேலும் தனியார்

நிறுவனங்கள் இந்த வலைதளம் மூலம் திறன் வளங்களை கண்டறியலாம்.

3. தொழிலாளர் பாதுகாப்பு மற்றும் சுகாதார துறைக்காக (DISH) ஒரு வலைதளம் உருவாக்கப்பட்டது. இதன் மூலம் தொழிற்சாலை உரிமம் வழங்கப்படுகிறது.

4. நகர மற்றும் ஊரக வளர்ச்சி அமைப்பு இயக்குநரகம் (DTCP) - கட்டட திட்ட ஆய்வு மற்றும் ஒப்புதல் அமைப்பு (தானியங்கி) என்னும் மின்னணு தீர்வு வழங்கப்பட்டது. இது நகர ஊரக அமைப்பு, மாநகராட்சி மற்றும் ஊராட்சி விதிகளின் வளர்ச்சி, கட்டுபாடு, ஒழுங்குமுறை அளவுருக்களை சரிபார்க்கிறது. இத்திட்டமானது செப்டம்பர் 2016-லிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 2.8.1 அரசுத் துறைகளுக்காக உருவாக்கப்பட்ட சில வலை தளங்கள்

தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் அரசுத் துறைகளுக்காக உருவாக்கப்பட்ட சில முக்கியமான வலைதளங்கள் பின்வருமாறு :-

- பள்ளிக்கரணை சதுப்பு நில பாதுகாப்புக் குழுமம்
- தமிழ்நாடு வனத்துறை
- தமிழ்நாடு தோட்டக்கலைத் துறை
- நிதித் (BC) துறை
- தமிழ்நாடு கட்டுமான வளர்ச்சி வாரியம்
- ஆதிதிராவிடர் நல வாரியம்

### 2.8.2 நிரந்தர பதிவு மையங்கள் (PECs)

தமிழ்நாட்டில் நிரந்தர பதிவு மையங்களை நிறுவி ஆதார் பதிவு மற்றும் அதன் தொடர்புடைய சேவைகளை வழங்கிட, இந்திய அரசின் தனித்துவ அடையாள ஆணைய அமைப்பானது (UIDAI), தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தை பதிவு முகமையாக நியமித்துள்ளது. இதுவரை 215 நிரந்தர பதிவு மையங்களை தமிழ்நாடு மின்னணு நிறுவனம்

பின்வரும் இடங்களில் நிறுவி சேவைகளை 03.10.2016- லிருந்து வழங்கி வருகிறது : -

- மாவட்ட ஆட்சியரகம் - 32
- சென்னை தவிர மாநகராட்சித் தலைமையகங்கள் - 11
- நகராட்சி அலுவலகம் - 124
- பேரூராட்சி அலுவலகம் – 2
- வருவாய்க் கோட்ட அலுவலகம் - 1

15.06.2017 வரை பதிவாகியுள்ள ஆதார் பதிவு எண்ணிக்கை – 7,07,987 ( நிகழ்நிலை (online) மற்றும் அகல்நிலை (offline)).

## 2.9 தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு

தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு, மாநிலத்தின் மின்னாளுமை மற்றும் இதர தகவல் தொழில்நுட்பம் சார்ந்த முயற்சிகளுக்கு முதுகெலும்பாகத் திகழ்கிறது. தமிழகத்தின் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பில் தமிழ்நாடு மாநில தரவு மையம், தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு, மேகக் கணினியம், இணைய வசதி, தமிழ்நாடு பேரிடர்

மீட்பு மையம், தேசிய அறிவுசார் வலையமைப்பு போன்றவை அடங்கும்.

இந்தியாவில், மாநிலத் தரவு மையம், மேகக் கணினியம் மற்றும் மாநில பெரும்பரப்பு வலையமைப்பு ஆகியவற்றை வெற்றிகரமாகச் செயல்படுத்திய ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

பல்வேறு அரசுத்துறைகளுக்கு தடையில்லா இணைய சேவைகளை வழங்க ஏதுவாக பின்வரும் தகவல் தொழில்நுட்பவியல் உட்கட்டமைப்பு தமிழகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது :-

- தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு
    - செங்குத்து இணைப்பு
    - கிடைமட்ட இணைப்பு
    - பதிலி இணைப்பு
- தேசிய அறிவுத்திறன் வலையமைப்பு
- அகன்ற அலைவரிசை இணைப்பு / குத்தகை வாயிலான இணைய இணைப்பு
- தமிழ்நாடு மாநில தரவு மையம்
- மூலக்கணினி பண்ணை
- பேரிடர் மீட்பு மையம் மற்றும் அருகாமை பேரிடர் மீட்பு மையம்

- மாநிலத் தரவு மையத்தில் மேகக் கணினிய அமைப்பு
- மின்னஞ்சல் தீர்வு

### 2.9.1 தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு (Tamil Nadu State Wide Area Network)

மாநில பெரும்பரப்பு வலையமைப்பு, தேசிய மின்னாளுமைத் திட்டத்தின் கீழ் ஒரு முக்கிய மின்னாளுமை கட்டமைப்பாகக் கண்டறியப் பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் முதல் கட்டமானது (01.12.2007 – 30.11.2012) மாநில மற்றும் மத்திய அரசுகளால் ரூ.140.25 கோடி திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டில் (மத்திய அரசு பங்களிப்பு ரூ.55.73 கோடி, மாநில அரசு பங்களிப்பு ரூ.84.52 கோடி) ஏற்படுத்தப்பட்ட ஒரு பகிர்வு திட்டம் ஆகும். தமிழ்நாடு மாநில பெரும் பரப்புவலையமைப்பு - இரண்டாம் கட்டத்திற்காக (09.09.2013 – 08.09.2016) ரூ.74.69 கோடி மதிப்பீட்டு நிதி முழுவதும் மாநில நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு இடைக்காலச் செயல்பாட்டில் உள்ளது.

**(அ) தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு - செங்குத்து இணைப்பு (TNSWAN – Vertical Connectivity)**

தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பில் 708 இருப்பு முனைகள், (POPs) தலைமைச் செயலகம், ராஜ்பவன், தமிழ்நாடு காவல் துறை இயக்குனர் அலுவலகம், சென்னை மாநகர காவல் ஆணையர் அலுவலகம், பெருநகர சென்னை மாநகராட்சி, பள்ளிக்கல்வி இயக்குனரகம், மருத்துவக்கல்வி இயக்குனரகம், எழிலகம், பனகல் மாளிகை மற்றும் குறளகம் போன்ற அரசு அலுவலகங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், வருவாய்த்துறை அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் இந்த வலையமைப்பின் வாயிலாக அரசுத் துறைகளுக்கு குரல், தரவு மற்றும் காணொலி போன்ற சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வலையமைப்பு

மூலம் அனைத்து துறைகளுக்கும், வெளிப் படையாகவும் திறன்மிகு முறையிலும், பாதுகாப்பான இணைப்பு வழங்கப்பட்டு, இதன் மூலம் அரசுத் துறைகள் மாநிலத் தரவு மையத்தில் இடம் பெற்றுள்ள மூலக்கணினிகளை அணுகி மக்களுக்கான சேவைகளை வழங்க ஏதுவாகிறது. தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் BOOT (Build, Own, Operate & Transfer) செயற்பாட்டின் முதற்கட்டமானது 30.11.2012 அன்று நிறைவு பெற்றது. இவ்வலையமைப்பின் மூன்றாண்டுகளுக்கான இரண்டாம் கட்ட செயல்பாடு 09.09.2013 அன்று ஆரம்பிக்கப்பட்டு 08.09.2016 அன்று நிறைவடைந்துள்ளது. தற்போது இடைக்கால செயல்பாட்டில் உள்ளது. 24X7 சேவை நிலை ஒப்பந்த அடிப்படையில் இத்திட்டத்தின் செங்குத்து இணைப்பு செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் வாயிலாக அரசு துறைகளுக்கு பின் வரும் சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

1. பாதுகாப்பான அக இணைய சேவைகள்

2. பாதுகாப்பான இணையசேவைகள்

3. நெருங்கிய பயனர் குழு குரல் சேவைகள்

4. காணொலிக் காட்சி சேவைகள்

மத்திய அரசின் நெறிமுறைப்படி தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு மற்றும் தேசிய அறிவுத்திறன் வலையமைப்பு மாவட்ட தலைமையகங்களில் ஒருங்கிணைக்கப்-பட்டுள்ளது. இதன்மூலம் மாவட்ட தலைநகரங்களுக்கான அலைவரிசை இணைப்பு 34 Mbps/ 100 Mbps/ 1 Gbps என்ற அளவில் தேவைக்கேற்ப மேம்படுத்தப் பட்டுள்ளது.

**(ஆ) தமிழ்நாடு பெரும் பரப்பு வலையமைப்பு - கிடைமட்ட இணைப்பு (TNSWAN – Horizontal Connectivity)**

தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் தரவேற்றம் செய்யப்பட்டுள்ள அரசுத் துறைகள் தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் இருப்பு முனைகள் மூலம் இணைக்கப்பட்டு அக இணைய (Intranet) வசதியைப் பெற்றுள்ளன. அக இணைய சேவைகளான குரல், தரவு, இணையம் மற்றும்

வீடியோ கலந்துரையாடல் போன்றவைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் இருப்பு முனைகள் வாயிலாக கிடைமட்ட இணைப்பும் அரசுத் துறைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இதுவரை கிடைமட்ட இணைப்பு வணிகவரித் துறை, தமிழ்நாடு குடி நீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம், தமிழ்நாடு சுகாதார அமைப்புத் திட்டம், கருவூலம் மற்றும் கணக்குத் துறை, பதிவுத் துறை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, வனத்துறை, போக்குவரத்துத் துறை, தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, மாநில சுகாதாரக் குழுமம், தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், நில அளவை மற்றும் நிலத்தீர்வைத் துறை, தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் உள்ளிட்ட, 5000-க்கும் மேற்பட்ட அரசு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**(இ) பதிலி இணைப்பு (Redundant Connectivity)**

தமிழ்நாடு பெரும் பரப்பு வலையமைப்பின்

செங்குத்து இணைப்பானது NKN / BSNL நிறுவனம் வழங்கும் அலைவரிசை வாயிலாக மாவட்ட ஆட்சியரகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், வருவாய் கோட்ட அலுவலகங்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்களுக்கு வழங்கப்படுகிறது. இவ்வலுவலகங்களுக்கு தடையற்ற இணைப்பினை வழங்கும் பொருட்டு, பதிலி இணைப்பாக 2 Mbps MPLS – VPN (1:1) இணைப்பு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை, 210 பதிலி இணைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### 2.9.2 தேசிய அறிவுத்திறன் வலையமைப்பு (National Knowledge Network -NKN)

தேசிய அறிவுத்திறன் வலையமைப்பு, மத்திய அரசு மூலம் நிறுவப்பட்ட ஒரு தேசிய அளவிலான அதிவேக வலையமைப்பாகும். தேசிய அறிவுத் திறன் வலையமைப்பு, விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், மருத்துவர்கள், அறிஞர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் இந்திய கல்வி நிறுவனங்களுடனும் மற்றும் உலகளாவிய அறிவியல் சமுதாயத்துடனும் இந்திய மற்றும் உலகளாவிய கல்வி

நிறுவனங்களுடன் இணைந்து, மனித வள மேம்பாட்டிற்காக செயல்படுவதற்கான ஒரு பொது தளத்தினை (common platform) வழங்குகிறது.

இந்த வலையமைப்பிற்கான அலைவரிசை, அரசு நிறுவனங்களான பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட், பவர் கிரிட் கார்ப்பரேசன் ஆப் இந்தியா லிமிடெட் மற்றும் ரயில்டெல் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த வலையமைப்பு தேசிய அளவில் தேசிய மின் ஆளுமை திட்டங்கள் செயல்படுவதற்கான தளமாக விளங்குகிறது. இந்த வலையமைப்பு வினாடிக்கு 2.5/10 Gigabits தொடங்கி, படிப்படியாக 40/100 Gigabits வரை அதிவேக இணைப்பு கொடுக்க வல்லது. 1 Gbps வேகத்துடன் கூடிய இரண்டு 100 Mbps இணைய இணைப்புகள், தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பிலும் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்திலும் நிறுவப்பட்டு உபயோகத்தில் உள்ளன.

இந்த தேசிய அறிவுத் திறன் வலையமைப்பு மூலம் மாநில பெரும்பரப்பு வலையமைப்பு மற்றும் மாநிலத் தரவு மைய பயனாளிகள் தேசிய அளவில்

ஏற்றம் செய்யப்பட்டுள்ள பயன்பாடுகளை (applications) அதிவேகமாக அணுக இயலும். ஏற்றம் செய்யப்பட்ட பயன்பாடுகளை தேசிய அறிவுத் திறன் வலையமைப்பு (National Knowledge Network) மூலம் ஏற்கனவே இருந்ததை விட பலமடங்கு அதிகமான இணைய வேகத்தில் பெற முடியும்.

### 2.9.3 இணைய குத்தகை இணைப்பு (Internet leased line) மற்றும் (பல்நெறி முறை அடையாள நிலைமாற்றி (Multi Protocol Label Switching (MPLS)) இணைப்பு

அதிக அளவிலான, மாறும் தரவுகளை கையாளும் அரசு துறைகளுக்கு 1 Mbps முதல் 100 Mbps வேகத்தில் இணைய குத்தகை இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. தற்போது குடிநீர் வாரியம், பெருநகர சென்னை மாநகராட்சி, ஊரக வளர்ச்சி இயக்குநரகம், தொல்லியல் துறை மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரியம் ஆகிய துறைகளுக்கு இணைய குத்தகை இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது.

MPLS இணைப்பானது 256 Kbps முதல் 8 Mbps


வரையான வேகத்தில் ஆர இணைப்பாகவும் மற்றும் 2 Mbps முதல் 100 Mbps வரையான வேகத்தில் மைய இணைப்பாகவும் வழங்கப்படுகிறது. MPLS இணைப்பானது தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் பதிலி இணைப்பாகவும் மற்றும் வணிகவரித் துறை, கருவூலம் மற்றும் கணக்குத் துறை, தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் போன்ற பல்வேறு அரசுத் துறைகளுக்கு நேரடி இணைப்பாகவும் வழங்கப்பட்டு வருகிறது.

**2.9.4 தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் (Tamil Nadu State Data Centre- TNSDC)**

**அ) தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் -1**

மின் ஆளுமை திட்டப் பணிகளை செயல்படுத்த முதுகெலும்பாக அமையப் பெற்ற தொழில்நுட்ப உட் கட்டமைப்புகளுள் தமிழ்நாடு மாநிலத் தரவு மையமும் ஒன்றாகும். இத்திட்டமானது மாநில மற்றும் மத்திய அரசிற்கு இடையேயான ரூ.60.80 கோடி மதிப்பீட்டில் (மத்திய அரசு பங்களிப்பு ரூ. 55.80 கோடி, மாநில அரசு பங்களிப்பு ரூ. 5 கோடி)

அமையப் பெற்ற ஒரு பகிர்வுத் திட்டம். இத்திட்டம் 1.8.2011 முதல் செயல்பாட்டில் உள்ளது. தமிழ்நாடு, இந்தியாவிலேயே மாநிலத் தரவு மையத்தின் பணிகள் மற்றும் பாதுகாப்பு மேலாண்மைக்காக ISO சான்றிதழைப் பெற்ற முதல் மாநிலமாகும். இது மாநிலத்தின் தரவு மையத்தின் ஒரு முக்கிய மைல்கல்லாகும். அரசுத் துறைகள் தங்களது மென்பொருள்களை பதிவேற்றம் செய்ய ஒரு பாதுகாப்பான உட்கட்டமைப்பை மாநிலத் தரவு மையம் வழங்கி வருகிறது. தற்போது தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் மேம்படுத்தப்பட்ட ISO / IEC 20000-1:2011 மற்றும் ISO / IEC 27001: 2013 தரச் சான்றிதழ்களைப் பெற்றுள்ளது.




படம் 9

தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் 24 X 7 மணி நேர சேவை உறுதி உடன்பாட்டுடன் பெருங்குடி எல்காட் வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த பாதுகாப்பான மாநிலத் தரவு மையத்தில் அரசுத் துறைகள் தங்கள் மின் ஆளுமை பயன்பாடுகளை ஏற்றம் செய்து கொள்ள 63 அடுக்குகள் கொண்டு அமைக்கப்பட்டு, தொடர்ச்சியாக 6-ஆம் ஆண்டாக வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது.



படம் 10: தமிழ்நாடு மாநில தரவு மையம் - 1

25-க்கும் மேற்பட்ட அரசுத் துறைகளின் 81 மின்னாளுமை பயன்பாடுகள் இத்தரவு மையத்தின் முதல் கட்டத்தில் ஏற்றம் செய்யப்பட்டு சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில் செயல்படும் சில அரசு துறைகளின் பயன்பாடுகள் பின்வருமாறு :-

i) தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டத்தின் எச்.எம்.எஸ் (HMS) மற்றும் எச்.எம்.ஐ.எஸ் ( HMIS)
ii) மாநில சேவைகள் விநியோக நுழைவாயில் திட்டத்தின் மின்

ஆளுமை மற்றும் மின் மாவட்ட பயன்பாடுகள்

iii) குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு வலையமைப்புத் திட்டம் (CCTNS)

iv) பதிவுத் துறையின் மின்னணு கட்டணத் திட்டம்

v) பெருநகர சென்னை மாநகராட்சியின் நிறுவன வளத்திட்டமிடல்

vi) சென்னை மெட்ரோ ரயிலின் ஆவண மேலாண்மைத் திட்டம்

vii) டாக்டர் எம்.ஜி. ஆர் பல்கலைகழகத்தின் கல்லூரி மேலாண்மைத் திட்டம்

viii) விலையில்லா மின் விசிறி, மிக்ஸி, கிரைண்டர் மற்றும் விலையில்லா மடிக்கணினித் திட்டம் மற்றும் பல

**ஆ) தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் - 2**

தற்போது தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் - 1, தன் முழுமையான அதிகபட்ச இடவசதி மற்றும் உட்கட்டமைப்பு கொள்ளளவில் 100 சதவீதத்தை பயன்பாட்டில் நிறைவு செய்துள்ளது. எனவே, பெருங்குடியில் புதிய கட்டடம் அமைத்து

தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் – 2–ஐ ரூ.40 கோடி செலவில் செயல்படுத்த அரசின் ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. கட்டட கட்டுமானப் பணி முடிவுறும் நிலையில் உள்ளது. தரவு மையத்தின் நிறுவல், வழங்கல், ஏற்படுத்துதல், செயல்பாடு மற்றும் மேலாண்மைக்கான தரவு மைய இயக்கக நிறுவனத்தை தேர்ந்தெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு மாநிலத் தரவு மையம்-2 ஜனவரி 2018-க்குள் பயன்பாட்டிற்கு வரவுள்ளது.



**படம் 11: தமிழ் நாடு மாநிலத் தரவு மையம் - 2**

### 2.9.5 மூலக்கணினி பண்ணை (Server Farm)

தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில், அரசுத் துறைகள் தங்கள் பயன்பாட்டு மென்பொருளை

ஏற்றம் செய்வதற்கு ஏதுவாக, துறைகளின் பொதுவான பயன்பாட்டிற்காக தரவு எற்ற நடுநிலைமை, பயர்வால் மற்றும் ஆன்டிவைரஸ் போன்ற வசதிகளுடன், தேவையான வன்பொருள், மென்பொருள், சோதனைக் கருவிகள் கொண்ட கணினி சர்வர் பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசுத் துறைகள் தங்கள் பயன்பாட்டு மென்பொருளை தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில் ஏற்றம் செய்வதற்கு முன் அம்மென்பொருளை பாதிப்பு மதிப்பீடு மற்றும் ஊடுருவல் மதிப்பீட்டு சோதனைகளுக்கு உட்படுத்த இயலும்.

**2.9.6 பேரிடர் மீட்பு மையம் (Disaster Recovery Centre – DRC) மற்றும் அருகாமை பேரிடர் மீட்பு மையம் (NLDRC)**

**அ) பேரிடர் மீட்பு மையம் - திருச்சி (DRC-TRICHY)**

தமிழ்நாடு மாநிலத் தரவு மையம், அரசுத் துறைகள் தங்கள் பயன்பாட்டுகளை ஒரு பொதுவான, மேம்படுத்தப்பட்ட, பாதுகாக்கப்பட்ட மற்றும்

கட்டுப்படுத்தப்பட்ட கட்டமைப்பில் ஏற்றம் செய்து ஒருங்கிணைப்பாக நடைமுறைப்படுத்த உதவி கரமாக உள்ளது. எனினும், சுனாமி, பூகம்பம், வெள்ளம் போன்ற இயற்கைப் பேரழிவுகள் மாநிலத் தரவு மையங்களின் பாதுகாப்பிற்கு பெரும் சவாலாக உள்ளன. எனவே அரசுத் துறைகளின் பணிகள் மற்றும் மின் ஆளுமைப் பயன்பாடுகள் தடையின்றி தொடர்ச்சியாக நடைபெற மாநிலத் தரவு மையத்திற்கு தரவு மீட்பிற்காக ஒரு பேரிடர் தரவு மீட்பு மையம் அமைப்பது அத்தியாவசியமாகிறது. பேரிடர் மீட்பு மையம் அமைக்கும் பொறுப்பு தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது தமிழ்நாடு மின்னணு நிறுவனம், திருச்சி ELCOSEZல் பேரிடர் மீட்பு மையத்திற்கான வழங்கல், நிறுவல், கட்டமைப்பு, சோதனை, நடவடிக்கைகள் மற்றும் நிர்வகிப்பினை மேற்கொள்வதற்கான நிறுவனத்தினை ஒப்பந்தப் புள்ளி மூலம் ரூ.53.28 கோடியில் தெரிவு செய்து ஆணைகள் வழங்கியுள்ளது. தகவல் தொழில்நுட்ப

மற்றும் தகவல் தொழில்நுட்பம் அல்லாத உட்கட்டமைப்புப் பணிகள் (IT & Non IT) நடைபெற்று வருகின்றன.

**ஆ) தேசியத் தரவு மையம் - புனே (NDC-PUNE)**

தேசிய பேரிடர் மீட்புத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தின் தரவு மீட்பு மையமாக புனேயில் உள்ள தேசியத் தரவு மையம் தெரிவு செய்யப்பட்டு, தேசிய அறிவுத் திறன் வலையமைப்பு மூலம் இணைக்கப்பட்டுள்ளதன் மூலம் புனேவில் உள்ள தேசியத் தரவு மையத்தின் பேரிடர் மீட்பு மையமாக இயங்கி வருகிறது. குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு வலையமைப்பு திட்டம் மற்றும் மாநில சுகாதார தரவு வள மையத்தின் பேரிடர் மீட்பு வசதிகள் ஆகியவை புனேயில் உள்ள தேசிய தரவு மையத்தில் செயல்பட்டு வருகின்றன.

**இ) அருகாமை பேரிடர் மீட்பு மையம் ( Near Line Disaster Recovery Centre – NLDRC)**

உடனுக்குடன் தரவுகளை மீட்பதற்காக, அருகாமை தரவு மீட்பின் தேவைகளைக் கருத்தில்

கொண்டு, தமிழ்நாடு மின்னணு நிறுவனம் சென்னையில் அமையப் பெற்ற BSNL தரவு மையத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இதற்குத் தேவையான பொதுத் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் BSNL தரவு மையத்தில் எல்காட் நிறுவனத்தால் நிறுவப்பட்டுள்ளன. அரசுத் துறைகளின் தேவைகளுக்கேற்ப சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**2.9.7 மாநிலத் தரவு மையத்தில் மேகக் கணினிய உட்கட்டமைப்பு (Cloud Infrastructure at Tamil Nadu State Data Centre)**

தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தின் சிறந்த மற்றும் உகந்த கணினி உட்கட்டமைப்புப் பயன்பாட்டிற்கும் மற்றும் ஒரே உட்கட்டமைப்பைப் பயன்படுத்தி பல பயன்பாடுகளை செயல்படுத்தவும், தரவு மையத்தில் மேகக் கணினிய அமைப்பு அத்தியாவசியமாகிறது. இந்த மேகக் கணினிய தொழில்நுட்பத்தால் தொழில்நுட்ப வளங்களின் தொகுப்பு ஏற்படுத்தப்பட்டு அதன் மூலம் மின் சக்தி சேமிப்பு எற்படும்.

தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில் அமையப்பெற்ற உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டு C-DAC மற்றும் Sify நிறுவனங்களின் மூலம் மேகக் கணினியம் நிறுவப்பட்டுள்ளது. தற்போது 22 பயன்பாடுகள் பகிர்வு முறையில் வழங்கப்பட்டு வருகின்றன. மேகக் கணினிய சேவைகள் அரசுத் துறைகளின் தேவைகள் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன.



**படம் 12: தமிழ்நாடு மாநிலத் தரவு மையம்-1 ல் மேகக்கணினியம் அமைப்பு**

## 2.9.8 மின்னஞ்சல் தீர்வு

மின்னஞ்சல் தீர்வானது அரசின் மின்னணு சேவைகளின் பயன்பாட்டிற்கான அத்தியாவசியத் திட்டமாகும். தடையற்ற வலை

தொடர்பு, அரசுக் கோப்புகளின் சேமிப்பு மற்றும் காப்பக கட்டுப்பாடுகளை கருத்தில் கொண்டு, முழுமையான மின்னஞ்சல் தீர்வுத் திட்டமானது ஆரம்பிக்கப்பட்டு, "mail.tn.gov.in" என்ற இணைய முகவரியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**2.10 நிதிநிலை செயல்பாடு :-**

தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் அமைந்துள்ள தகவல் தொழில் நுட்பவியல் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட 99 வருடகால நிலக் குத்தகைக்கான வைப்புத் தொகைகள், கீழ்க்கண்ட விகிதங்களில் ஆண்டு வருமானமாக கணக்கில் கொள்ளப்படுகிறது.

1. முதல் ஆண்டு - 15 சதவிகிதம்
2. இரண்டாம் ஆண்டு - இல்லை
3. மூன்றாம் ஆண்டு - இல்லை
4. நான்காம் ஆண்டு முதல் 17ஆம் ஆண்டு வரை - ஆண்டொன்றுக்கு 5 சதவிகிதம்
5. மீதமுள்ள 15 சதவிகிதம் குத்தகைக்கால முடிவில் நிலக்குத்தகை பெற்ற தகவல் தொழில் நிறுவனங்களுக்கு திருப்பி அளிக்கப்படுகிறது.

2011-12 முதல் 2016-17 வரைக்கான எல்காட் நிறுவனத்தின் நிதிநிலை செயல்பாடு பின்வருமாறு:-

(ரூபாய் இலட்சங்களில்)

| | 2011-12 | 2012-13 | 2013-14 | 2014-15 | 2015-16 | 2016-17 தணிக்கை செய்யப்படாதது |
|---|---|---|---|---|---|---|
| வருவாய் | | | | | | |
| விற்பனை | 811.79 | 837.43 | 853.17 | 891.51 | 930.82 | 863.16 |
| சேவைகள் | 445.34 | 621.49 | 907.22 | 1432.75 | 842.52 | 728.16 |
| இதர | 2542.59 | 2897.36 | 3400.54 | 4155.64 | 10157.63 | 5792.09 |
| **மொத்த வருமானம்** | **3799.72** | **4356.28** | **5160.93** | **6479.90** | **11930.97** | **7383.41** |
| | | | | | | |
| **செலவுகள்** | | | | | | |
| நிர்வாகம் | 1235.27 | 1326.47 | 1508.90 | 1686.75 | 1712.48 | 1668.00 |
| தேய்மானம் | 318.25 | 241.86 | 326.68 | 409.92 | 552.27 | 552.27 |
| அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் மீதான வட்டி | 872.38 | 809.45 | 1111.16 | 1134.52 | 1034.55 | 788.70 |
| இதர | 828.88 | 919.58 | 550.28 | 625.65 | 1107.69 | 1092.84 |
| **மொத்த செலவுகள்** | **3254.78** | **3297.36** | **3497.02** | **3856.84** | **4406.99** | **4101.81** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **இலாபம்** | **544.94** | **1058.92** | **1663.91** | **2623.06** | **7523.98** | **3281.60** |
| **அரசுக்கு செலுத்திய தொகை** | | | | | | |
| வட்டி / நியமனம் | 698.33 | 796.91 | 1109.29 | 1132.65 | 1032.69 | 786.84 |
| பங்காதாயம் | 0.00 | 0.00 | 777.92 | 777.92 | 1772.24 | * 0.00 |
| **அரசுக்கு செலுத்திய மொத்த தொகை** | **698.33** | **796.91** | **1887.21** | **1910.57** | **2804.93** | **786.84** |
| ***கணக்குகள் முடிவு செய்யப்பட்டவுடன் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்காதாயம் அறிவிக்கப்படும்.** | | | | | | |

# அத்தியாயம் - III

# மின் ஆளுமை ஆணையரகம் மற்றும் தமிழ்நாடு மின்ஆளுமை முகமை

## 3.1 முன்னுரை

"தமிழ்நாடு தொலை நோக்கு ஆவணம்-2023"-ல் குறிப்பிட்டுள்ளபடி, சிறப்பான நிர்வாகத்தை அளித்திடும் வகையில் தகவல் தொழில் நுட்பத்தை மின்னாளுமையில் செயல்படுத்துவதையும், இணையவழி சேவைகளை பொது மக்களுக்கு அவர்தம் இருப்பிடத்திலேயே வழங்குவதையும் மின் ஆளுமை ஆணையரகம் (Commissionerate of e-Governance) மற்றும் தமிழ்நாடு மின்ஆளுமை முகமை (Tamil Nadu e-Governance Agency) ஆகியவை முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளன.

மாநில அரசின் மின்ஆளுமை முயற்சிகள் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத் திட்டங்களை (ICT Projects) மாநிலம் முழுவதும் நடைமுறைப்படுத்தும் குறிக்கோளுடன் **மின்**

**ஆளுமை ஆணையரகம் (Commissionorate of e-Governance)** ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாநில அரசால் வழங்கப்படும் இணையவழி சேவைகளை இந்த ஆணையரகம் ஒருங்கிணைக்கும் பணியை செய்கிறது.

**தமிழ்நாடு மின்ஆளுமை முகமை (Tamil Nadu e-Governance Agency)**, மாநில அரசின் அனைத்து மின்ஆளுமை முயற்சிகளையும் செயல்படுத்தும் முகமையாக (Nodal Agency) இருந்து அரசுக்கு ஆலோசனையும் வழங்கி வருகிறது. சாமான்ய மக்களுக்கு அரசின் சேவைகள் முடிந்த அளவிற்கு, நேர்த்தியாகவும், வெளிப்படையாகவும் கிடைக்கப்பெற வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு தமிழ்நாடு மின்ஆளுமை முகமை மின்ஆளுமைத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மின் மாவட்டம், கிராம மற்றும் நகர்ப்புற இ-சேவை மையங்கள், தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் மற்றும் அவை சார்ந்த உபகரணங்களின் (Information and Communication Technology) உபயோகத்திற்கான திறன் மேம்பாடு

(Capacity building), புவி சார் தகவல் அமைப்பு (Geographical Information System), மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையம் (State Resident Data Hub), மாநில சேவைகள் விநியோக நுழைவாயில் (State Services Delivery Gateway) ஆகியவை தமிழ்நாடு மின்ஆளுமை முகமையால் செயல்படுத்தப்பட்டு வரும் சில முக்கியமான திட்டங்களாகும்.


## 3.2 நிறுவன வடிவமைப்பு

மாநில அளவிலான மின்ஆளுமை நடவடிக்கைக்கான நிறுவன வடிவமைப்பு பின்வருமாறு:

### 3.2.1 மாநில உயர்மட்டக் குழு

தேசிய மின்ஆளுமைத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் மின்ஆளுமைத் திட்டங்கள் அனைத்தும் தலைமைச் செயலாளரை தலைவராகக் கொண்டு உருவாக்கப்பட்ட உயர்மட்டக் குழுவால் வழிநடத்தப்பட்டு வருகின்றன. இந்த உயர்மட்டக் குழு,

மாநில மின்ஆளுமை முயற்சிகள் மற்றும் குறிக்கோள் திட்டங்களுக்கான வழிகாட்டுதல்களை வழங்குவதுடன், துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பினையும் உறுதிசெய்கிறது. மாநில மின்ஆளுமைக் குழுவின் உதவியுடன் மின்ஆளுமை முயற்சிகளின் தரப்படுத்தல் மற்றும் நிலைத்தன்மையை திட்ட மேலாண்மை மூலமாக வழங்கிவருகிறது.




**படம் 13: உயர்மட்டக் குழு (தமிழ்நாடு மின்ஆளுமை முகமை)**

### 3.2.2 மின் ஆளுமை ஆணையரகம்

தகவல் தொடர்பு தொழில்நுட்பம் சார்ந்த திட்டங்களை பல்வேறு துறைகள் நடைமுறைப்படுத்தி வருவதால், ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பு சூழலை உருவாக்குவதற்கும், அதற்கான வழிகாட்டுதல் மற்றும் தரப்படுத்துதலுக்கும் மின்னாளுமைத் திட்டங்களுக்கு ஒருங்கிணைப்புத் துறை / முகமையாகச் செயல்படும் அமைப்புகளை வலுப்படுத்துதல் அவசியமாகிறது. இப்பணி மின்ஆளுமை ஆணையரகத்தால் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

இதனைப் பூர்த்தி செய்யும் வகையில், அரசு 2 இணை இயக்குநர்கள் (தொழில்நுட்பம்), 5 முதுநிலை கணினி பகுப்பாய்வாளர்கள் / முதுநிலை கணினி பொறியாளர்கள், 20 கணினி பகுப்பாய்வாளர்கள் / கணினி பொறியாளர்கள், 60 உதவி கணினி பகுப்பாய்வாளர்கள் / உதவி கணினி பொறியாளர்கள் கொண்ட தொழில்நுட்பப் பிரிவையும், மேலும் நிர்வாகப் பிரிவின் கீழ்

1 துணை இயக்குநர் (நிர்வாகம்) (தற்காலிகமாக இணை இயக்குநராக தரம் உயர்த்தப்பட்டுள்ளது), 1 கண்காணிப்பாளர், 1 கணக்கு அலுவலர், 2 உதவியாளர்கள், 2 இளநிலை உதவியாளர்கள், 2 அலுவலக உதவியாளர்கள், 2 துப்புரவுப் பணியாளர்கள் ஆகியோரைக் கொண்ட தகவல் தொழில்நுட்பப் பணியாளர் தொகுப்பு (IT Cadre) உருவாக்கப்பட்டுள்ளது. இத்தொழில் நுட்பப்பிரிவிற்கு ஊட்டுப்பதவியாக (feeder category) உதவி கணினிப் பகுப்பாய்வாளர்கள் / உதவி கணினிப் பொறியாளர்கள் பணியிடங்கள் அமையும்.

அதனைத் தொடர்ந்து, "தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பப் பணி விதிகளுக்கு" ஒப்புதல் வழங்கி அரசாணை (நிலை) எண்.9, தகவல் தொழில்நுட்பவியல் (நிர்வாகம்.1) துறை, நாள் 14.6.2017-இல் அரசாணைகள் வெளியிடப் பட்டுள்ளன. இப்பணிவிதிகளின் அடிப்படையில், பணியிடங்களை நிரப்பத் தேவையான அனைத்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### 3.2.3 தமிழ்நாடு மின்ஆளுமை முகமை


தமிழ்நாடு மின்ஆளுமை முகமையானது, தமிழ்நாடு சங்கங்களுக்கான பதிவாளரின் ஒழுங்குமுறை விதிகளுக்குட்பட்டு பதிவு செய்யப்பட்ட தன்னாட்சி பெற்ற சங்கமாகும். தமிழ்நாடு மின்ஆளுமை முகமையின் ஆளுகைக் குழுவானது 14 உறுப்பினர்களை உள்ளடக்கியது. இக்குழு முதன்மைச் செயலாளர், தகவல் தொழில் நுட்பவியல் துறை அவர்களை தலைவராகவும், தமிழ் நாடு மின்ஆளுமை முகமையின் முதன்மைச் செயல் அலுவலர் அவர்களை உறுப்பினர் செயலராகவும், மாநில தகவலியல் அலுவலர், தேசிய தகவல் மையம், சென்னை அவர்களை தலைமை தொழில் நுட்ப அலுவலராகவும் மற்றும் கீழ்க்கண்ட 11 குறிக்கோள் திட்டத்துறைகளின் செயலாளர்களை உறுப்பினர் களாகவும் கொண்டு, தமிழ்நாடு மின் ஆளுமை

முகமையால் செயல்படுத்தப்படும் மின்ஆளுமை திட்டங்களுக்கு ஆலோசனைகள் வழங்கி குடிமக்களுக்கான சேவைகளை வழங்கி வருகிறது:-

1. நிதித்துறை
2. வணிக வரி மற்றும் பதிவுத் துறை
3. வேளாண்மைத் துறை
4. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை
5. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
6. ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை
7. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை
8. உள் துறை
9. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
10. கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை
11. பள்ளிக்கல்வித் துறை

### 3.2.4 நிறுவன அமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பப் பணியாளர் தொகுப்பு

பின்வரும் விளக்கப்படம் மின்ஆளுமை ஆணையரகம் மற்றும் தமிழ்நாடு மின்ஆளுமை முகமையின் நிறுவன அமைப்பினை விளக்குகிறது




**படம் 14: மின்னாளுமை ஆணையரகம்/ தமிழ்நாடு மின்ஆளுமை முகமையின் நிறுவன அமைப்பு**

## 3.2.5 மாநில மின் குறிக்கோள் குழு (SeMT)

மாநில மின் குறிக்கோள் குழு (State e-Governance Mission Team) ஒன்று தமிழ்நாடு மின்ஆளுமை முகமையில் செயல்பட்டு வருகிறது. இக்குழுவானது திட்ட மேலாண்மை, தொழில்நுட்ப

மேலாண்மை, நிதி மேலாண்மை மற்றும் மாற்று மேலாண்மை தொடர்புடைய தகவல் தொழில்நுட்ப ஆலோசகர்களைக் கொண்டதாகும். மாநில மின் குறிக்கோள் குழுவின் ஆலோசகர்கள் தேசிய மின்ஆளுமை திட்டத்தின்கீழ் செயல்பட்டுவரும் மின்ஆளுமை சிறப்பு நோக்குத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் அரசுத் துறைகளுக்கு உதவிக்கரம் நீட்டி வருகின்றனர். இந்த ஆலோசகர்கள், மாநில அரசுத் துறைகளுக்கு ஓர் ஆலோசனைக் குழுவாக செயல்பட்டு உதவி வருவதுடன், துறை சார்ந்த தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத் திட்டமிடலையும் (ICT Roadmap), விழிப்புணர்வினையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

### 3.2.6 மாவட்ட மின்ஆளுமை சங்கம் (DeGS)

அனைத்து மாவட்டங்களிலும் மின்ஆளுமைத் திட்டங்களைச் செயல்படுத்திட மாவட்ட மின்ஆளுமை சங்கங்களை (District e-Governance Societies) அமைத்திட வேண்டுமென அரசால் ஆணை

வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட மின்ஆளுமை சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சென்னை தவிர, அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட மின்ஆளுமைச் சங்கங்கள், அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவரின் தலைமையின் கீழ் இயங்கி வருகின்றன. சென்னையைப் பொறுத்தவரை, இச்சங்கம், சென்னை மாநகராட்சி ஆணையர் தலைமையில் இயங்கி வருகிறது. சேவைகளை வழங்கும் அனைத்து துறை சார்ந்த அதிகாரிகளும் இச்சங்கத்தின் உறுப்பினராவர். மாவட்ட அளவில், தகவல் தொடர்பு தொழில்நுட்பம் சார்ந்த திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பு மாவட்ட மின்ஆளுமை சங்கத்தினை சார்ந்ததாகும். மேலும், மாவட்ட அளவில் செயல்படுத்தப்படும் மின்ஆளுமைத் திட்டங்கள் மற்றும் அதன் செயல்பாடுகளை மேற்கொள்வதில் மாவட்ட மின்ஆளுமைச் சங்கம் முக்கிய பங்கு வகிக்கிறது.

மாவட்ட மின்ஆளுமைச்சங்கங்கள் (DeGS) நன்முறையில் இயங்கிட ஏதுவாக, அரசால் தலா

ரூபாய் பத்து இலட்சம் வீதம் ஆதார நிதி உதவியாக (seed money assistance) ஒவ்வொரு சங்கத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, சேவைகள் வழங்கல் மூலம் கிடைக்கப்பெறும் பங்கு வருவாயினை அச்சங்கங்களே பயன்படுத்திக் கொள்ளலாம்.

## 3.3 தமிழ்நாடு மின்ஆளுமை முகமையின் பல்வேறு திட்டங்கள்

### 3.3.1 மின் மாவட்டத் திட்டம் (e-District Programme)

மின்மாவட்டத் திட்டம், தேசிய மின்ஆளுமைத் திட்டத்தின் கீழ் செயல்பட்டுவரும் ஒரு மாநில குறிக்கோள் திட்டமாகும். இத்திட்டத்தின் குறிக்கோள், பொதுமக்கள் அதிக அளவில் பயன்படுத்தும் சேவைகளை தெரிவு செய்து, அவற்றை பெரும்பரப்பு வலையமைப்பு, மாநிலத் தரவு மையம் மற்றும் மாநில சேவைகள் விநியோக நுழைவாயில் (SWAN, SDC, and SSDG) போன்ற உட்கட்டமைப்புகளைக் கொண்டு, 'அரசு இ-சேவை மையங்கள்' மூலம் பொது மக்களுக்கு வழங்குவதாகும்.

மின்மாவட்டத் திட்டத்தினைச் செயலாக்கம் செய்திட மத்திய அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முன்னோடி மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த, பிற்படுத்தப் பட்டோர்/ மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர் மரபினர் நலத்துறை மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் செயல்படுத்தப்படும் கல்வி உதவித் தொகை திட்டங்களை, நிகழ்நிலையில் அந்தந்த கல்வி நிறுவனங்கள் மூலம் வழங்க மென்பொருள் உருவாக்கப்பட்டது. மேலும், வருவாய்த் துறையின் 5 சான்றிதழ் சேவைகள், சமூக நலத்துறையின் 7 சேவைகள் மற்றும் 7 ஓய்வூதிய திட்டங்கள் ஆகியவை மின்மாவட்ட மென்பொருள் தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. தேசிய தகவலியல் மையத்தின் உதவியுடன் முன்னோடி மின்மாவட்டங்களில், முறையே அரியலூர், கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, பெரம்பலூர், திருவாரூர் மற்றும் நீலகிரி ஆகிய 6 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. முன்னோடி மின்மாவட்டத் திட்டத்தின் வெற்றியினைத்

தொடர்ந்து மாநிலத்தில் மீதமுள்ள 26 மாவட்டங்களுக்கும் மின்மாவட்ட திட்டம் விரிவு செய்யப்பட்டது. தற்போதைய நிலையில் மின்மாவட்ட திட்டத்தின் கீழ் 49 சேவைகள் நிகழ்நிலையில் மின்மாவட்ட இணையதளம் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

மின்மாவட்டத் திட்டத்திற்கான திட்ட ஒருங்கிணைப்பாளர் தேர்வு செய்யப்பட்டு, பல்வேறு துறைகளை சார்ந்த 69 சேவைகள் கண்டறியப்பட்டு, அவற்றுள் தற்போது 48 சேவைகள் நிகழ்நிலையில் இ-சேவை இணையதளம் வழியாக வழங்கப்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள 21 சேவைகள் பயனர் ஏற்பு சோதனை / பாதுகாப்பு தணிக்கை நிலையில் உள்ளன. இவை தவிர அப்னா பொது சேவை மைய இணையதளம் வழியாக 68 சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆக மொத்தம் 165 சேவைகள் மின்மாவட்டத் திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வருகின்றன.

மின்மாவட்ட இணையதளம் மூலம் வழங்கப்படும் சேவைகள் பட்டியல்:-

| வ. எண் | அரசுத் துறைகள் | வழங்கப்படும் சேவைகளின் பெயர் |
|---|---|---|
| 1. | வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை | வருமானச் சான்றிதழ் |
| 2. | | பிறப்பிடச்சான்றிதழ் / இருப்பிடச் சான்றிதழ் |
| 3. | | சாதிச் சான்றிதழ் |
| 4. | | குடும்பத்தில் பட்டதாரி இல்லை என்பதற்கான சான்றிதழ் |
| 5. | | கணவனால் கைவிடப்பட்டவர் என்ற சான்றிதழ் |
| 6. | | கிராம பிறப்புச் சான்றிதழ் |
| 7. | | கிராம இறப்புச் சான்றிதழ் |
| 8. | | இந்திரா காந்தி தேசிய மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதிய திட்டம். |
| 9. | | இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டம் |
| 10. | | இந்திரா காந்தி தேசிய விதவைகள் ஓய்வூதியத் திட்டம் |
| 11. | | ஆதரவற்ற, கணவரால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம் |
| 12. | | ஆதரவற்ற விதவை ஓய்வூதியத் திட்டம் |

| | | |
|---|---|---|
| 13. | | மாற்றுத்திறனாளி ஓய்வூதியத் திட்டம் |
| 14. | | மணமாகாத பெண்கள் ஓய்வூதியத் திட்டம் |
| 15. | | தமிழ் நிலம் - 'அ' பதிவு |
| 16. | | தமிழ் நிலம் - சிட்டா |
| 17. | | தமிழ் நிலம் - முழுநில பட்டா பரிமாற்றம் |
| 18. | | தமிழ் நிலம் - கூட்டு பட்டா பரிமாற்றம் |
| 19. | | தமிழ் நிலம் - உட்பிரிவு |
| 20. | | குறைதீர் நாள் மனு |
| 21. | சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம் |
| 22. | | அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டம் |
| 23. | | ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண உதவித் திட்டம் |
| 24. | | டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம் |
| 25. | | டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண உதவித் திட்டம் |
| 26. | | முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் I |

| | | |
|---|---|---|
| 27. | | முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் II |
| 28. | உணவுப் பொருள் வழங்குதல் துறை | பொது விநியோகத் துறை அல்லாத நுகர்வோர் புகார்கள் |
| 29. | | பொது விநியோகத் துறை தொடர்பான புகார்கள் |
| 30. | பதிவுத்துறை | அகல்நிலை கட்டண முறை வழியாக விண்ணப்பித்தல் |
| 31. | | அகல்நிலை கட்டண செலுத்துசீட்டு அச்சிடுதல் |
| 32. | | நிகழ்நிலை திருமண முன்னேற்பாடு / ஆவணப்பதிவு |
| 33. | | முன்னேற்பாடு ஒப்புகை அச்சிடுதல் |
| 34. | போக்குவரத்துத் துறை | ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கான நியமனப் பதிவு |
| 35. | | கற்கும் உரிமம் பெறுவதற்கான நிகழ்நிலை விண்ணப்பம் |
| 36. | | கற்கும் உரிமம் பெறுவதற்கான நிகழ்நிலை மறு அச்சீடு |
| 37. | காவல் துறை | சமூக சேவை பதிவேடு நிலை |

| | | |
|---|---|---|
| 38. | | முதல் தகவல் அறிக்கை நிலை |
| 39. | | நிகழ்நிலை புகார் பதிவு செய்தல் |
| 40. | | புகார் நிலை அறிதல் |
| 41. | | வாகன சோதனை |
| 42. | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான பள்ளி மேற்படிப்பிற்கு மைய அரசின் கல்வி உதவித் திட்டம். |
| 43. | | பழங்குடியின மாணவர்களுக்கான பள்ளி மேற்படிப்பிற்கு மைய அரசின் கல்வி உதவித் திட்டம். |
| 44. | | பள்ளி மேற்படிப்பிற்கான மாநிலஅரசின் சிறப்புக் கல்வி உதவித் திட்டம். |
| 45. | | மேற்படிப்பிற்கான சிறப்பு கல்வி உதவித் திட்டம். |
| 46. | பிற்படுத்தப் பட்டோர், மிக பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மை யினர் நலத் துறை | பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் திட்டம். |
| 47. | | தொழிற்கல்வி மாணவர்களுக்கு நிதியுதவித் திட்டம். |
| 48. | | பட்டப்படிப்பிற்கான நிதியுதவித் திட்டம். |
| 49. | | பட்டயப்படிப்பிற்கான நிதியுதவித் திட்டம். |

**இ-சேவை இணையதளம் மூலம் வழங்கப்படும் சேவைகள் பட்டியல்:-**

| வ எண் | அரசுத்துறைகள் | வழங்கப்படும் சேவைகளின் பெயர் |
|---|---|---|
| 1 | கொதிகலன் இயக்குனரகம் | கொதிகலன் விதிகளின் கீழ் உரிமம் பதிவு செய்தல் |
| 2 | | கொதிகலன் விதிகளின் கீழ் உரிமம் புதுப்பித்தல் |
| 3 | நகராட்சி நிர்வாக ஆணையரகம் | வரி அல்லாத இதர கட்டணங்கள் |
| 4 | | தொழில் வரி வசூலித்தல் |
| 5 | | சொத்து வரி வசூலித்தல் |
| 6 | | பாதாள வடிகால் வரி வசூலித்தல் |
| 7 | | குடிநீர் வரி வசூலித்தல் |
| 8 | சென்னை பெருநகர குடி நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் | குடி நீர் மற்றும் கழிவுநீர் வரி |
| 9 | பெருநகர சென்னை மாநகராட்சி | பிறப்புச் சான்றிதழ் அச்சிடுதல் |
| 10 | | இறப்புச் சான்றிதழ் அச்சிடுதல் |

| | | |
|---|---|---|
| 11 | | வர்த்தக உரிமம் புதுப்பித்தல் |
| 12 | | நிறுவன வரி வசூலித்தல் |
| 13 | | தொழில் வரி வசூலித்தல் |
| 14 | | சொத்து வரி வசூலித்தல் |
| 15 | தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் இயக்குநரகம் | பலமாடிக் கட்டடத்திற்கான தடையின்மை இணக்கச் சான்று |
| 16 | | பலமாடிக் கட்டடம் கட்டுவதற்கான திட்ட அனுமதி கோரும் தடையின்மைச் சான்றிதழ் |
| 17 | | பலமாடிக் கட்டடம் அல்லாத கட்டிடம் கட்டுவதற்கான திட்ட அனுமதி கோரும் தடையின்மைச் சான்றிதழ் |
| 18 | | பலமாடிக் கட்டடத்திற்கான தீ பாதுகாப்பு உரிமம் பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல் |
| 19 | | பலமாடிக் கட்டடம் அல்லாத கட்டடம் கட்டுவதற்கான தீ பாதுகாப்பு உரிமம் பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல் |
| 20 | வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை | வருமானச் சான்றிதழ் |
| 21 | | பிறப்பிடச் சான்றிதழ் |
| 22 | | சாதிச் சான்றிதழ் |
| 23 | | குடும்பத்தில் பட்டதாரி இல்லை என்பதற்கான சான்றிதழ் |

| | | |
|---|---|---|
| 24 | | கணவனால் கைவிடப்பட்டவர் என்ற சான்றிதழ் |
| 25 | | குடும்ப இடப்பெயர்வு சான்றிதழ் |
| 26 | | விவசாய வருமானச் சான்றிதழ் |
| 27 | | விதவைச் சான்றிதழ் |
| 28 | | வேலையின்மை என்பதற்கான சான்றிதழ் |
| 29 | | கல்விச் சான்றிதழ் தொலைந்தமைக்கான சான்றிதழ் |
| 30 | | இரண்டு பெண் குழந்தைகள் சான்றிதழ் அல்லது ஆண் வாரிசு இன்மைச் சான்றிதழ் |
| 31 | | திருமணம் ஆகவில்லை என்பதற்கான சான்றிதழ் |
| 32 | | கலப்புத் திருமணச் சான்றிதழ் |
| 33 | | வாரிசு சான்றிதழ் |
| 34 | | சொத்து மதிப்புச் சான்றிதழ் |
| 35 | | இருப்பிடச் சான்றிதழ் |
| 36 | | அடகு பிடிப்போர் உரிமம் |
| 37 | | வட்டிக்கு பணம் கொடுப்போர் உரிமம் |
| 38 | | இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான சான்றிதழ் |

| | | |
|---|---|---|
| 39 | | சிறு / குறு விவசாயி சான்றிதழ் |
| 40 | தமிழ்நாடு மின்சார வாரியம் | மின் கட்டணம் |
| 41 | | புதிய குறைந்த அழுத்த இணைப்புப் பதிவு |
| 42 | | புதிய குறைந்த அழுத்த இணைப்புக்கான கட்டணம் |
| 43 | அண்ணா பல்கலைக்கழகம் | தமிழ்நாடு பொறியாளர் சேர்க்கை - நிகழ்நிலை பதிவு |
| 44 | உணவுப் பொருள் வழங்கல் துறை | புதிய குடும்ப அட்டைக்கு விண்ணப்பித்தல் |
| 45 | | குடும்ப அட்டை மாற்றம்- புதிய உறுப்பினர் சேர்க்கை, முகவரி மாற்றம், அட்டை வகை மாற்றம், சிலிண்டர் எண்ணிக்கை மாற்றம், குடும்பத் தலைவர் உறுப்பினர் மாற்றம், குடும்ப உறுப்பினர் விவரம் நீக்கம், பயனாளிகளின் புகைப்படம் மாற்றம். |
| 46 | வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை | பதிவு அடையாள அட்டை அச்சிடுதல் |
| 47 | | புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் |
| 48 | தமிழ்நாடு மின்-ஆளுமை முகமை | பொது விநியோகத் திட்டம்- ஆதார் ஒருங்கிணைப்பு |

அப்னா பொதுச் சேவை மைய இணையதளம் மூலம் வழங்கப்படும் 68 சேவைகளில், 3 வேளாண்மை சேவைகள், 9 வர்த்தகம் - குடிமக்கள் சேவைகள், 9 கல்வி சார்ந்த சேவைகள், 3 தேர்தல் துறை சேவைகள், 9 அரசு - குடிமக்கள் சேவைகள், 2 காப்பீட்டு சேவைகள், 4 கைபேசி மற்றும் DTH சேவைகள், 2 பணி நியமன சேவைகள், 4 பயணச் சேவைகள், 5 UID சேவைகள், 9 திறன் சேவைகள், 4 வங்கி சேவைகள் மற்றும் 5 பயிற்சி பாட சேவைகள் ஆகியவை அடங்கும்.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற விதி 110-ன் கீழ் அறிவிக்கப்பட்ட "இ-சேவை மையங்கள் மூலம் அரசுத் துறைகளால் தற்போது வழங்கப்பட்டு வரும் சேவைகளுடன் கூடுதலாக 300 சேவைகள் வழங்கப்படும்" என்ற அறிவிப்பினை செயல்படுத்தும் விதத்தில், திட்ட ஒருங்கிணைப்பாளருக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. சேவைகளுக்கான செயல்பாட்டுத் தேவை குறிப்புகள் (FRS)

சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஆலோசித்து தயாரிக்கப்பட்டு வருகிறது.

### 3.3.2 அரசு இ-சேவை மையங்கள் (Arasu e-Sevai Centres)

பொது மக்களுக்கு வழங்கவேண்டிய அடிப்படைத் தேவைகளை நன்குணர்ந்துள்ள அரசு, அவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகாமையிலேயே அரசு இ-சேவை மையங்கள் வழியாக தேவையான அரசு சேவைகளை மின்னணு முறையில் வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது. அதற்கேற்ப, தற்போது அரசு இ-சேவை மையங்கள், மின் மாவட்ட சேவைகளையும் மற்றும் இதர தனியார் சேவைகளையும் பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றன.

கிராமப்புற பொது சேவை மையங்களின் பயன்பாடுகளைக் கருத்திற்கொண்டு, இத்திட்டம் நகர்ப்புறப் பகுதிகளிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மாநிலத்தின் வெவ்வேறு அரசுத் துறைகளின் மின்னணு சேவைகளை ஒருங்கிணைந்த முறையில், நகர்ப்புறம் மற்றும் புறநகர்

பகுதிகளில் ஒரே இடத்தில் வழங்கும் நோக்கில் அரசு இ-சேவை மையங்கள் செயல்படுகின்றன.

தற்போது, தமிழ் நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள், புது வாழ்வு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கிராமப்புற வறுமை ஒழிப்புக் குழுக்கள், கிராமப்புற தொழில் முனைவோர் மற்றும் வேளாண்மை அபிவிருத்திக்கான சர்வதேச நிதி நிறுவனம் (IFAD) ஆகியவற்றின் மூலம் இ-சேவை மையங்கள் நடத்தப்படுகின்றன.

நகர்ப்புற அரசு இ-சேவை மையங்களை அமைப்பதற்கான முன்னோடித் திட்டம் கடந்த 24-02-2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பின்வரும் பதினான்கு இடங்களில் துவக்கி வைக்கப்பட்டது :-

| | |
|---|---|
| வட்டாட்சியர் அலுவலகங்கள் | 3 |
| சென்னை மாநகராட்சி (மண்டல அலுவலகங்கள்) | 3 |
| சென்னைப் பெருநகர குடிநீர்வழங்கல் | 2 |

| | |
|---|---|
| மற்றும் கழிவு நீரகற்று வாரியம் (CMWSSB Depots) | |
| நகர்ப்புற கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் | 6 |

தற்போது மாநில முழுவதும் உள்ள 11,117 அரசு இ-சேவை மையங்களில் அமைக்கப்பட்டுள்ள 11,636 சேவை முகப்புகளின் விவரங்கள் பின்வருமாறு :-

| வ. எண். | சேவை மைய முகமை | மையங்களின் எண்ணிக்கை | முகப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் | 844 | 1,268 |
| 2. | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் | 4,381 | 4,381 |
| 3. | கிராமப்புற வறுமை ஒழிப்புக் குழுக்கள் | 4,261 | 4,356 |
| 4. | வேளாண்மை அபிவிருத்திக்கான கிராம அளவிலான சர்வதேச நிதி நிறுவனம் | 7 | 7 |
| 5. | கிராமப்புற தொழில் முனைவோர் | 1,624 | 1,624 |
| | **மொத்தம்** | **11,117** | **11,636** |


மின் மாவட்டத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பரிமாற்றங்களின் எண்ணிக்கை விவரங்கள் பின்வருமாறு :-

| வ.எண். | வருடம் | மின் மாவட்ட பரிமாற்ற விவரங்கள் | அப்னா பொது சேவை மையம் | வாக்காளர் வண்ணப் புகைப்பட அடையாள அட்டை (EPIC) | ஒட்டுமொத்த பரிமாற்ற எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. | 2011-2012 | 83,046 | - | - | 83,046 |
| 2. | 2012-2013 | 1,98,353 | - | - | 1,98,353 |
| 3. | 2013-2014 | 9,85,353 | - | - | 9,85,353 |
| 4. | 2014-2015 | 24,75,890 | - | - | 24,75,890 |
| 5. | 2015-2016 | 1,10,10,387 | 20,27,137 | - | 1,30,37,524 |
| 6. | 2016-2017 | 1,16,33,436 | 41,79,825 | 11,31,046 | 1,69,44,307 |
| 7. | 2017-2018 (01.04.2017 to 31.05.2017) | 18,91,815 | 4,87,650 | 2,50,153 | 26,29,618 |
| | **மொத்தம்** | 2,82,78,280 | 66,94,612 | 13,81,199 | 3,63,54,091 |

**3.3.3 மாநில சேவை இணையதளம் / மாநில சேவைகள் விநியோக நுழைவாயில்** **(State Portal / State Services Delivery Gateway)**

தமிழ்நாடு அரசின் சேவைகள் மற்றும் தகவல்கள் ஆகியவற்றை எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் பெறக்கூடிய ஒரே முகப்பாக மாநில சேவைகள் விநியோக நுழைவாயில் இருக்கிறது. மின்மாவட்ட சேவைகளின் ஒருங்கிணைப்பு, பொருண்மை நிர்வாக அமைப்பு, துறைகளின் சேவைகளுக்கான இணைப்புகள், கைபேசி இணக்கமுறை, பொதுமக்களால் செய்யப்படும் பதிவுகள் ஆகியவற்றை மாநில சேவை இணையதளம் உள்ளடக்கியிருக்கும்.

இச்சேவை இணையதளம் வடிவமைக்கப் பட்டு, தரக்கட்டுப்பாட்டு (STQC) நிறுவனத்தால் அதன் செயல்பாடு, திறன் மற்றும் பாதுகாப்பு குறித்து முழுமையாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, கடந்த 24.02.2014 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.




**படம் 15: மாநில சேவைகள் விநியோக நுழைவாயில்**

### 3.3.4 திறன் மேம்பாடு (Capacity Building)

அரசின் பல்வேறு நிலைகளில் தகவல் தொழில்நுட்பத் திறனில் நிபுணத்துவம் அடையவும், திறன்களை பெற்றிடவும் திறன் மேம்பாட்டுத் திட்டம், பின்வருவனவற்றை குறிக்கோளாகக் கொண்டிருக்கும் :-

1. பல்வேறு மின்ஆளுமை முயற்சிகளில் தரம் மற்றும் சீரான நிலையை ஏற்படுத்துதல்
2. மாற்று மேலாண்மை மற்றும் பயிற்சிக்கான தேவைகள்
3. அரசு செயல்பாடுகளின் மறு கட்டமைப்பு

4. செலவினம் மற்றும் மனிதவள மேம்பாட்டினை திறமையுடன் கையாளுதல்
5. வெளிச் சந்தையிலுள்ள வளத்தினை திறம்படப் பெற்றிடல்
6. பிற இடங்களில் பயன்படுத்தப்படும் சிறந்த செயல்பாடுகளை நடைமுறைப்படுத்தல்

திறன் மேம்பாட்டின் ஒரு பகுதியாக பின்வரும் பாடத் திட்டங்கள் மற்றும் பயிற்சிகள் தமிழ்நாடு மின்ஆளுமை முகமையால், அரசுத் துறைப் பணியாளர்களின் நலனுக்கென நடத்தப்படுகின்றன :-

1. அடிப்படை தகவல் தொழில்நுட்பப் புத்தாக்கப் பயிற்சி
2. மின் மாவட்ட மென்பொருள் பயிற்சி
3. மின்ஆளுமை புத்தாக்கப் பயிற்சி
4. மின் ஆளுமைத் திட்ட சிறப்பு நிலைப் பயிற்சி (STeP)
5. மென் திறன் பயிற்சி
6. வன்பொருள் மற்றும் வலையமைப்பு பாடத் திட்டம்
7. தரவு தொகுப்பு மேலாண்மை பாடத் திட்டம்
8. ஐ.பி.வி - 6 பயிற்சி
9. மாற்று மேலாண்மைப் பயிற்சி
10. அரசு செயல்பாடுகளின் மறு கட்டமைப்புப் பயிற்சி
11. திட்ட மேலாண்மைப் பாடத் திட்டம்
12. மென்பொருள் உருவாக்கும் பயிற்சி

ஏப்ரல் 2017 முதல் ஜூன் 2017 வரை சமூக நலத்துறை திட்டங்கள், ஜீவன் பிரமான் பயிற்சி, புத்தாக்க பயிற்சி மற்றும் கணினி பயிற்சி மூலம் 16,701 நபர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.



**படம் 16: தமிழ் நாடு இல்லம், புது தில்லியில் பணிபுரியும் அலுவலர்களுக்கான கணிப்பொறி திறன் குறித்த பயிற்சி முகாம்**

### 3.3.5 திறன் மேம்பாட்டிற்கான சிறப்பு மையம் (Centre of Excellence for Capacity Building)

தமிழ்நாடு அரசு பல்வேறு மின் ஆளுமைத் திட்டங்களை மாநிலத்தில் செயல்படுத்தி வருகிறது. மேலும், மின் ஆளுமை திட்டத்தின் கீழ் சேவைகளை

பல்வேறு முறைகள் மூலம் குடிமக்களுக்கு வழங்குகிறது. மின் ஆளுமைத் திட்டங்களின் ஆரம்ப நிலையில் உள்ள திட்ட வளர்ச்சி மற்றும் செயல்படுத்தும் முறைகளை கையாள போதுமான திறன் துறைகளில் இல்லாததால், தகவல் தொடர்பு தொழில்நுட்பம் தொடர்பான திறன்களை உருவாக்க திறன் மேம்பாட்டிற்கான சிறப்பு மையம் அரசுக்குத் தேவைப்படுகிறது.

தமிழக அரசுத் துறைகளில் மென்பொருள் வளர்ச்சியை நிர்வகித்து நடைமுறைப்படுத்துதல், அரசு ஊழியர்களின் மின் ஆளுமை திறன்களை வளர்த்தல் மற்றும் அதற்கான தகுதி சான்றிதழ் வழங்குதல் ஆகியவற்றிற்காக 'திறன் மேம்பாட்டு சிறப்பு மையம்' அமைக்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

திறன் மேம்பாட்டு சிறப்பு மையமானது கல்வி நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் அரசுத் துறையினர் பங்கேற்றிடும் வகையில் புதுமையான ஆராய்ச்சி, தொழில்நுட்பம் மற்றும் மென்பொருள் தீர்வுகள் தொடர்பான வசதிகளை பெற்றதாக

இருக்கும். கல்வி, தொழில் முனைவு மற்றும் புதுமை முயற்சிகள் ஆகியவையே தமிழக அரசின் திறன் மேம்பாட்டிற்கான சிறப்பு மையத்தின் அடிப்படைக் கொள்கைகள் ஆகும்.

**3.3.6 தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு (TNGIS)**

**3.3.6 (அ) தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு (TNGIS) நடைமுறைப்படுத்துதல்**

புவிசார் தகவல் அமைப்பினை உபயோகிப்போரின் தேவைகளை கவனத்தில் கொண்டும், வளங்களை வீணாக்காமல், கவனமுடன் வளர்ச்சி சூழ்நிலையை எட்டவும், ஒரு பொதுவான தமிழ் நாடு இடம் சார்ந்த தரவு உட்கட்டமைப்பினை ஏற்படுத்துவதும், இதற்கென தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு கொள்கை ஒன்று உருவாக்குவதும் அவசியமாகும்.

இதற்கென ஆணை வெளியிடப்பட்டு ரூ.132.80 இலட்சம் நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

- பயனாளர் துறைப் பிரதிநிதிகள் உள்ளடக்கிய ஒரு தொழில்நுட்பக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

- மெட்டா தரவு கட்டமைப்பிற்கான வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றை, செயல்படுத்தும் முகமையான தேசிய தகவல் மையம் செய்து வருகிறது.
- ஒரு விரிவான வடிவமைப்பினால் பின்வரும் இடம் சார்ந்த பலதரப்பட்ட தரவுகளைக் கையாள முடியும்:-
    - ✓ பல்வேறு துறைகள் மாநிலம், மாவட்டம், வட்டம், பகுதி, உள்ளாட்சிகள் போன்ற முக்கியமான பகுதிகள்
    - ✓ பல்வேறு அளவுகளில் அடுக்குகள் (நிர்வாக எல்லை 50 K, 10 K, 1K)
    - ✓ பல்வேறு துறைகள்/ மாவட்டங்களின் பங்களிப்பு மற்றும் பயனர்கள்
    - ✓ பல்வேறு அடுக்குகளுக்கான பலதரப்பட்ட சலுகைகள் (அகம்/இடையிலான /பொது)

இத்திட்டத்திற்காக இதுவரை 21 துறைகள் / நிறுவனங்கள் தங்களது அடுக்குகளைப் பகிர்ந்துள்ளன.

- ➢ மத்திய தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தால் (STQC) பாதுகாப்பு தணிக்கைக்கு இதன் வலைதளம் உட்படுத்தப்பட்டு அதன் அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது.

- TNGIS வலைதளமானது பாரத சன்சார் நிகாம் லிமிடெட் - தரவு மையத்தில் வைக்கப்பட்டுள்ள நான்கு சர்வர்களில் நிறுவப்பட்டுள்ளது.
- இந்த வலைதளமானது (www.tngis.tn.gov.in) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 05.08.2016 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.
- இந்த வலைதளத்தில் 233 அடுக்குகள் நிறுவப்பட்டுள்ளன.
- பல்வேறு அரசு அலுவலர்களுக்கு 449 பயனர் குறியீடு மற்றும் கடவுச் சொல் வழங்கப்பட்டுள்ளது.
- மின்னுருவாக்கம் செய்யப்பட்ட சிப்காட்டின் 31 திட்டம் தொடர்பான அடுக்குகள் TNGIS வலைதளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.
- விபத்து குறித்த வரைபடங்கள் - 108 அவசர ஊர்தி சேவைகள் - இணையவழி மாதிரிகள் உருவாக்கம் - Grid / Cluster / Buffer ஆய்வு.
- ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு திட்டத்தின் அங்கன்வாடி மையங்கள், இ-சேவை மையங்கள், விடுதிகள் ஆகியவற்றின் இருப்பிடங்கள் மின்மாவட்ட

மேலாளர்கள் மூலம் வரையப்பட்டு வலைதளத்தில் இணைக்கப் பட்டுள்ளன.

- சிட்கோ, சிப்காட் மற்றும் டிட்கோ ஆகிய நிறுவனங்களின் திட்டங்கள் தேசிய புவியியல் தகவல் மையத்தின் (National Centre for Geo-informatics) வலைதளத்தில் கொடுக்கப் பட்டுள்ளன.
- மாவட்ட மற்றும் கிராம பஞ்சாயத்து மூல அடுக்கு வரைப்படங்கள் வரையப்பட்டு இவ்வலைதளத்தில் கொடுக்கப் பட்டுள்ளன.
- மொத்தமுள்ள 17,652 வருவாய் கிராமங்களில் 16,721 வருவாய் கிராமங்களின் வரைபடங்கள் TNGIS வலைதளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.
- இந்து அறநிலையத் துறையின் கீழ் உள்ள திருநீர்மலை மற்றும் வடபழனி கோவிலின் நில தகவல் தொகுப்பு இவ்வலைதளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.
- இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் விளையாட்டு மைதானங்களின் வரைபடங்கள் இவ்வலைதளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

### 3.3.6 (ஆ) முறைப்படுத்தப்பட்ட இலக்க முகவரி எண் உருவாக்குதல் (Creation of Standardised Digital Address Number)

மாண்புமிகு தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் அறிவித்தபடி, முறைப்படுத்தப்படுத்தப்பட்ட இலக்க முகவரி எண் உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டம், தமிழகத்தில் உள்ள அனைத்து இடங்களையும், அவற்றிற்கான தெருவின் பெயர் மற்றும் முகவரிகள் இல்லாவிடினும், அதற்கான எழுத்து மற்றும் எண் குறியீட்டினை உருவாக்குவதன் மூலம் எளிதில் கண்டறிய வகை செய்கிறது. இத்திட்டத்தினை இந்த ஆண்டிற்குள் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.3.7 மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையம் (STATE RESIDENT DATA HUB)

மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையமானது, மாநிலத்தில் குடியிருப்போர் குறித்த தரவு தொகுப்பு ஆகும். இத்தகவல் தொகுப்பு

மையத்தின் தரவுதளத்தினை பொது மக்களுக்கு சேவை அளிக்கும் அனைத்து துறைகளும் பயன்படுத்த இயலும். அரசின் திட்டங்களுக்கான இலக்குகளை நிர்ணயிக்கவும், சிறப்பான முறையில் சேவை அளிக்கவும், மேம்படுத்தப்பட்ட பொறுப்புத்தன்மையுடன், சிறப்பான முறையில் திட்டங்களை கண்காணிக்கவும் அரசுக்கு இத்திட்டம் உதவிபுரியும். இத்திட்டத்திற்கான திருத்திய உத்தேச மதிப்பு ரூ. 31.72 கோடி ஆகும்.


மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையம், மாநில அரசுக்கு பின்வரும் வகையில் உதவிபுரியும்:-

- மாநில அளவிலான குடிமக்கள் தரவுகளை மின்னாக்கம் செய்து, மையப்படுத்தப்பட்ட, பாதுகாப்பான முறையில் நிர்வகித்தல்;
- ஆதார் எண்ணைப் பயன்படுத்தி, மாநில அரசின் பல்வேறு நலத்திட்டப் பயனாளிகளை தனித்தனியாகக் கண்டறிதல்;
- அரசுத்துறைகளின் தரவு தளங்களை ஆதார் எண் சார்ந்த தேசிய மக்கள்

தொகை பதிவேட்டினை நிகழ்நேரத்தில் ஒருங்கிணைத்தல்;

- பல்வேறு பயன்பாடுகளில் ஆதார் சான்றளிப்பினை இணைத்தல்.

இத்திட்டத்தினை செயலாக்கம் செய்வதற்கான ஆலோசனை முகமையும், இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான திட்ட ஒருங்கிணைப்பாளரும் கண்டறியப்பட்டுள்ளனர். இவர்கள் மூலம் இத்திட்டத்திற்கான மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. இதனுடன் பல்வேறு அரசுத் துறைகளின் தரவுகள் பெறப்பட்டு, அவற்றின் தொடர் நிகழ்வு நீக்கப்பட்டு தரப்படுத்தப்பட்டு வருகின்றன.




படம் 17: மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையம் மற்றும் தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு துவக்கம்

**3.3.8 ஆதார் நிரந்தர பதிவு மையம் :-**

30.09.2016 வரையில் குடிமக்களின் ஆதார் தகவல்கள், இந்திய பொது பதிவாளரால் தேசிய மக்கள் பதிவேட்டின் படியும், பாரத மின்னணு நிறுவனம் மற்றும் அதன் பதிவு முகமைகளின் மூலமும் சேகரிக்கப்பட்டு வந்தன.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 23.09.2016 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, மாநிலம் முழுவதும் ஆதார் நிரந்தர பதிவு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த நிரந்தா பதிவு மையங்களை செயல்படுத்த, மின்னாளுமை இயக்குநர் / தமிழ்நாடு மின்ஆளுமை முகமை பதிவாளராக இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) கீழ் நியமிக்கப்பட்டுள்ளார். தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் ஆகியவை பதிவு முகமைகளாக நியமிக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது இந்த நிரந்தர பதிவு மையங்கள் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தால்

அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள், சென்னை மாநகராட்சியின் தலைமையகம் மற்றும் மண்டல அலுவலகங்களிலும், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மூலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், நகராட்சிகள் மற்றும் சென்னை நீங்கலாக மற்ற மாநகராட்சிகளின் தலைமையகங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குடிமக்கள் தங்களது மக்கள் தொகை சார்ந்த தகவல்களை இந்த மையத்திலேயே புதுப்பிக்க இயலும்.

ஐந்து வயது வரையுள்ள குழந்தைகளுக்கான ஆதார் பதிவிற்கு, தமிழ்நாடு மின்ஆளுமை முகமை திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி மூலம் மூன்று நிறுவனங்களைத் தெரிவு செய்துள்ளது. அதேபோல், 5-18 வயதுடைய பள்ளிக் குழந்தைகளுக்கு ஆதார் பதிவு செய்ய ஓர் நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி மூலம் தெரிவு செய்யப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது வரை 27,17,551 குழந்தைகள் பதிவு செய்துள்ளனர்.

**3.3.9 மின் அலுவலகம் (e-Office)**

காகிதம் இல்லா அலுவலகத்தை உருவாக்கும் பொருட்டு "மின் அலுவலகம்" (e-Office) மென்பொருள் ஒன்று 2015-16-ல் தமிழ்நாடு மின்னாளுமை முகமையில் செயலாக்கப்பட்டது. இந்த மின் அலுவலக மென்பொருளை தகவல் தொழில்நுட்பவியல் துறையும் ஏப்ரல் 2016 முதல் தொடர்ந்து உபயோகித்து வருகிறது. மற்ற துறைகளும் 2017-18 ஆண்டுக்குள் இம்மென்பொருளை பயன்படுத்த செய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மின் அலுவலக மென்பொருளை தொடர்ந்து உபயோகிப்பதால் அலுவலக பணியின் திறன் மேம்படும்.

**3.3.10 மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட துறைகளுக்கு வசதி அளித்தல் (Facilitation for Mission Mode Departments)**

கடந்த சில ஆண்டுகளாக அரசுத் துறைகள் மின்ஆளுமைத் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. குடிமக்களுக்கான சேவைகளை

வழங்கிடும் நோக்கில் தமிழக அரசு கீழ்காணும் 14 தெரிவு செய்யப்பட்ட அரசுத் துறைகளின் சேவைகளை முன்னிலைப்படுத்தியுள்ளது.

1. நிதித் துறை
2. வணிக வரித்துறை
3. வேளாண்மைத் துறை
4. சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை
5. மக்கள் நலவாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
6. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
7. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை
8. உள் துறை
9. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
10. கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை
11. பள்ளிக்கல்வித் துறை
12. பதிவுத் துறை
13. போக்குவரத்துத் துறை
14. தொழில் துறை

இத்துறைகளுக்கு தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு, தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் மற்றும் அரசு இ-சேவை மையங்கள் ஆகிய கட்டமைப்பு வசதிகளை அளித்து, அவற்றின் மூலமாக மின்னணுவழி சேவைகளை வழங்க தகவல் தொழில்நுட்பவியல் துறை உறுதுணையாக உள்ளது. தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்னாளுமை முகமை ஆகிய நிறுவனங்கள் இந்த மின்னாளுமை திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மின்குறிக்கோள் துறைகளுக்கு தொழில்நுட்ப வழிகாட்டுதலையும், திட்ட செயல்பாட்டிற்கான உதவியையும் வழங்கி வருகின்றன.

### 3.3.11 தகவல் தொழில் நுட்பப் பாதுகாப்பு தணிக்கை

பாதிப்புகள் மற்றும் ஊடுருவலிலிருந்து அரசு இணையதளங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப மென்பொருட்களை பாதுகாத்திட, தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பு தணிக்கை படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக ரூ.1,76,41,000/- அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசுத் துறைகளின் இணைய மென்பொருட்களை

தணிக்கை செய்திட, எல்காட் நிறுவனம் பதிவு செய்யப்பட்ட பாதுகாப்பு தணிக்கை முகமைகளை அறிவித்துள்ளது.

| நிலை | துறைகளின் எண்ணிக்கை | தணிக்கை முடிக்கப்பெற்றவை | ஆய்வில் உள்ளவை |
|---|---|---|---|
| 1 | 79 | 69 | 10 |
| 2 | 37 | 6 | 31 |

தகவல் தொழில்நுட்ப பாதுகாப்புத் தணிக்கையின் உடனடி தேவையைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு மின்னாளுமை முகமையும், CERT-IN அமைப்பின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்புத் தணிக்கை நிறுவனங்களை பதிவு செய்து அறிவித்துள்ளது.

### 3.3.12 இணையதள சேவை விளக்கக் கோப்பகம்

இணையதள சேவை விளக்கக் கோப்பகம் ஒன்று, அதாவது "Online Demonstrative Services Directory", தமிழக அரசின் இணையதளத்தில் வெளியிடப்படும் என அரசு அறிவித்துள்ளது. இந்த சேவை விளக்கக் கோப்பகத்தில் இணையதள சேவைகள் (Online e-Services), இணையதள

முகவரிகள் (Website Addresses), சேவை தொடர்பான இணைப்புகள் (Links to the Services), உபயோகிப்போர் விளக்க வழிகாட்டி (Demonstrative User Guide) போன்ற விவரங்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கென இடம்பெறும். இதனை செயல்படுத்திட ஏதுவாக ஒரு மென்பொருள் தயாரிக்கப்பட்டு, பயனர் ஏற்பு சோதனையும் நிறைவு பெற்றுள்ளது. பாதுகாப்பு தணிக்கை முடிவடைந்து, தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மாநிலத் தரவு மையத்தில் மேகக் கணினியத்தில் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

### 3.3.13 திட்டக் கண்காணிப்பு மென்பொருள்

அரசின் திட்டங்கள் மக்களை விரைவில் சென்றடைய, திட்டங்களின் செயல்பாட்டினை காலமுறை அடிப்படையில் கண்காணித்து ஆய்வு செய்வது அவசியம் என்பதை கருத்தில் கொண்டு, ஒரு புதிய திட்டக் கண்காணிப்பு மென்பொருள், அதாவது **Scheme Monitoring Application Software** உருவாக்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது. இந்த மென்பொருள், துறைகளின் திட்டங்களை நிகழ்நேர ஆய்வு செய்து

கண்காணிக்கவும், உரிய முடிவுகளை எடுக்கவும் உதவி செய்கிறது. இதற்குத் தேவையான மென்பொருள் தயாரிக்கப்பட்டு, பயனர் ஏற்பு சோதனையும், பாதுகாப்பு தணிக்கையும் நிறைவு பெற்றுள்ளன. தற்பொழுது இந்த மென்பொருள், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மாநிலத் தரவு மையத்தில் மேகக் கணினியத்தில் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

**3.3.14 அரசு அலுவலர்களுக்கான மின்கற்றல் பாடங்கள்**

மாநிலத்தில் மின்னாளுமை செயல்பாட்டை விரைவுபடுத்துவதற்காகவும் அரசு அலுவலர்களின் தகவல் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்தும் நோக்கிலும், மின் கற்றல் செயல்பாட்டை உருவாக்குவதற்கான மென்பொருள் தயாரிக்கப் பட்டு, மென்பொருள் சோதனைகள் முடிவடைந்து, தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மாநிலத் தரவு மையத்தில் மேகக் கணினியத்தில் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

### 3.3.15 மின்ஆளுமை ஊக்குவிப்பு நிதி

அரசுத் துறைகளின் பல்வேறு சேவைகளை மின்ஆளுமை வழியாக வழங்க மின்ஆளுமை திட்டத்தின் கீழ் 14 துறைகள் தெரிவு செய்யப்பட்டு, அத்துறைகள் கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன. மின்ஆளுமை திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்படாத மற்ற அரசுத் துறைகளின் சேவைகளை மின்ஆளுமை மூலமாக செயல்படுத்த, மின்ஆளுமை ஊக்குவிப்பு நிதியாக (e-Governance Initiative Fund) ரூபாய் 10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மின் அலுவலகம் (e-Office), மின்னுரு ஆவணங்கள் (Digital Archives) போன்ற மற்ற துறைகளால் பொதுவாக பயன் படுத்தப்படும் மென்பொருள்கள் இந்நிதியின் மூலம் உருவாக்கப்படும்.

### 3.3.16 குறுந்தகவல் மூலமாக சேவை நிலை தெரிந்து கொள்ள வசதி

குறுந்தகவல் மூலமாக சேவை நிலை அறிவது என்பது குடிமக்களுக்கு சேவை தொடர்பான தகவல்களை அளிக்கவும், அவர்களிடமிருந்து

பெற்றிடவும் என இருவழி தகவல் தொடர்பு வசதியாகும். அரசு இ-சேவை மையங்களில் பயனாளர்கள் தங்களின் விண்ணப்பத்தினை பதிவு செய்தவுடன் குறுந்தகவல் மூலமாக விண்ணப்பம் குறித்த தகவல் அனுப்பப்படும். பின்னர், விண்ணப்பத்தின் ஒப்புதல், நிராகரிப்பு அல்லது திருப்பி அனுப்புதல் போன்ற தகவல்களும் குறுந்தகவல் மூலமாக பயனாளர்களுக்கு அனுப்பப்படுகின்றது. தமிழ்நாடு மின்ஆளுமை முகமை, பயனாளர்கள் 155250 என்ற எண்ணிற்கு விண்ணப்ப எண்ணை அனுப்புவதன் மூலம் அதன் தற்போதைய நிலையை உடனடியாக அறிந்து கொள்ளும் வசதியை 17.03.2017 முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. இச்சேவையினை 19.06.2017 வரை 2,00,083 பேர் பயன்படுத்தி பயனடைந்துள்ளனர்.

### 3.3.17 மின்ஆளுமைக்கான தர கையேடு (e-Governance Standards Manual)

தேசிய தகவலியல் மையம் (NIC), தமிழ் இணையக் கல்விக் கழகம் (TVA), தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT), C-DAC நிறுவனம் மற்றும் STQC ஆகிய நிறுவனங்களின் ஒத்துழைப்போடு தேசிய தரத்திலான மின் ஆளுமைக்கான தர கையேடு ஒன்றினை தமிழ்நாடு மின் ஆளுமை முகமை உருவாக்கி வருகிறது. இந்த கையேடு விரைவில் வெளியிடப்படும்.

### 3.3.18 இ-தால் ( e-Taal)

இ-தால் என்பது, குறிக்கோள் திட்டங்கள் போன்ற மத்திய மற்றும் மாநில அளவிலான திட்டங்களின் மின்னணு பரிமாற்றங்களின் புள்ளி விவரங்களை தொகுத்து ஆய்வு செய்யும் ஓர் இணைய தரவு தளமாகும். இது நிகழ்நேர அடிப்படையில் அவ்வப்போது இணைய வாயிலான செயல்பாடுகளின் பரிமாற்றம் குறித்த புள்ளிவிவரங்களை பெறுகிறது. மேற்படி

புள்ளிவிவரங்களின் அடிப்படையில் மாநிலங்கள் / திட்டங்கள் ஆகியவை தேசிய அளவில் தரவரிசைப்படுத்தப்படுகின்றன. இவ்வருடத்தில் (2017), மாநிலம் 14 கோடி பரிவர்த்தனைகளுடன், இந்திய அளவில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

### 3.3.19 மின் - கையொப்பமிடல் வசதி (e-Sign)

மின் கையொப்பமிடல் வசதியானது, ஆதார் எண் உள்ளவர்களால் கோப்புகளில் மின்னணு முறையில் கையொப்பமிட பெரிதும் பயன்படுகிறது. மின் கையொப்பமிடலில் ஆதார் எண் இணைக்கப்படுவதால் கையொப்பமிடுபவர்களின் விவரங்கள் இணையவழியில் மிக எளிதாக சரிபார்க்கப்படுகிறது. இதனை மேலும் அனைத்து மின்னணு பரிவர்த்தனைகளிலும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 3.3.20 உள்ளங்கையில் சான்றிதழ் திட்டம் (Ullangaiyil Sandridhazh Scheme)

தற்போது, நமது நாட்டிலுள்ள குடிமக்களிடையே கைப்பேசியின் பயன்பாடு மிகவும் இன்றியமையாத ஒன்றாக உள்ளது. தமிழ்நாடு மின்ஆளுமை முகமை அரசு சேவைகளை வெளிப்படையாகவும், திறன்மிக்கதாகவும், நம்பகத்தன்மை வாய்ந்ததாகவும் எளிய கட்டணத்தில் குடிமக்களுக்கு வசதியாக மற்றும் சுலபமாக இணைய வழியில் வழங்கி வருகிறது. குடிமக்கள் சமர்ப்பித்த விண்ணப்பங்களின் நிலை குறுந்தகவல் (SMS) வழியாக வழங்கப்பட்டு வருகின்றது.

மின்மாவட்ட திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சான்றிதழ்களை குடிமக்களுக்கு அவர்தம் வசிப்பிடத்திற்கே கொண்டு செல்லும் பொருட்டு "இணைய முகவரி சுருக்கம் (tiny url)" ஒன்று C-DAC உதவியுடன் உருவாக்கப்பட்டுள்ளது. சான்றிதழ்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட பின் பொது மக்களின் பதிவு செய்யப்பட்ட கைப்பேசி எண்ணிற்கு

குறுஞ்செய்தியாக (SMS) இணைய முகவரி சுருக்கம் (tiny URL) அனுப்பி வைக்கப்படும். சான்றிதழ்களை பொதுமக்கள் அவர்கள் வசிப்பிடத்திலேயே இணைய உதவியுடன் திறன் பேசிகள் மூலமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இத்திட்டம் மாண்மிகு முதலமைச்சர் அவர்களால் 23.05.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

### 3.3.21 தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப (மின்னணு சேவை விநியோகம்) விதிகள், 2016

பொது மக்களுக்கான சேவைகள் வழங்கும் முறையை மேம்படுத்தி, அதனை மக்கள் எளிதாக அணுகிப் பெற்றிட தமிழக அரசு முனைப்பான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. 165-க்கும் மேற்பட்ட அரசுத் துறைகளின் சேவைகள் மாநிலம் முழுவதுமாக பரவி செயல்பட்டுவரும் இ-சேவை மையங்களின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் கூடுதலாக பல்வேறு அரசுத் துறைகளின் 300 கூடுதல் சேவைகள் இந்த இ-சேவை மையங்கள் மூலம் வழங்கப்படவுள்ளன.

அரசுத் துறைகள் பொது மக்களுக்கான சேவைகள் வழங்குதலை மின்னணு முறையில் மாற்றிடவும், அச்சேவைகளின் தரவுகள் சேகரிப்பு, உருவாக்கம் மற்றும் வழங்கல் முறைகளைப் பரிந்துரைத்திடும் வகையிலானதொரு மின்னணு சேவை விநியோகக் கட்டமைப்பினை உருவாக்கிடவும், தகவல் தொழில்நுட்பவியல் சட்டம், 2000 (மத்திய சட்டம் 2000 பிரிவு-21)-ன் பிரிவுகள் 6 மற்றும் 6ஏ-ன் கீழ், "தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப (மின்னணு சேவை விநியோகம்) விதிகள், 2016" எனும் விதிகள் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்விதிகள் அரசு ஆணை நிலை எண்.13, தகவல் தொழில்நுட்பவியல் (மி.ஆ.1) துறை, நாள் 02.12.2016 அன்று வெளியிடப்பட்டு, தமிழ்நாடு அரசின் அரசிதழிலும் அறிக்கையாக வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப (மின்னணு சேவை விநியோகம்) விதிகள், 2016, அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநர் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகவர் மூலமாக மின்னணு

சேவை வழங்கலுக்கான நிர்வாக முறையை நிர்ணயிக்கிறது. இவ்விதிகளின்படி, மின்னாளுமை இயக்குநரை, "மின்னணு சேவை விநியோக இயக்குநர்" ஆக அரசு அறிவித்துள்ளது.

இவ்விதிகளின்படி, துறையின் தலைவராகவுள்ள ஒவ்வொரு தகுதிறமுடைய அதிகார அமைப்பும் இவ்விதிகள் நடை முறைப் படுத்தப்பட்ட நாளிலிருந்து 180 நாட்களுக்குள் மின்னணு வாயிலாக அரசுத் துறை, முகமை அல்லது அமைப்பு அளிக்கக்கூடிய பொது சேவைகள், மின்னணு வாயிலாக அத்தகைய ஒவ்வொரு சேவையும் அளிக்கப்படும் நாள், அச்சேவைகள் அளிக்கப்படுகிற முறை மற்றும் அவை அளிக்கப்படுகிற நிலைகள் ஆகியவற்றை அறிவிக்கை செய்திட வேண்டும். மேலும், இவ்விதிகள் நடைமுறைக்கு வந்ததிலிருந்து 5 ஆண்டுகளுக்குள், ஒவ்வொரு அரசுத் துறை / முகமை அல்லது அமைப்பின் அனைத்து பொது சேவைகளும் மின்னணு முறையில் வழங்கப்படவேண்டும்.

இவ்விதிகளில் விதி 18 (2)-ல், துறைத் தலைவர், அரசு அதிகாரிகள் மற்றும் சட்டப்படியான அதிகார அமைப்புகள் முறையே அவர்களுடைய கட்டுப்பாட்டிலுள்ள மின்னணு தரவு, தகவல், பயன்பாடுகள், இலக்கமுறையில் கையொப்பம் இடப்பட்ட மின்னணு பதிவுரு களஞ்சியம் மற்றும் தகவல் தொழில்நுட்ப சொத்துக்களைப் பொறுத்த வரையில், தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000-த்தில் குறிப்பிட்டுள்ளவாறு வரையறுக்கப்பட்ட, பாதுகாப்பு செயல்முறைகளை பின்பற்றிட வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இவ்விதிகளின்படி, பெரும்பாலான அரசுத் துறைகள் மற்றும் அவற்றின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் துறைத் தலைமை / கழகங்கள் / வாரியங்கள் / முகமைகள், மின்னணு முறையில் அளிக்கவுள்ள தமது பொது மக்களுக்கான சேவைகளைக் கண்டறிந்து அவற்றை அறிவிக்கை செய்துள்ளன.

### 3.4 நிதிநிலை செயல்பாடுகள்

தமிழகத்தில் மின் ஆளுமை செயல்பாடுகளை உருவாக்குவதன் மூலம் மின்னாளுமையை செயல்படுத்திடும் முகமாக, தமிழ் நாடு மின் ஆளுமை முகமை உருவாக்கப்பட்டது. இது தனது நிர்வாகச் செலவுகளுக்காக மாநில அரசின் நிதி உதவியைப் பெற்று வருகிறது. இது மின் மாவட்டத் திட்டம், திறன் மேம்பாடு (Capacity building), மாநில சேவைகள் விநியோக நுழைவாயில் (SSDG), மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையம் (SRDH) ஆகிய திட்டங்களை மத்திய மற்றும் மாநில நிதி பங்களிப்பின் மூலம் மாநிலத்தில் செயல்படுத்துகிறது. இந்நிதிப் பங்களிப்பானது முதன்மை சேவை ஒப்பந்தத்தின்படி, திட்டங்கள் எய்தும் மைல் கற்களின் அடிப்படையில் படிப்படியாக வழங்கப்படுகிறது.

மேக கணினிவழி சொத்து மேலாண்மை செயலி, குறுந்தகவல் மூலமாக சேவை நிலை தெரிந்து கொள்ள வசதி, தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு (TNGIS), திறன் மேம்பாட்டிற்கான சிறப்பு மையம், தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பு தணிக்கை

ஆகிய திட்டங்களுக்கு மாநில அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2015-16 ஆண்டு முதல் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை பங்கு தொகையினை மாநிலத்தில் உள்ள இ-சேவை மையங்களின் மூலம் செய்யப்படும் பரிவர்த்தனைகளின் சேவைக் கட்டணத்திலிருந்து வருவாய் பங்கினைப் பெற்று வருகிறது. டிசம்பர் 2016 முதல் பங்கு தொகை இ-சேவை இணையதளத்தில் உள்ள மின் பணப்பை (e-Wallet) மூலம் பெறப்படுகிறது.

| வருடம் | வருவாய் சதவீதம் | வரவு |
|---|---|---|
| 2015-16 | 2 | 3.04 கோடி |
| 2016-17 | 20 | 10.49 கோடி |

மேற்கூறிய வருவாய் பங்குத் தொகை உள்கட்டமைப்பு, நிர்வாகச் செலவுகள், விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் பயிற்சி முகாம்கள் நடத்த பயன்படுத்தப்படும்.

# அத்தியாயம் - IV

# தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்

### 4.1 முன்னுரை

"அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷன் லிமிடெட்" 4.10.2007 அன்று துவங்கப்பட்டது. இதன் நோக்கம் குறைந்த கட்டணத்தில் சிறந்த கேபிள் டிவி சேவையை பொதுமக்களுக்கு வழங்குவது ஆகும். இதற்கென தஞ்சாவூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் வேலூர் ஆகிய நான்கு இடங்களில் டிஜிட்டல் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டன. ஆயினும், பல்வேறு காரணங்களினால் இந்நிறுவனம் செயலிழந்த நிலையில் இருந்தது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மே 2011-ல் பொறுப்பேற்ற பின்னர், இந்நிறுவனத்திற்கு, ரூ.3 கோடி நிதியுதவி கடனாக வழங்கப்பட்டு புனரமைக்கப்பட்டதுடன், இந்நிறுவனத்தின் பெயர் "தமிழ்நாடு அரசு கேபிள்

டிவி நிறுவனம்” என மாற்றம் செய்து புத்துயிரூட்டப்பட்டது.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மாதம் ரூ.70/- என்ற கட்டணத்தில் தனது தரமான கேபிள் டிவி சேவையை பொதுமக்களுக்கு கேபிள் டிவி ஆப்பரேட்டர்கள் மூலம் வழங்கும் எனவும், இதில் ரூ.20/-ஐ கேபிள் டிவி ஆப்பரேட்டர்கள் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு செலுத்துவார்கள் எனவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 30.8.2011 அன்று சட்ட மன்றத்தில் அறிவித்தார்கள். அதன்படி, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் பொதுமக்களுக்கு ரூ.70/- என்ற மிகக் குறைந்த கட்டணத்தில் 90-100 சேனல்களுடன் தரமான கேபிள் டிவி சேவையை வழங்கி வருகிறது.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் கேபிள் டிவி சேவை, தமிழகம் முழுவதும் (சென்னை தவிர) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2.9.2011 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

## 4.2 நோக்கம்

பொதுமக்களுக்கு குறைந்த கட்டணத்தில் நல்ல தரமான கேபிள் டிவி சேவையை வழங்குவது தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் புத்துயிரூட்டப்பட்டு புனரமைக்கப்பட்டதன் நோக்கமாகும்.

## 4.3 பின்னணி மற்றும் வளர்ச்சி

ஒரு சில பன்முக கேபிள் டிவி ஆப்பரேட்டர்கள் (Multi System Operators) கேபிள் டிவி தொழிலில் ஆதிக்கம் செலுத்தியதுடன், உள்ளூர் கேபிள் டிவி ஆப்பரேட்டர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து அதிக அளவு கட்டணங்களை வசூலித்து வந்தனர். பொதுமக்கள் கேபிள் டிவி சேவையை பெற தனியார் கேபிள் டிவி நிறுவனங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.150 முதல் ரூ.250 வரை கட்டணமாக செலுத்தி வந்தனர்.

தற்போது, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் 90 முதல் 100 சேனல்களுடன் தரமான கேபிள் டிவி சேவையை ரூ.70/- என்ற மிகக்குறைந்த

மாத கட்டணத்தில் பொதுமக்களுக்கு வழங்கி வருகிறது. இதனால், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் கேபிள் சேவை, கேபிள் டிவி ஆப்பரேட்டர்களிடமும் பொதுமக்களிடமும் மாபெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. 2.9.2011 அன்று இந்நிறுவனம் தனது சேவையைத் தொடங்கியபோது இந்நிறுவனத்தின் சந்தாதாரர்களின் எண்ணிக்கை 4.94 இலட்சமாக இருந்தது. தற்பொழுது 1.5.2017 வரை இந்நிறுவனத்தின் சிக்னல்களைப் பெற்று பயன்பெறும் சந்தாதாரர்களின் எண்ணிக்கை 70.52 இலட்சமாகவும், இந்நிறுவனத்தின் இணைப்புப் பெற்றுள்ள உள்ளூர் கேபிள் டிவி ஆப்பரேட்டர்களின் எண்ணிக்கை 26,376 ஆகவும் உயர்ந்துள்ளது.

**4.4 உட்கட்டமைப்பு**

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், சென்னை மாவட்டத்தில் ஒரு டிஜிட்டல் கட்டுப்பாட்டு அறையினை சொந்தமாக நிறுவியுள்ளது. 27 மாவட்ட தலைநகரங்களில் விருப்பமுள்ள தனியார் பன்முகக் கேபிள் டிவி ஆப்பரேட்டர்களிடமிருந்து கட்டுப்பாட்டு

அறைகளைக் குத்தகைக்கு எடுத்ததுடன், ஏற்கனவே நான்கு மாவட்டங்களில் இருந்த இந்நிறுவனத்தின் டிஜிட்டல் கட்டுப்பாட்டு அறைகளைப் புனரமைத்து கூடுதல் உட்கட்டமைப்புகளை நிறுவியுள்ளது. மேலும் 50 துணைக் கட்டுப்பாட்டு அறைகளை தனியார் கேபிள் டிவி ஆப்பரேட்டர்களிடமிருந்து குத்தகைக்கு எடுத்து, கேபிள் டிவி சேவையை தற்பொழுது 82 கட்டுப்பாட்டு அறைகளிலிருந்து 26,376 கேபிள் டிவி ஆப்பரேட்டர்கள் மூலம் 70.52 இலட்சம் சந்தாதாரர்களுக்கு வழங்கி வருகிறது.

**4.5 நிறுவனத்தின் அமைப்பு**

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், ஒரு தலைவர் மற்றும் ஒரு மேலாண்மை இயக்குநர் தலைமையில், மாவட்ட வருவாய் அலுவலர் பதவி நிலையில் 2 பொது மேலாளர்கள், இணை இயக்குநர் பதவி நிலையில் 1 பொது மேலாளர், 1 நிறுவன செயலாளர், துணை ஆட்சியர் பதவி நிலையில் 2 மேலாளர்கள், 2 வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் 114 பணியாளர்களைக் கொண்டு தமிழ்நாடு

முழுவதும் நிர்வகிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் வட்டாட்சியர் பதவி நிலையில் 1 துணை மேலாளரும் அவருக்கு உதவியாக 1 உதவி மேலாளர், 1 தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் 3 உதவித் தொழில்நுட்ப உதவியாளர்கள் உள்ளனர். இந்நிறுவனத்தின் தொழில்நுட்பப் பிரிவு 2 முதன்மைத் தொழில்நுட்ப அலுவலர்கள், ஒரு தொலைத்தொடர்பு ஆலோசகர், ஒரு துணை மேலாளர், 6 தொழில்நுட்ப உதவியாளர்கள் மற்றும் 10 உதவித் தொழில்நுட்ப உதவியாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தின் கணக்குப்பிரிவு, நிதி ஆலோசகர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர் தலைமையில் 1 கணக்கு அலுவலர், 1 உதவிக் கணக்கு அலுவலர் மற்றும் 5 கணக்காளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

**4.6 சென்னை மாநகர சேவை துவக்கம்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் கேபிள் டிவி சேவையை சென்னை மாநகரப் பகுதிகளில்

20.10.2012 அன்று துவங்கி வைத்தார்கள். தற்பொழுது தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் சென்னை மாநகரப் பகுதியில் அனலாக் மற்றும் டிஜிட்டல் சிக்னல்களை உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்களுக்கு வழங்கி வருகிறது.

**4.7 டிஜிட்டல்மயமாக்கம்**

அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு, மத்திய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம், தனது குறிப்பு எண்.9/32/2007-BP&L, நாள் 2.4.2008-ன்படி சென்னை மாநரகத்தின் CAS (Conditonal Access System) பகுதிகளுக்கு பன்முகக் கேபிள் டிவி ஆபரேட்டர் (MSO) உரிமம் வழங்கியுள்ளது. மத்திய அரசின் கேபிள் டிவி நெட்வொர்க் திருத்தச் சட்டம் 2011-ன்படி, நாடு முழுவதும் கேபிள் டிவி சேவைகள் 31.12.2016-க்குள் டிஜிட்டல் மயமாக்கப்பட வேண்டும். அதன்படி, முதற்கட்டமாக 31.10.2012-க்குள் சென்னை உள்ளிட்ட நான்கு பெருநகரங்களில் கேபிள் டிவி சேவைகள் டிஜிட்டல் மயமாக்கப்படவேண்டும்.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், சென்னை மாநகரப் பகுதியில் டிஜிட்டல் முறையில் கேபிள் ஒளிபரப்பு மேற்கொள்ள கடந்த 5.7.2012 அன்றும், தமிழ்நாட்டின் மற்ற பகுதிகளுக்கு 23.11.2012 அன்றும் டிஜிட்டல் ஒளிபரப்பு உரிமம் (DAS) வேண்டி, மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்திடம் விண்ணப்பித்து, அவ்விண்ணப்பங்கள் நிலுவையில் இருந்தன.

மாநில அரசின் இடைவிடாத தொடர் முயற்சிகளின் காரணமாக மத்திய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம், 17.4.2017 அன்று தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு டிஜிட்டல் ஒளிபரப்பு உரிமம் (DAS Licence) வழங்கியுள்ளது. மாநில அரசு நிறுவனம் ஒன்றுக்கு டிஜிட்டல் ஒளிபரப்பு உரிமம் (DAS Licence) வழங்கப்பட்டிருப்பது, இந்தியாவிலேயே இதுவே முதல்முறையாகும்.

**4.8 டிஜிட்டல்மயமாக்க தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் எடுத்துவரும் நடவடிக்கைகள்:**

**(அ) செட்டாப் பாக்ஸ், நிபந்தனை அணுகல் அமைப்பு (Conditional Access System (CAS)) மற்றும் சந்தாதாரர் மேலாண்மை அமைப்பு (Subscriber Management System (SMS))கொள்முதல்**

1. உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி 6.5.2017 அன்று வெளியிடப்பட்டு, அதன் மூலம் 60 இலட்சம் தரமான வரையறை (Standard Definition) செட்டாப் பாக்ஸ்கள், 10 இலட்சம் உயர் வரையறை (High Definition) செட்டாப் பாக்ஸ்கள், CAS, SMS, மூவகை சேவை (Triple Play) செட்டாப்பாக்ஸ்கள் மற்றும் கேபிள் சேவை இடைமுக விவரக்குறிப்பின் மீதான தரவு (Data Over Cable Service Interface Specification (DOCSIS)) ஆகியவை கொள்முதல் செய்யப்பட உள்ளன. பல்வேறு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு அவை பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. விரைவில் செட்டாப் பாக்ஸ்கள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட உள்ளன.

2. அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் டிஜிட்டல் மயமாக்கம் தொடர்பான விரிவான திட்ட அறிக்கை மீது நிர்வாக அனுமதி அளித்து அரசாணை (நிலை) எண்.7 தகவல் தொழில்நுட்பவியல் (நிர்.2) துறை, நாள். 30.5.2017-ல் ஆணைகள் வெளியிடப்பட்டன.

**(ஆ) தமிழ்நாடு முழுவதற்கும் டிஜிட்டல் கேபிள் டிவி சிக்னல்களை விநியோகிப்பதற்கு எடுத்து வரும் நடவடிக்கைகள்**

1 ரெயில்டெல் (RailTel) மற்றும் பிஎஸ்என்எல் (BSNL) நிறுவனங்களின் அலைக்கற்றையை குத்தகைக்கு எடுத்து அதன்மூலம் மாநிலம் முழுவதும் சிக்னல்களை பெற தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் இணைக்கக் கடிதம் (LoA) வழங்கியுள்ளது.

2. சென்னையில் உள்ள தலைமைக் கட்டுப்பாட்டு அறையினை MPEG2 தரத்திலிருந்து MPEG4 தரத்திற்கு உயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தில் பதிவு செய்துள்ள உள்ளூர் கேபிள் டிவி ஆப்பரேட்டர்கள் தங்களுடைய சந்தாதாரர்களுக்கான செட்டாப் பாக்ஸ் தேவையினை இணைய வழியில் பதிவு செய்துள்ளனர்.

**4.9 தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் அரசு இ-சேவை மையங்கள்**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 4.8.2014 அன்று மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தபடி, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், தமிழ்நாடு முழுவதும் 487 அரசு இ-சேவை மையங்களை அனைத்து வட்டங்களிலும் மற்றும் சென்னை மாநகராட்சிப் பகுதிகளிலும் துவக்கியுள்ளது. மேலும், எல்காட் நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட்டு வந்த அரசு இ-சேவை மையங்களை தன்வயப்படுத்தி ஆக மொத்தம் 654 மையங்களை, தலைமைச் செயலகம், பெருநகர சென்னை மாநகராட்சி தலைமை அலுவலகம், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள்,

மாநகராட்சி அலுவலகங்கள், நகராட்சி அலுவலகங்கள், மண்டல அலுவலகங்கள், கோட்ட அலுவலகங்கள் ஆகிய இடங்களில் செயல்படுத்தி வருகிறது.

இச்சேவை மையங்களில் அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய அகன்ற அலைவரிசை இணைய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்சேவை மையங்கள் வருவாய்த் துறை சான்றிதழ்கள், சமூக நலத்துறை திட்டங்களுக்கான விண்ணப்பங்கள், பயன்பாட்டு சேவைகளுக்கான கட்டணம் செலுத்தும் வசதி, தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தின் புத்தகங்களைப் பெற இணையவழிப் பதிவு செய்வது, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தேர்விற்கு விண்ணப்பித்தல், வாக்காளர் வண்ணப் புகைப்பட அடையாள அட்டை அச்சிடுதல், பிளாஸ்டிக் ஆதார் அட்டை வழங்குதல் மற்றும் மின்னணு குடும்ப அட்டை வழங்குதல் போன்ற சிறந்த சேவைகளைப் பொதுமக்களுக்கு வழங்கி வருகிறது. தொடங்கிய 29 மாதங்களிலேயே தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் அரசு

இ-சேவை மையங்கள் மூலம் சுமார் 1.10 கோடிக்கு மேற்பட்ட மக்கள் பயனடைந்துள்ளனர்.

### 4.10 நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்கள் (PECs)

1.10.2016 முதல் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் ஆதார் பதிவு சேவைகளைப் பொதுமக்களுக்கு வழங்குவதற்காக 303 நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்களை தமிழ்நாடு முழுவதுமுள்ள வட்டங்களிலும், சென்னை மாநகராட்சிப் பகுதிகளிலும் துவக்கி உள்ளது. மேலும், முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நோயுற்று படுக்கையில் உள்ளவர்களின் நலனுக்காக நடமாடும் ஆதார் சேர்க்கை மையம் ஒன்று சென்னையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மையங்கள் மூலம் இதுவரை 16 இலட்சம் மக்கள் பயனடைந்துள்ளனர். மேலும், இந்த மையங்களில் பொதுமக்கள் தங்கள் ஆதார் பதிவுகளில் உள்ள முகவரி, செல்பேசி எண் போன்ற மக்கள்தொகை சார்ந்த விவரங்களை மாற்றம் செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 4.11 அதிவேக அகன்ற அலைவரிசை இணையதள சேவைகள்

14.9.2015 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டப்பேரவையில் விதி 110 அறிவிப்பின் படி, தமிழ்நாட்டில் பாரத்நெட் திட்டத்தினை செயல்படுத்தும் சிறப்பு நோக்க நிறுவனமாகத் (SPV) தமிழ்நாடு பைபர்நெட் கார்ப்பரேஷன் அமைக்கப்படும் எனவும், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் தனது இணைய சேவை வழங்கும் உரிமம் (ISP License) மூலம் குறைந்த கட்டணத்தில் உயர்தரமான இணைய சேவைகளையும், இணையதளத் தொலைக்காட்சி சேவைகளையும் (IPTV) மற்றும் அதிவேக அகன்ற அலைவரிசை சேவைகளையும் கிராமங்கள் வரை வழங்கும் எனவும் அறிவித்தார்கள். அதன்படி, தமிழ்நாடு பைபர்நெட் கார்ப்பரேஷன் துவங்குவதற்கான அரசாணை 1.2.2016 அன்று வெளியிடப்பட்டு இந்நிறுவனத்திற்கு அரசின் பங்கு முதலீடாக ரூ.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பாரத்நெட் திட்டத்தினை செயல்படுத்துவதற்காக மத்திய அரசு, மாநில அரசு மற்றும் Bharat Broadband Network Ltd. (BBNL) நிறுவனத்திற்கு இடையேயான கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் 25.4.2017 அன்று பரிமாறிக்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், இணையதள சேவைகளை வழங்குவதற்காக வோடபோன் நிறுவனத்தினை ஒப்பந்தப்புள்ளி மூலம் தேர்வு செய்துள்ளது. வோடபோன் நிறுவனத்திடம் இருந்து இணையதள அலைக்கற்றை குத்தகைக்கு எடுக்கப்பட்டு, 1.3.2016 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் "இல்லந்தோறும் இணையம்" என்னும் திட்டம் துவக்கப்பட்டு மாவட்ட தலைநகரங்களில் உள்ள 1100 சந்தாதாரர்களுக்கு இணையதள சேவைகள் வழங்கப்பட்டது. தற்பொழுது சுமார் 2577 சந்தாதாரர்கள் இச்சேவைகளைப் பெற்று வருகின்றனர்.

மேலும், இணையதள சேவையைப் பெறும் சந்தாதாரர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், சேவைகளை விரிவுபடுத்தவும், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்துடன் வர்த்தகப் பங்குதாரர்கள் என்ற அடிப்படையில் வருவாய் பங்கீட்டு முறையில் இணையதள சேவைகளை வழங்க விருப்பம் கோரும் விண்ணப்பங்களின் (EoI) மூலம், 392 விண்ணப்பங்களைப் பெற்று தகுதியுள்ள 170 விண்ணப்பதாரர்களுக்கு ஆணைகள் வழங்கி உள்ளது. இதன் மூலம் மேலும் 24,750 சந்தாதாரர்கள் இந்நிறுவனத்தின் இணையதள சேவைகளைப் பெறவுள்ளனர்.

மேலும், இணையதளத் தொலைக்காட்சி (IPTV) சேவையினை வழங்குவதற்காக அரசாணை (நிலை) எண்.2, தகவல் தொழில்நுட்பவியல் (நிர்.2) துறை, நாள் 25.1.2016-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதற்கான விரிவான திட்ட அறிக்கை (DPR) தயார் செய்யப்பட்டு வருகிறது.

**4.12 இலவச பொது WiFi சேவைகள் மற்றும் பள்ளிகளுக்கு இணைய வசதி**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 23.9.2016 அன்று 50 இடங்களில் "அம்மா வைஃபை மண்டலங்கள்" (Amma WiFi Zones) அமைக்கப்படும் எனவும், 50 அரசுப் பள்ளிகளில் கட்டணமில்லா இணைய வசதி ஏற்படுத்தப்படும் எனவும், இதற்காக ரூ.10 கோடி அரசு மூலதன நிதியும் ரூ.1.5 கோடி இயக்க நிதியும் ஒதுக்கப்படும் எனவும் அறிவித்தார்கள்.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மூலம், சோதனை அடிப்படையில் முதற்கட்டமாக சென்னையில் 5 இடங்களில் "அம்மா வைஃபை" (WiFi) மண்டலங்களை ரூ.1.26 கோடி செலவில் ஏற்படுத்தவும், மீதமுள்ள 45 பொது இடங்களில் ரூ.7.30 கோடி செலவில் "அம்மா வைஃபை" (WiFi) மண்டலங்களை ஏற்படுத்தவும் உத்தேசிக்கப் பட்டுள்ளது.


அகன்ற அலைவரிசை இணையதள சேவைத் திட்டத்தில், முதற்கட்டமாக கல்வியில்

பின்தங்கியுள்ள வட்டாரங்களில் 50 பள்ளிகளில் ரூ.86.50 இலட்சம் மூலதன செலவினத்திலும், அதன்பின் கல்வியில் பின்தங்கியுள்ள வட்டாரங்களில் 316 பள்ளிகளில் ரூ.5.47 கோடி மூலதன செலவினத்திலும் ரூ.2.36 கோடி இயக்க மற்றும் பராமரிப்பு செலவினத்திலும் அகன்ற அலைவரிசை இணையதள சேவைகள் வழங்கப்படவுள்ளன.

## 4.13 தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் நிதிநிலை செயல்பாடு


தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், தமிழக அரசின் 25 கோடி ரூபாய் பங்கு மூலதனத்தில் துவக்கப்பட்டது. மேலும், இந்நிறுவனம் ரூ.33 கோடி அரசிடமிருந்து கடனாக பெற்றுள்ளது. 2008-09-ஆம் நிதியாண்டில் ரூ.2.44 கோடி வருவாய் மட்டுமே ஈட்டிய தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், 2013-14-ஆம் நிதியாண்டில் ரூ.163.92 கோடி வருவாயும், 2014-15-ஆம் நிதியாண்டில் ரூ.181.91 கோடி வருவாயும், 2015-16-ஆம் நிதியாண்டில் ரூ.223.53 கோடி வருவாயும் ஈட்டியுள்ளது. மேலும் 2016-17-ஆம்

நிதியாண்டில் ரூ.233.67 கோடி (தணிக்கைக்கு முன்) வருவாய் ஈட்டியுள்ளது.




படம் 18

துவங்கியதிலிருந்து 2011-12-ஆம் நிதியாண்டு வரை இந்நிறுவனம் சுமார் 15.03 கோடி ரூபாய் நட்டத்தில் இருந்தது. எனினும் 2011 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் இந்நிறுவனம் புனரமைக்கப்பட்டு புத்துயிரூட்டப்பட்ட பின், சந்தாதாரர் எண்ணிக்கையை அதிகரித்ததின் மூலமும், உள்ளூர் தொலைக்காட்சி சேனல் வருவாய் மூலமும் 2012-13, 2013-14, 2014-15, 2015-16 மற்றும் 2016-17-ஆம் நிதியாண்டுகளில் கணிசமான இலாபம் ஈட்டியுள்ளது.




படம் 19

### 4.14 2013-14-ஆம் ஆண்டின் நிதிநிலை செயல்பாடு

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் துவங்கிய காலத்தில் இருந்து, முதன்முறையாக 2013-14-ஆம் நிதியாண்டில், முந்தைய ஆண்டுகளில் குவிந்த நட்டங்களை சரிசெய்து நிகர இலாபம் ஈட்டியுள்ளது. வருவாயினை அதிகரிக்கும் நோக்கில் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளினால், குறிப்பாக சந்தாதாரர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விளைவாக, 1.4.2013 அன்று 62.31 இலட்சம் என்றிருந்த சந்தாதாரர்களின் எண்ணிக்கை, 31.3.2014

அன்று 65.93 இலட்சம் என உயர்ந்துள்ளது. மேலும், காலியாக இருந்த உள்ளூர் தொலைக்காட்சி சேனல் அலைவரிசைகளுக்கு, ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் வாயிலாகவும், விருப்பம் கோரும் விண்ணப்பங்கள் (EOI) முறையின்படி தனியார் உள்ளூர் தொலைக்காட்சி சேனல்களுக்கு ஒதுக்கீட்டு ஆணை வழங்கியதன் மூலமும் வருவாய் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்நிறுவனம் 2013-14-ஆம் நிதியாண்டில், மாதம் ரூ.15.78 கோடியினை கட்டணச்சேனல் ஒளிப்பரப்பாளர்களுக்கு மாத சந்தாவாக, அதாவது ஒரு வருடத்திற்கு ரூ.189.36 கோடி செலுத்தி வந்தது. இதனால் வருவாய் மற்றும் செலவுத்தொகைக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டதால், செலவினத்தை குறைக்கும் நடவடிக்கையாக, கட்டணச்சேனல் ஒளிபரப்பாளர்களிடமிருந்து மாத சந்தாக் கட்டணத்தில் 2013-14-ஆம் நிதியாண்டில் மொத்தம் ரூ.38.40 கோடி தள்ளுபடித் தொகையினைப் பெற்றுள்ளது. இத்தகைய பல்வேறு

நடவடிக்கைகளின் மூலம் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் 2013-14-ஆம் நிதியாண்டில் ரூ12.02 கோடி நிகர இலாபம் ஈட்டியுள்ளது. 2013-14-ஆம் நிதியாண்டில், குவிந்த நட்டமான ரூ.9.83 கோடியை சரிசெய்து, ரூ.2.18 கோடி உபரி வருவாய் ஈட்டியுள்ளது. இதில் ரூ.1.50 கோடி, அரசுக்கு ஈவுத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

### 4.15 2014-15-ஆம் ஆண்டின் நிதிநிலை செயல்பாடு

2014-15-ஆம் நிதியாண்டில், கட்டணச் சேனல் ஒளிபரப்பாளர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் மூலம் ஏற்கனவே செலுத்தி வந்த சந்தாத்தொகை கணிசமாக, அதாவது வருடத்திற்கு ரூ.8.59 கோடி வரை குறைக்கப்பட்டுள்ளது. மேலும் 2013-14-ஆம் நிதியாண்டில் ரூ.163.92 கோடி என இருந்த வருவாய், 2014-15-ஆம் நிதியாண்டில் ரூ.181.91 கோடி என உயர்ந்துள்ளது. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், 2014-15-ஆம் நிதியாண்டில் ரூ.18.46 கோடி நிகர இலாபம் ஈட்டியுள்ளது. மேலும் 2014-15-ஆம் நிதியாண்டிற்கான ஈவுத்தொகையாக ரூ.5.50 கோடி அரசுக்கு செலுத்தியுள்ளது.

## 4.16 2015-16-ஆம் ஆண்டின் நிதிநிலை செயல்பாடு

2015-16-ஆம் நிதியாண்டில், கட்டணச் சேனல் ஒளிபரப்பாளர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் மூலம் ஏற்கனவே செலுத்தி வந்த சந்தாத்தொகை கணிசமாக, அதாவது வருடத்திற்கு ரூ.11.50 கோடி வரை குறைக்கப்பட்டுள்ளது. மேலும் 2014-15-ஆம் நிதியாண்டில் ரூ.181.91 கோடி என இருந்த வருவாய், 2015-16-ஆம் நிதியாண்டில் ரூ.223.53 கோடி என உயர்ந்துள்ளது. 2015-16-ஆம் நிதியாண்டில் ரூ.34.95 கோடி நிகர இலாபம் ஈட்டியுள்ளது (வரிக்குப் பின்).

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், 2015-16-ஆம் நிதியாண்டிற்கான ஈவுத்தொகையாக ரூ.10.49 கோடி அரசுக்கு செலுத்தியுள்ளது. மேலும் 2016-ஆம் ஆண்டில், முதலமைச்சர் நிவாரண நிதிக்கு ரூ.5 கோடி வழங்கியுள்ளது.

## 4.17 2016-17-ஆம் ஆண்டின் நிதிநிலை செயல்பாடு

2016-17-ஆம் நிதியாண்டில் ரூ.233.67 கோடி (தணிக்கைக்கு முன்) வருவாய் ஈட்டியுள்ளது. மேலும்

2016-17-இல் இந்நிறுவனம் வரிக்குப் பின் ரூ.41 கோடி (தணிக்கைக்கு முன்) இலாபம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அத்தியாயம் – V

# தமிழ் இணையக் கல்விக்கழகம்

## 5.1 முன்னுரை

உலகளாவிய தமிழ்ச் சமுதாயத்திற்கும், தமிழியலில் ஈடுபாடுள்ள மற்றையோருக்கும் இணையம் வழி, தமிழ்மொழி, தமிழர் வரலாறு, கலை, இலக்கியம், பண்பாட்டு வளங்களை வழங்குவதையும், வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதையும் நோக்கமாகக் கொண்டு தமிழ் இணையப் பல்கலைக்கழகம் ஒரு கூட்டுறவுச் சங்கமாகத் தமிழக அரசால் 2000-ஆம் ஆண்டு, மே திங்கள் 18-ஆம் நாள் தொடங்கப்பட்டது. பின்னர் தமிழ் இணையப் பல்கலைக்கழகம், 'தமிழ் இணையக் கல்விக்கழகம்' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இதன் இணையதளம் 2001-ஆம் ஆண்டு பிப்ரவரி 17-ஆம் நாள் தொடங்கப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

### 5.2 நோக்கம்

தமிழ் இணையக் கல்விக்கழகம் பின்வருவனவற்றை தனது நோக்கங்களாகக் கொண்டுள்ளது:-

- ❖ கணினித் தமிழுக்கான தீர்வுகளை உருவாக்குதல்.
- ❖ உலகளவில் தமிழ்ச் சமுதாயத்தினர்க்கும், தமிழியலில் ஈடுபாடுள்ள மற்றையோர்க்கும் தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு பற்றிய கற்றல் சாதனங்களை உருவாக்கி இணையம் வழியாக அளித்தல்.
- ❖ உலகளாவிய தமிழ்ச் சமுதாயத்தினர்க்கு, பண்பாட்டுத் தேவைக்கேற்ப பாடத் திட்டங்களை உருவாக்கி, அவர்கள் தங்கள் பாரம்பரியத்தோடு தொடர்பு கொண்டு வாழத் துணைபுரிதல்.
- ❖ உலகெங்கும் வாழும் தமிழர்கள் உருவாக்கும் கல்வியறிவு வளங்களைத் தொகுத்து,

அவற்றைப் பரவலாக்கும் முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுதல்.

- தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு தொடர்பான பாடத்திட்டங்களை வழங்குதல்.
- கல்வியறிவு பெறுவதற்காகவோ,கற்றலுக்காகவோ, அல்லது தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் வழியாக சான்றிதழ்கள், பட்டயங்கள், பட்டங்கள் பெறுவதற்காகவோ கற்போருக்கு வாய்ப்புகளை உருவாக்கித் தருதல்.

### 5.3 செயல்பாடுகள்

#### 5.3.1 கல்வித் திட்டங்கள்

அரிச்சுவடி முதல் ஆராய்ச்சி வரை கல்வித் திட்டங்களை வகுத்து வழங்குதல்.

#### 5.3.2 கணினித் தமிழ்

தமிழ் மென்பொருள் உருவாக்கத்திற்கு தேவையான அடிப்படைத் தரவுகளை (Data) உருவாக்க ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

### 5.3.3 மின்நூலகம்

மாணவர்களுக்கும் மற்றையோருக்கும் பயன்படும் வகையில் ஒரு மின்நூலகம் (Digital Library) உருவாக்குதல்.

### 5.3.4 தமிழ் மென்பொருள் உருவாக்கல் (Tamil Software Development)

தமிழக அரசு வழங்கிய 'தமிழ் மென்பொருள் உருவாக்க நிதியின்' மூலம் தமிழில் மென்பொருள்களை உருவாக்குதல் மற்றும் பிற மென்பொருள் ஆய்வாளர்கள் உருவாக்கும் மென்பொருள்களைச் சோதித்துச் சான்றளித்தல்.

### 5.3.5 தமிழ்க் கலை மற்றும் பண்பாட்டுக் கூறுகளை ஆவணப்படுத்தலும் காப்பதும்

தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளைத் தகவல் பரவலாக்கத்திற்கும் அறிவுப் பகிர்வுக்கும் உதவும் வகையில் ஆவணப்படுத்தி இணைய தளத்தில் தரவேற்றுதல்.

## 5.4 கல்வித் திட்டங்கள்

தமிழ் இணையக் கல்விக்கழகம் தற்போது மழலைக் கல்வி, சான்றிதழ்க் கல்வி, பட்டயம், மேற்பட்டயம், இளநிலை தமிழியல் பட்டம் ஆகிய கல்வித் திட்டங்களை அளித்து வருகிறது. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

| **மழலைக் கல்வி** | **சான்றிதழ்க் கல்வி** | **மேற்சான்றிதழ்க் கல்வி** | **பட்டம்** |
|---|---|---|---|
| அறிமுக நிலைப் பாடம் | அடிப்படை நிலை (1-2-ஆம் வகுப்புக்கு நிகரானது) | நிலை -1 (7-8-ஆம் வகுப்புக்கு நிகரானது) | பட்டயம் |
| | இடைநிலை (3-4-ஆம் வகுப்புக்கு நிகரானது) | நிலை-2 (9-10-ஆம் வகுப்புக்கு நிகரானது) | மேற்பட்டயம் |
| | மேல்நிலை (5-6-ஆம் வகுப்புக்கு நிகரானது) | நிலை-3 (11-12ஆம் வகுப்புக்கு நிகரானது) | இளநிலை பட்டம் (தமிழியல்) |

மேற்கண்ட கல்வித் திட்டங்களில் சேருவதற்கு வயது வரம்பு இல்லை.

74 நாடுகளைச் சேர்ந்த 16,923 மாணவர்கள் பல்வேறு பாடத்திட்டங்களுக்குப் பதிவு செய்துள்ளனர். இதுவரையில், 5,880 மாணவர்கள் சான்றிதழ்ப் படிப்பிலும், 275 மாணவர்கள் மேற்சான்றிதழ்ப் படிப்பிலும், 630 மாணவர்கள் பட்டயப் படிப்பிலும், 321 மாணவர்கள் மேற்பட்டயப் படிப்பிலும் மற்றும் 232 மாணவர்கள் பட்டப் படிப்பிலும் தேர்ச்சி பெற்றுள்ளனர். உலகெங்கிலும் உள்ள 19 நாடுகளில் உள்ள 86 ஒருங்கிணைப்பு மையங்கள் (Contact Centers) மூலம் இக்கல்வித் திட்டங்கள் வழங்கப்படுகின்றன.



**படம் 20: சோஹர் தமிழ் மன்றம், சோஹர், ஓமான்**

மழலை, அடிப்படைநிலை, இடைநிலை, மேல்நிலை மாணவர்களுக்கும் ஏனையோருக்கும் பயன்படும் வகையில் தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் தமிழ் கற்க, தமிழ் கற்போம், திருக்குறள், கலைச்சொல் பேரகராதி ஆகிய குறுவட்டுகள் (CDs) உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

### 5.5 தகவலாற்றுப்படை

தமிழ் மொழி, இலக்கியம், கலை உள்ளிட்டவைகளின் விரிவான மற்றும் ஒருங்கிணைந்த தகவல் களஞ்சியம் ஒன்றினை உருவாக்க அரசாணை (நிலை) எண். 4, தகவல் தொழில்நுட்பவியல் துறை, நாள் 20.02.2015-இல் ஆணையிடப்பட்டு, இதற்கென ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:-

- ❖ 1457 அருங்காட்சியப் பொருட்கள் மற்றும் சிற்பங்கள் புகைப்படமாக்கப்பட்டு

அவற்றிற்குரிய விளக்கங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

- தமிழகத்திலுள்ள கோயில் கலைகள், கல்வெட்டுகள், ஓவியங்கள், சிற்பங்கள் மற்றும் தொல்லியல் சின்னங்கள் தொடர்பான 44525 ஒளிப்படங்கள் பல்வேறு மூலங்களிலிருந்து புகைப்படமாக்கப்பட்டு சேகரிக்கப்பட்டுள்ளன.
- தமிழகத்திலுள்ள 120 புராதன கோயில்களைப் பற்றிய அடிப்படை விளக்கங்களும் ஒளிப்படங்களும் மின்நூலக இணையத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன.
- 500 அரிய பழைய தமிழ் நாணயங்களின் ஒளிப்படங்கள் தொகுக்கப்பட்டு அவற்றிற்குரிய விளக்கங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.
- தமிழ்ப் பண்பாட்டுடன் தொடர்புடைய 5000 ஒளிப்படங்கள் விளக்கத்துடன் இணைய தளத்தில் ஏற்றத் தயாராக உள்ளன.

- 32 இடங்களில் உள்ள 426 கல்வெட்டுகளின் ஒளிப்படங்கள் விளக்கத்துடன் தொகுக்கப்பட்டுள்ளன
- 7 இடங்களில் உள்ள 572 ஓவியங்களின் ஒளிப்படங்கள் உரிய விளக்கத்துடன் தொகுக்கப்பட்டுள்ளன.
- பழங்காலக் கோயில்கள் மற்றும் அருங்காட்சியகங்களிலிருந்து 1230 சிற்பங்களின் ஒளிப்படங்கள் விளக்கத்துடன் தொகுக்கப்பட்டுள்ளன.
- 882 கல்வெட்டுத் தொடர்பான பக்கங்கள் ஒளி உணரி (Optical Character Recognition) மூலம் உருமாற்றம் செய்யப்பட்டுள்ளன.
- பண்பாட்டு வரைபட உருவாக்கத் திட்டத்தின் கீழ், தொல்லியல் துறை பகுதிகள் மற்றும் கோயில்களை ஆவணப்படுத்தும் பணி முதற்கட்டமாக மதுரையிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. இப்பகுதியில் உள்ள கோயில்கள் மற்றும் தொல்லியல் துறையின்

பகுதிகளிலிருந்து இதுவரை 2300 ஒளிப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், மாநில தொல்லியல் துறை மற்றும் கோயில் நிர்வாகங்களிடமிருந்து 2330 ஒளிப்படங்களும் பெறப்பட்டுள்ளன.


## 5.6 மின் நிகண்டு, மின் கற்றல் இணைய தளம் மற்றும் மின்னுருவாக்கம்

இவ்வரசு தமிழ் மின் நிகண்டு, மின் கற்றல் இணைய தளம் மற்றும் மின்னுருவாக்கம் ஆகிய திட்டங்கள் தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் செயற்படுத்தப்படும் என்று ஆணையிட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு:-

### 5.6.1 தமிழ் மின் நிகண்டு

ஒரே பொருளைத் தருகின்ற சொற்களின் தொகுப்புடன் உச்சரிப்பும் கொண்ட 'மின் நிகண்டு' (Visual Thesaurus) உருவாக்க அரசாணை (2டி) எண்.16, தகவல் தொழில்நுட்பவியல் துறை, நாள் 03.09.2014-ல் ரூ.27.42 இலட்சம் நிதி அரசால் வழங்கப்பட்டது. இம்மின் நிகண்டின்

தரவுத்தளம் கணினி மொழிபெயர்ப்பிற்குப் பயன்படும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மின் நிகண்டு அகராதியிலிருந்து சற்று வேறுபட்டதாகும். இதுவரை, 13,000 தலைச்சொற்களுக்கு 70,000 பொருள்கள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும், இப்பொருள்கள் எந்த இலக்கியத்தில் இடம் பெறுகின்றன என்பதும் சுட்டிக்காட்டப்படுகின்றன.




படம் 21

### 5.6.2 மின் கற்றல் இணைய தளம் (e-Learning Web Portal)

மாணவர்கள் எளிதாக தமிழைக் கற்பதற்கு உதவியாக மின் கற்றல் இணைய தளம் அமைக்க ரூ.12.26 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கி அரசாணை (2டி) எண்.15, தகவல் தொழில்நுட்பவியல் துறை, நாள் 03.09.2014-இல் ஆணையிடப்பட்டது. இதன் மூலம், பழம்பெரும் அரிய நூல்கள் மற்றும் உலகத் தமிழருக்குப் பயன்தரும் பல செய்திகள் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் இணைய தளத்தில் விரைவில் மீள வெளியிடப்பட்டு மெருகூட்டப்படும்.

### 5.6.3 நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள் மின்னுருவாக்கம்

நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்களை மின்னுருவாக்கம் செய்வதற்கு அரசாணை (நிலை) எண்.5, தகவல் தொழில்நுட்பவியல் துறை, நாள் 20.02.2015-இல் ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:-

- மின்னுருவாக்கப்பட்ட நூல்களைத் தேடுதல் வசதியுடன் மாற்றுவதற்கு ஏதுவாக கூகுள் ஒளி உணரி (Google OCR) தொழில்நுட்ப உதவியுடன் உள்ளகத் திட்டமாகத் தமிழ் இணையக் கல்விக்கழகத்திலேயே பணிகள் நடைபெற்று வருகின்றன.

- முதற்கட்டமாக இதுவரை நாட்டுடைமை ஆக்கப்பட்ட 178 நூல்கள் மேற்கண்ட முறையில் உருமாற்றப்பட்டு, தொகுப்பு மற்றும் தர சரிபார்ப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 5.7 தமிழ்க் கலை மற்றும் பண்பாட்டுக் கூறுகளை ஆவணப்படுத்திப் பாதுகாத்தல் மற்றும் தகவலாற்றுப்படை மாதாந்திர சொற்பொழிவு

தமிழ்ப் பாரம்பரியம், கலை மற்றும் பண்பாடு பற்றிய தொடர் சொற்பொழிவு சிறந்த அறிஞர்கள் மற்றும் வல்லுநர்களைக் கொண்டு தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் மாதந்தோறும் நடத்தப்பட்டு

வருகிறது. இவை அனைத்தும் பதிவு செய்யப்பட்டு, உலகெங்கும் வாழும் தமிழர்கள் பார்த்துப் பயன்பெறும் வகையில் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் இணையத்தில் தரவேற்றி (Webcast) ஆவணப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், தமிழர்களின் சிற்பக் கலை, தமிழ்மொழி மற்றும் தமிழர் பண்டைய நாகரிகத்தின் பழமை குறித்துத் தலைச்சிறந்த அறிஞர்களைக் கொண்டு ஒவ்வொரு மாதமும் சொற்பொழிவு நடத்தப்பட்டு அவை தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் இணைய தளத்தில் தரவேற்றப்பட்டுள்ளன. இதுவரை 25 மாதாந்தர சொற்பொழிவுகள் நடைபெற்றுள்ளன.

## 5.8 தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் பரப்புரைப்பணிகள்

தமிழ் இணையக் கல்விக்கழகம் அனைத்து நிலைகளிலும் கணித்தமிழை வளப்படுத்தவும் வலுப்படுத்தவும் ஒருங்கிணைந்த முறையிலான பரப்புரைப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. இப்பரப்புரைப் பணிகளின் பொருட்டு,

1. தமிழ்நாட்டின் உயர்க்கல்வி நிறுவனங்களில்

**கணித்தமிழ்ப் பேரவை**, 2. இணையம் சார்ந்த தமிழ் உள்ளடக்கங்களை மேம்படுத்த **தமிழ்ப் பெருங்களஞ்சியத் திட்டம்**, 3. கான் கல்விக்கழக காணொலிகளின் தமிழ்த் தன்னிலையாக்கத் திட்டம் மற்றும் 4. பொதுவளம் மற்றும் படைப்பாக்க முயற்சிகள் ஆகியவற்றினைச் செயல்படுத்தி வருகின்றது.

### 5.8.1 கணித்தமிழ்ப் பேரவை

அடுத்த தலைமுறையினர் கணித்தமிழின் இன்றியமையாமையைப் புரிந்துகொள்ள வேண்டும் என்னும் அடிப்படையில் கணித்தமிழ்ப் பேரவைகள் தமிழக உயர்கல்வி நிறுவனங்களில் தொடங்கப் பட்டுள்ளன. தமிழ் இணையக் கல்விக்கழகம் மாநில முழுவதும் 100 கணித்தமிழ்ப் பேரவைகளைத் தொடங்கியுள்ளது. இதுவரை 10,000 மாணவர்கள் உறுப்பினர்களாகப் பதிவு செய்து கணித்தமிழ் திட்டப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அரசு, இத்திட்டத்திற்காக அரசாணை (நிலை) எண்.6, தகவல் தொழில்நுட்பவியல் துறை, நாள் 29.02.2016-இல் ரூ.25 இலட்சம் நிதி ஒப்பளிப்பு அளித்துள்ளது.

### 5.8.2 தமிழ்ப் பெருங்களஞ்சியத் திட்டம்

தமிழ் இணையக் கல்விக்கழகம் தமிழ்ப் பெருங்களஞ்சியத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம், வேளாண் அறிவியல் தமிழ் இயக்கம் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து, வேளாண்மை, மீன்வளத்துறை சார்ந்த ஏறத்தாழ 67,500 கலைக்களஞ்சியக் கட்டுரைகளை உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தமிழில் 210-க்கும் மேற்பட்ட பிரிவுகளில் பல்லூடகக் கலைக் களஞ்சியங்களை (Multimedia Encyclopedia) உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு, மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களின் கலைக் களஞ்சிய ஆவணங்களைத் தொகுக்கும் பணியும் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

### 5.8.3 கல்வி சார்ந்த காணொலிகளின் தமிழ்த் தன்னிலையாக்கம்

கான் கல்விக்கழகம் (Khan Academy) எனும் அமைப்பு ஏறத்தாழ 8,300 காணொலிகளை

ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளது. தமிழ் இணையக் கல்விக் கழகம், இக்காணொலிகளைத் தமிழில் மொழிமாற்றம் செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. எனவே, தமிழில் கல்வி உள்ளடக்கங்களை மேம்படுத்தும் வகையில் 1265-க்கும் மேற்பட்ட காணொலிகள் தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டு, தமிழ் இணையக் கல்விக்கழக இணையத்தில் ஏற்றப்பட்டுள்ளன.

### 5.8.4 பொதுவளம் மற்றும் படைப்பாக்க முயற்சிகள்

இணையத்தில் தமிழ்மொழியின் பயன்பாட்டை அதிகரித்திடும் நோக்கோடு தமிழ் இணையக் கல்விக்கழகம், 'விக்கிபீடியா' போன்ற தன்னார்வ அமைப்புகளுடன் இணைந்து, தமிழகமெங்கும் பள்ளி, கல்லூரிகளில் விழிப்புணர்வுப் பரப்புரை நிகழ்த்துதல், இளைய தலைமுறையினரின் கணித்தமிழ்த் திறனை ஊக்குவிப்பதற்காக பல்வேறு போட்டிகளை நடத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

## 5.9 புதிய செயல் திட்டங்கள்

உலகெங்கும் கணித்தமிழ் வளர்ச்சியைப் பெருக்கிடவும், ஆராய்ச்சியாளர்கள், அரசு அலுவலர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகிய அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய ஓர் உகந்த சூழலை உருவாக்கிடும் நோக்கோடு புதிய கணித்தமிழ்த் திட்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அத்திட்டங்களைச் செம்மையாக வடிவமைத்திட மூத்த தமிழறிஞர்கள், மொழியியல் வல்லுநர்கள், கணித்தமிழ் ஆர்வலர்கள் மற்றும் மென்பொருள் நிறுவனப் பிரதிநிதிகள் அடங்கிய ஓர் உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டு பல கூட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன.

### 5.9.1 தமிழ்த் தரவகம் உருவாக்கம்

சங்க, இடைக்கால மற்றும் தற்காலத் தமிழிலிருந்து எடுக்கப்பட்ட 150 மில்லியன் வார்த்தைகள் கொண்ட தரவகம் உருவாக்கப்பட்டு வருகின்றது. தமிழ் இணையக் கல்விக்கழகத் தரவகத்தில் இதுவரை 150 மில்லியன் வார்த்தைகள் சேகரிக்கப்பட்டுள்ளன. Text Encoding Initiative (TEI)

தரத்தின் மூலம் சொற்கள் விரிதரவாக்கம் (Metatag) செய்யப்பட்டுள்ளன.

### 5.9.2 பகுப்பாய்வுக் கருவிகள் உருவாக்கம்

தமிழ்த் தரவுகளை ஆய்வுசெய்வதற்குக் கீழ்க்காணும் தரவு பகுப்பாய்வுக் கருவிகள் உருவாக்கப்பட்டுவருகின்றன:-

**(அ) சொல் எண்ணிக்கைக் கண்டறியும் கருவி**

இக்கருவி ஒரு கோப்பில் எத்தனைச் சொற்கள் இருக்கின்றன என்பதை அறிந்து அளிக்கும். இக்கருவியில் கூடுதலாக, சொற்களைத் தமிழில் அகர வரிசைப்படுத்தவும், ஒரு சொல் ஒன்றுக்கு மேற்பட்டுக் காணப்பட்டால் அவற்றை நீக்கும் வசதியும் அளிக்கப்பட்டுள்ளது.

**(ஆ) சொற்களை வகைப்படுத்தும் கருவி**

இக்கருவி ஓரெழுத்துச் சொற்கள், ஈரெழுத்துச் சொற்கள், மூவெழுத்துச் சொற்கள் எனப் பிரித்து அவற்றை வகைப்படுத்தி அளிக்கும். ஒரு சொல்

ஒன்றுக்கு மேற்பட்டுக் காணப்பட்டால் அவற்றை நீக்கும் வசதியும் அளிக்கப்பட்டுள்ளது.

**(இ) வரிவடிவ கணிப்புக் கருவி**

இக்கருவியானது ஒரு சொல் தமிழ் எழுத்துகளில் ஆரம்பிக்கிறதா அல்லது ஆங்கிலத்தில் (ரோம வரிவடிவம்) ஆரம்பிக்கிறதா அல்லது அரேபிய எண்களில் ஆரம்பமாகிறதா என்று கணித்து அவற்றை வரிசைப்படுத்தி அளிக்கும் திறனுடையது.

**(ஈ) முன்பின் சொற்களைக் கண்டறியும் கருவி**

இக்கருவியானது கொடுக்கப்பட்ட சொற்களின் முன்னும் பின்னும் என்ன சொற்கள் இடம்பெற்று வருகின்றன என்பதைக் கண்டறிந்து அவற்றைத் தனியாக கோப்பில் சேகரிக்கும் வசதி கொண்டது. ஒரு சொல் ஒன்றுக்கு மேற்பட்டுக் காணப்பட்டால் அவற்றை நீக்கும் வசதியும் அளிக்கப்பட்டுள்ளது.

**(உ) கோப்பின் பெயர் மாற்றி**

இக்கருவி பதிவிறக்கம் செய்யப்பட்ட கோப்புகளின் பெயர்களை எங்கிருந்தாலும் சென்று அதன் விரிவாக்கத் தொடச்சியை மாற்றி அமைக்கும்.

(ஊ) துறைப் பகுப்பி

இக்கருவியானது கொடுக்கப்பட்ட தமிழ்ச் சொற்கள் எத்துறைகளைச் சார்ந்தவை என்று கண்டறிந்து அவற்றை ஒரு தனி கோப்பாக அளிக்கும். தேவைப்படின், பல்வேறு கோப்புகளும் ஒன்றிணைக்கப்பட்டு ஒரே கோப்பாக வழங்கும் வசதியும் உள்ளது.

5.9.3 மின்நூலகம்

தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் மூலம், மின்நூலகம் அமைப்பதற்காக அரசாணை (2டி) எண்.2, தகவல் தொழில்நுட்பவியல் துறை, நாள். 25.02.2016-ல் ரூ.1 கோடி வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி, அரிய பதிப்பிக்கப்பட்ட தமிழ் நூல்கள், இதழ்கள், ஆவணங்கள், பனை ஓலைச்சுவடிகள், காகிதக் கையெழுத்து பிரதிகள், செப்புப் பட்டயங்கள், பனை ஓலைச்சுவடி ஓவியங்கள் ஆகியவற்றை ஒளிவருடல் (Scanning) செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இதுவரை 48,01,938 பக்கங்கள் ஒளிவருடல் செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே மின்னுருவாக்கம் செய்யப்பட்ட நூல்கள், பனை ஓலைச்சுவடிகள், அரிய காகிதக் கையெழுத்துப் பிரதிகள் ஆகியவை பல்வேறு நிறுவனங்களிடமிருந்து சேகரிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 30-க்கும் மேற்பட்ட நிறுவனங்களிடமிருந்து 8.12 TB (Tera byte) அளவிலான கோப்புகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

மீத்தரவு (Metadata) தயாரித்தல் பணியில் அனைத்துத் தரவுகளும் மீத்தரவு MARC 21 முறையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை 3,892 ஆவணங்களுக்கு மீத்தரவு தயாரிக்கப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளது. இத்துடன், 3,559 நூல்களுக்கு சுருக்கங்களும், அட்டவணையும் அதற்குரிய வல்லுநர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

மின்னுருவாக்கம் செய்யப்பட்ட அனைத்துப் பொருளினங்களையும் இணையவழி தரவேற்ற ஆவண மேலாண்மை அமைப்பு (Integrated Digital Archive Management System) என்ற மென்பொருள் உருவாக்கப்பட்டு, இதன் மூலம் அனைத்து மீத்தரவுகளும் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

### 5.9.4 ஒருங்குறி முறை

தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ் 99 விசைப்பலகை, ஒருங்குறி / தமிழ் அனைத்து வரியுருக்களுக்கான குறியீடு (TACE16) ஆகியவற்றின் பயன்பாட்டை அரசு அலுவலகங்களிலும், பொதுவெளியிலும் பரவலாக்குவதற்கு உரிய முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 5.9.5 அனைத்து வரியுருக்களுக்கான குறியீடு

அரசுத் துறைகள் மற்றும் அரசு சார் நிறுவனங்களின் இணையதளங்களில் தமிழின் பயன்பாட்டை முழுமையாகக் (bi-lingual) கொண்டு வரவும், அவற்றில் ஒருங்குறி/தமிழ் அனைத்து வரியுருக்களுக்கான குறியீடு (TACE16) பின்பற்றிடவும் தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 5.9.6 தமிழ் மென்பொருள்கள் உருவாக்கம்

தமிழ் மொழித் தொழில்நுட்பம் மற்றும் இயற்கை மொழி ஆய்வு நோக்கில் நீண்டகால ஆராய்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்திட தமிழ்

இணையக் கல்விக்கழகம் முடிவு செய்துள்ளது. அதன் மூலம் சொல்லாளர், பிழைதிருத்தி, ஒளிவழி எழுத்தறிவான் ஆகிய மென்பொருட்களைச் செம்மையாக்குவதும் சொல் உணர்தல், சொல்சுருக்கம் தருதல், உரை உணர்தல், தானியங்கு மொழிபெயர்ப்பு போன்ற பலவகைப் பயன்பாட்டு மென்பொருட்கள் உருவாக்குவதும் இதன் நோக்கமாகும். தமிழ் மொழியியல் ஆராய்ச்சிக்குப் பெருமளவில் உதவிட தேவையான தரவகம் மற்றும் மின்னகராதி ஆகியவற்றை உருவாக்கிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்ட (TANII) நிதியின் மூலமாக, "தமிழ் கணினியம் மற்றும் மென்பொருள் உருவாக்கல்" (Development of Tamil Computing and Software) திட்டத்திற்காக ரூ.1.50 கோடி தமிழ் இணையக் கல்விக் கழகத்திற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 15 தமிழ் மென்பொருட்கள் உருவாக்கிட வல்லுநர் குழு மூலம் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றுள், "தமிழிணையம் ஒருங்குறி மாற்றி (Tamil Unicode

Conversion Tool)” மற்றும் “10 தமிழிணையம் ஒருங்குறி எழுத்துருக்கள் (10 Tamil Unicode Fonts)” உருவாக்கப்பட்டு அவை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 23.5.2017 அன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கென வெளியிடப்பட்டுள்ளன. இதர மென்பொருட்கள் உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது.

தமிழிணையம் ஒருங்குறி மாற்றி மூலம், பலதரப்பட்ட தமிழ் குறியீடுகள் வாயிலாக உருவாக்கப்பட்ட உரைகள், அட்டவணைகள், படங்கள், புள்ளிகள் போன்றவற்றை எவ்வாறு உள்ளனவோ அதேநிலையில் பாதுகாப்பாக தமிழ் ஒருங்குறிக்கு மாற்றிட இயலும். 10 தமிழ் இணைய ஒருங்குறி எழுத்துருக்களை தமிழ் இணையக் கல்விக்கழக இணையதளத்திலிருந்து (http://www.tamilvu.org/tkbd/index.htm), இலவசமாகப் பதிவிறக்கம் செய்து பயன்படுத்த இயலும் என்பதால், தனியார் மூலம் உருவாக்கப்பட்ட எழுத்துருக்களைப் பெறுவதற்காக செலவிடப்படும் தொகை பெரிதளவில் இனி மிச்சமாகும்.

கணினி, அலைபேசி மற்றும் திறன்பேசி உட்பட அனைத்து மின்னணு தகவல் தொடர்புச் சாதனங்களிலும் தமிழைப் பயன்படுத்துவதற்குத் தேவையான மென்பொருட்கள் உருவாக்கப்படவுள்ளன.

மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தேவையான நவீன மொழியாக்கக் கருவிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

### 5.9.7 புதிய பாடத்திட்டங்கள் உருவாக்குதல்

உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் தொடர்ந்து பயன்பெறும் வகையில், தமிழை இரண்டாம் மொழியாகவும் மற்றும் அயல் மொழியாகவும் கற்பிக்கும் வகையிலும் அந்தந்த நாட்டுக்கு ஏற்ற சூழலுக்குப் பொருந்தும் வகையிலும் தமிழ் இணையக் கல்விக்கழகம் பாடத்திட்டங்களை மாற்றி அமைத்து வருகிறது.

### 5.9.8 ஆசிரியர்களுக்குப் பயிற்சி

வெளிநாடுகளில் குழந்தைகளுக்குத் தமிழ் கற்றுக் கொடுத்திடும் தன்னார்வலர்களுக்கு முறையான ஆசிரியர் பயிற்சி இல்லாததைக்

கருத்தில் கொண்டு, வெளிநாடு வாழ் தமிழாசிரியர்களுக்கான பட்டயப் படிப்பு ஒன்றினைப் புதிதாய் அறிமுகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.9.9 கல்வி மேலாண்மை

மொழித்திறன்களை மதிப்பீடு செய்யும் வகையில் உலகத்தரத்தில் மொழி மதிப்பீட்டுக் கருவிகளை உருவாக்கி, கணினி வழிக்கற்றல் மற்றும் கற்பித்தலை உள்ளடக்கிய பல்லூடகப் பயன்பாட்டின் வழி ஒரு முழுமையான கற்றல் மற்றும் கற்பித்தலுக்கான மேலாண்மைத் தளம் வடிவமைக்கப்பட்டு வருகின்றது.

### 5.9.10 மாணவர்களுக்கான குறுஞ்செயலிகள்

மாணவர்களை எளிதில் கவர்ந்திடும் வகையில் தமிழ்மொழிப் பாடங்கள், இலக்கணம், அகராதி ஆகியவற்றைப் பல்லூடகப் பயன்பாட்டின் துணைகொண்டு அலைபேசி மற்றும் திறன்பேசியில் பயன்படுத்தும் வகையில் குறுஞ்செயலிகளாகப் படைத்திடவும் ஆய்வுத் திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன.

### 5.9.11 படைப்பாக்க பொதும உரிமம்

தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் கருத்துருவின் அடிப்படையில் அரசாணை (நிலை) எண்.105, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, நாள் 01.07.2016-இல் தமிழ்நாடு அரசு மற்றும் இதர அரசு நிறுவனங்களின் படைப்புகளைப் படைப்பாக்கப் பொது உரிமத்தின் கீழ் (Creative Common Licence) வெளியிட ஆணையிடப்பட்டுள்ளது. தமிழ் இணைய கல்விக்கழகத்தால் உருவாக்கப்பட்ட மற்றும் அதன் மூலம் வெளியிடப்பட்ட படைப்பாக்க கல்வி மற்றும் அறிவியல் உள்ளடக்கங்கள், பல்வேறு மென்பொருட்கள் மற்றும் அவற்றின் வழிமுறைகள் அனைவருக்கும் தடையின்றிச் சென்று சேரும் விதமாக, அவையனைத்தும் படைப்பாக்க பொதும உரிமங்களின் கீழ் வெளியிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் உள்ளடக்கங்கள் மற்றும் பல்லூடகக்கோப்புகள், இனி CC-BY-SA 4.0 என்னும் உரிமத்திலும், மூல நிரலுடன் கூடிய மென்பொருட்கள் GNU GPL 2.0 என்னும் உரிமத்திலும் வெளியிடப்படும்.

# அத்தியாயம் - VI

# தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் (ICTACT)

## 6.1 முன்னுரை

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில் நுட்பவியல் நிறுவனம், பொது மற்றும் தனியார் கூட்டுமுயற்சியில் தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் கல்லூரி ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் பயிற்சி அளித்து, அதன்மூலம் மாணவர்களை தொழில்துறைக்கான தகுதி பெறச்செய்யும் நோக்கில் ஏற்படுத்தப்பட்ட ஒரு முன்னோடி நிறுவனமாகும்.

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் என்பது மத்திய அரசு, மாநில அரசு மற்றும் தொழில் துறையின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பாகும். தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் ஒரு சுயாட்சி


உரிமையுள்ள, இலாபத்தைக் கருதிச் செயல்படாத நிறுவனமாகும். தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களிலிருந்து படித்து முடித்து வெளிவரும் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதும், அதன் மூலம் அவர்களை தொழில்துறைக்கு உகந்தவர்களாக மாற்றுவதும், தகவல் மற்றும் தகவல் தொடர்பு நிறுவனங்களில் வேலைவாய்ப்பினை பெறுவதற்கு தகுதியுடையவர்களாக உருவாக்குவதும் இந்நிறுவனத்தின் நோக்கமாகும். இந்நிறுவனம், தகவல் தொழில் நுட்பவியல் துறையைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு அரசின் பிரதிநிதிகள் கொண்ட தன்னாட்சி குழு மூலம் நிர்வகிக்கப்படுகிறது

நிதி ஆயோக்கின் (NITI Aayog) முதல் கூட்டத்தை தொடர்ந்து அமைக்கப்பட்ட திறன் மேம்பாட்டிற்கான முதலமைச்சர்களின் உப குழு தமிழ்நாடு ஐசிடி அகாடமியை (ICTACT) திறன் மேம்பாட்டு பயிற்சிக்கான ஒரு மாதிரி நிறுவனமாக அங்கீகரித்து நாட்டின் அனைத்து மாநிலங்களிலும்

விரிவாக்கம் செய்திட ஒரு முன்னோடி நிறுவனமாக அறிவித்துள்ளது.

## 6.2 செயல்பாடுகள்

தமிழ்நாடு ஐசிடி அகாடமி பின்வரும் முக்கிய செயல்பாடுகளை மேற்கொண்டுவருகிறது.




படம் 22

### 6.2.1 ஆசிரியர் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம்

➢ மொத்தம் 182 உயர்கல்வி ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் தமிழகத்தில் நடத்தப்பட்டு, அதன்மூலம் கல்லூரி / பல்கலைக்கழக மாணவர்கள் பயன்பெறும்

வகையில் 5662 உயர்கல்வி ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

- ஐசிடிஏசிடியின் சார்பில் மாணவர்களுக்கான 32 திறன்மிகு கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. அதன் மூலம் 9,990 பயனாளிகள் பயன்பெற்றனர். பல்வேறு கான்க்ளேவ்கள் (Conclaves) தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட்டு 325 ஆசிரியர்கள் பயன்பெற்றுள்ளனர்.

- TCS iON – மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான ஆன்லைன் திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்பப் படிப்புகளை ஊக்குவிக்கும் நோக்கில் டி.சி.எஸ் அயான் டிஜிட்டல் ஹப் (TCS iON digital hub) மூலம் பயிற்சிகள் நடத்தப்பட்டன.

- LearnBiz – புதிய கற்பித்தல் முறை மற்றும் கருவிகள் மூலம் மேலாண்மைக் கல்வி, ஆசிரியர் மேம்பாட்டுத் திறன் பயிற்சிகளில் பங்கேற்க வாய்ப்பளித்து வருகிறது.

- TNeGA - ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் திறன் மேம்படையும் வகையில் பயிற்சிகள் வழங்க ICTACT - TNeGA கூட்டாண்மை ஒப்பந்தத்தின் மூலம் இணைந்து செயல்படுகிறது.

### 6.2.2 திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம்

- தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம், பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் K-12 துறை ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிப் பட்டறைகளை நடத்தியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் இந்நிறுவனம், பள்ளிகளின் மேம்பாட்டிற்கான பயிற்சிகள், சேவைகள், நிகழ்ச்சிகள், பயிற்சி அரங்குகள் மற்றும் திறன் மேம்பாட்டுப் போட்டிகள் ஆகியவற்றை ஆசிரியர்களுக்கும் மாணவர்களின் நலனுக்காகவும் நடத்தி வருகிறது.

- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வேலை வாய்ப்பு திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக 300 வேலையில்லா இளைஞர்களுக்கு "வங்கி நிதி சேவை மற்றும் காப்புறுதி துறைசார் பயிற்சி" (BFSI Sector) அளிக்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வேலை வாய்ப்புத் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக 305 பட்டப்படிப்பு இறுதியாண்டு மாணவர்களுக்கு "மேம்பட்ட IT/ITES துறைசார் பயிற்சி" அளிக்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப் பட்டன.

- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் அங்கீகரிப்பின் பின்வரும் வேலை வாய்ப்புத் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக 199 வேலையில்லா இளைஞர்களுக்கு "தொலைத் தொடர்புத்

துறைசார்" (Telecom Sector) பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப் பட்டன.

- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வேலை வாய்ப்புத் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக 297 வேலையில்லா இளைஞர்களுக்கு "சில்லரை வணிகத் துறைசார் பயிற்சி" (Retail Sector) அளிக்கப்பட்டுசான்றிதழ்கள்வழங்கப்பட்டன.

### 6.2.3 தொழில்முனைவு மேம்பாட்டுத் திட்டம்

- ICTACT, புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மத்திய அரசின் ராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனத்துடன் (RGNIYD), தொழில்முனைவு திறன் மேம்பாடு (Entrepreneurship Development) மற்றும் வேவைவாய்ப்பு வழிகாட்டி (Career Guidance) திட்டங்களைச் செயல் படுத்துவதற்காக ஏற்படுத்தியுள்ளது.

- Salesforce – ICTACT கூட்டாண்மை ஒப்பந்தம் சேல்ஸ்போர்ஸ் நிறுவனத்தின் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை ICTACT-யின் உறுப்புக் கல்லூரிகளில் நடத்த வகை செய்கிறது. சேல்ஸ்போர்ஸ் நிறுவனத்தின் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் கல்வி நிறுவனங்கள் சிறந்த கற்றல் அனுபவம் பெறுவதன்மூலம் வேலைவாய்ப்புத் திறன்மிக்க மாணவர்களை உருவாக்கும் வகையில் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

### 6.2.4 இளைஞர் மேம்பாட்டுத் திட்டம்

- இத்திட்டத்தின்கீழ் "ஐசிடிஏசிடி யூத்டாக்" மற்றும் "ஐசிடிஏசிடி யூத் பிரசன்ட்" எனும் மாணவர்களுக்கான இரண்டு போட்டிகளை துவக்கியுள்ளது. இப்போட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும். இதன்மூலம் மாணவர்களின் பேச்சுத்திறன், திட்டங்களை சமர்ப்பிக்கும் திறன் மற்றும் தலைமைப் பண்புத் திறன் ஆகியவை மேம்படும். 2016-17 ஆம்

ஆண்டில் இந்த போட்டியில் 25,202 மாணவர்கள் பங்கேற்றனர். இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 6 மாணவர்களுக்கு அவர்களது உலகளாவிய திறனை மேம்படுத்தும் வகையில் அனைத்து செலவுகளையும் உள்ளடக்கிய 3 நாள் கல்வி சுற்றுலாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

- இந்நிறுவனம், "இளைஞர் உச்சி மாநாடு (ICTACT Youth Summit)" என்னும் இளைஞர்களுக்கான வருடாந்திர உச்சி மாநாட்டை 2016-17ஆம் ஆண்டில் 2 நகரங்களில் (சென்னை மற்றும் கோயம்புத்தூர்) நடத்தியுள்ளது.

**6.2.5 ஆய்விதழ்கள் மற்றும் பிரசுரங்கள்.**

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் காலாண்டுக்கு ஒரு முறை, அதாவது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பின்வரும் ஆய்விதழ்களை வெளியிட்டு வருகிறது.

- ஐசிடிஏசிடி (ICTACT) தகவல் தொழில்நுட்ப ஆய்விதழ் (IJCT)
- ஐசிடிஏசிடி (ICTACT) ஒளிப்பேழை மற்றும் காட்சி ஒளிப்பேழை ஆய்விதழ் (IJIVP)
- ஐசிடிஏசிடி (ICTACT) மென் கணினி ஆய்விதழ் (IJSC)
- ஐசிடிஏசிடி (ICTACT) நுண்மின்னணுவியல் ஆய்விதழ் (IJME)
- ஐசிடிஏசிடி (ICTACT) மேலாண்மை ஆய்வுசார் ஆய்விதழ் (IJMS)

**(அ) ICTACT-யின் சர்வதேச ஆய்விதழ்களுக்கான இண்டெக்ஸ் காப்பர்நிக்கஸ் மதிப்பு**

| | |
|---|---|
| ICTACT தகவல் தொழில்நுட்ப ஆய்விதழ் (IJCT) | 62.08 |
| ICTACT மென் கணினி ஆய்விதழ் (IJSC) | 78.42 |
| ICTACT ஒளிப்பேழை மற்றும் காட்சி ஒளிப்பேழை ஆய்விதழ் (IJIVP) | 63.80 |

**(ஆ) ICTACT-யின் சர்வதேச ஆய்விதழ்களுக்கான குளோபல் இம்ப்பேக்ட் பேக்டர் மதிப்பு**

| | |
|---|---|
| ICTACT தகவல் தொழில்நுட்ப ஆய்விதழ் (IJCT) | 0.788 |
| ICTACT மென் கணினி ஆய்விதழ் (IJSC) | 0.787 |
| ICTACT ஒளிப்பேழை மற்றும் காட்சி ஒளிப்பேழை ஆய்விதழ் (IJIVP) | 0.786 |

ஐசிடிஏசிடி ஆய்விதழ்கள் சர்வதேச அங்கீகாரம் பெற்ற தரவுத் தொகுப்புகளான டைரக்டரி ஆப் ஓபன் ஆக்சஸ் ஜர்னல்ஸ் (DOAJ), இண்டெக்ஸ் காப்பர்நிக்கஸ், இன்ஸ்பெக் (IET), EBSCO HOST, கூகுள் ஸ்காலர், ஜே-கேட், சைட்பேக்டர், Research Bib. ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள ஆய்விதழ்களின் தரத்தை தக்க வைக்க ஐசிடிஏசிடி உலகலாவிய கல்வித்துறை நிபுணர்கள் மற்றும் வல்லுநர்களை இணைத்துப் பணியாற்றி வருகிறது.

### 6.2.6 டிஜிட்டல் மேம்பாட்டுத் திட்டம்

- "டிஜிட்டல் இந்தியா விஷன்" இந்தியாவை உலகத் தரம் வாய்ந்த சேவைகளை நல்கும் ஒரு முழுமையான அறிவுசார் பொருளாதார நாடாக பரிணமிக்க வைக்க உறுதி பூண்டுள்ளது. மேலும், இத்தொலைநோக்குத் திட்டம் கிராமப்புற மக்களின் டிஜிட்டல் திறனையும் முழுமையாக மேம்படுத்த விழைகிறது. இத்தொலைநோக்கு திட்டத்தால் உந்தப்பட்டு ஐசிடிஏசிடி டிஜிட்டல் இந்தியா விஷனின் வெற்றிக்கு வலு சேர்க்கும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.
- ஜூன் 2016 முதல் டிசம்பர் 2016 வரை "ஐசிடிஏசிடி டிஜிட்டல் லிட்டரசி செர்ட்டிபிகேஷன் டிரைவ்" திட்டத்தை தனிநபர் டிஜிட்டல் திறன்களை மதிப்பீடு செய்து சான்றளிக்கும் முகாமாக "அப்ரிசியேஷன் ஆப் டிஜிட்டல் லிட்டரசி – லெவல் 1" என்னும் படிவத்தை இந்திய அரசின் நேஷனல் டிஜிட்டல் லிட்டரசி மிஷன் (NDLM)

திட்டத்தின் கீழ் நடத்த உள்ளது. ஐசிடிஏசிடி இத்திட்டத்தின் மதிப்பீடு மற்றும் சான்றிதழ் பங்குதாரராக உள்ளது.

- "ஐசிடிஏசிடி டிஜிட்டல் லிட்டரசி செர்ட்டிபிகேஷன் டிரைவ்" திட்டம் டிஜிட்டல் லிட்டரசி பயிற்சி பெற்ற தனிநபர்கள், தொழில் நிறுவன ஊழியர்கள் மற்றும் ஐசிடிஏசிடி உறுப்புக் கல்வி நிறுவனங்கள் ஆகியோர் ஐசிடிஏசிடி-யின் மூலம் மதிப்பீடு மற்றும் சான்றிதழ் பெறும் வாய்ப்பை நல்குவதாக அமையும்.

### 6.2.7 தொழிற்துறை மற்றும் கல்விநிறுவனத் தொடர்புத் திட்டம்

- சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் 3 "ICTACT Bridge" மாநாடுகளை தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் நடத்தியுள்ளது. அதன் மூலம் 2,876 பயனாளிகள் பயன் பெற்றனர்.

➢ VMware நிறுவனம் தனது VMware IT Academy Programs, ஆன்லைன் லேப், காணொலி வகுப்புகள் மற்றும் ஆசிரியர் பயிற்சி ஆகியவற்றை வழங்குவதற்காக ஐசிடிஏசிடியுடன் கூட்டாண்மை ஒப்பந்தம் செய்துள்ளது. குறிப்பாக, கணினி அறிவியல், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் கம்ப்யூட்டர் அப்ளிகேஷன் பயிலும் மாணவர்களுக்கு மாணவர் திறன் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் VMware ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றை வழங்கவுள்ளது. மேலும் ICTACT VMware-ன் மண்டல IT Academy-ஆக செயல்படுவதோடு தேசிய அளவில் 100 கல்லூரிகளில் VMware IT Academy-களை துவக்கவும் ஒப்புக்கொண்டுள்ளது.

➢ Autodesk நிறுவனம் ICTACT-உடன் செய்து கொண்டுள்ள கூட்டாண்மை ஒப்பந்தத்தின் அடிப்படையில் Autodesk Software Suites, கல்வித் தரவுகள், பயிற்சித் திட்டங்கள் மற்றும்

உலகளாவிய அங்கீகாரமுள்ள சான்றிதழ் படிப்புகள் ஆகியவற்றை தமிழகத்திலுள்ள ஐசிடிஏசிடி உறுப்பினர் கல்லூரிகளுக்கு வழங்கவுள்ளது.

- Hortonworks நிறுவனம் ஐசிடிஏசியுடன் செய்து கொண்டுள்ள கூட்டாண்மை ஒப்பந்தத்தின் மூலம் அந்நிறுவனத்தின் கல்வித் தரவுகளை பயன்படுத்திக் கொள்ளவும் அதன் விற்பனையாளரிடமிருந்து புத்தகங்களை வாங்கி கொள்ளவும் முடியும். மேலும், அந்நிறுவனத்தின் விருப்பப் பட்டயத் தேர்வுகளையும் ICTACT மூலம் வழங்கவுள்ளது.

- EMC Academic Alliance நிறுவனம் ஐசிடிஏசிடியுடன் செய்துகொண்டுள்ள கூட்டாண்மை ஒப்பந்தத்தின் அடிப்படையில் 50 Academic Excellence மையங்களை தமிழகத்தில் ஏற்படுத்தி உள்ளது. இம்மையங்கள் தமிழகம் முழுவதும் ICTACT தேர்ந்தெடுக்கும் முன்னணி ஐடி

நிறுவனங்களில் நிறுவப்படும். இம்மையங்கள் மூலம் Cloud, Data Science, Analytics, IT Infrastructure மற்றும் இதர முன்னணி தொழில்நுட்பங்களை மாணவர்கள் கற்றுக்கொள்ள வகை செய்யும். மேலும் இந்நிறுவனம் தனது கல்விச் சேவை முயற்சியின் கீழ் இம்மையங்களுக்கு தேவையான வல்லுநர் உதவிகள் மற்றும் புத்தகங்களை வழங்கவுள்ளது.

- ICTACT Palo Alto Networks நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற மையமாக இணைந்து அந்நிறுவனத்தின் Firewall Installation, Advanced Firewall Troubleshooting மற்றும் Advanced Threat Management ஆகிய பாடத்திட்டங்களுக்கான வகுப்பறை மற்றும் தொழில்நுட்பப் பயிற்சியளிக்கவுள்ளது.
- ICTACT தொலை தொடர்பு சார்ந்த வகுப்புகளை, திறன் மேம்பாட்டுத் தரத்திற்கேற்ப நடத்துவதில் தொலை தொடர்பு

துறை திறன் மையத்தின் (TSSC) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பயிற்சி பங்குதாரர் நிறுவனமாகும்.

- தமிழக அரசு நடத்திய “உலக முதலீட்டாளர் மாநாடு (GIM) 2015” -ல் ICTACT கலந்து கொண்டதுடன், தமிழகத்திற்கு முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் பல்வேறு விளக்கப் பட்டறைகள், மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகளை நாடெங்கிலும் நடத்தியது.

## 6.3 ICTACT விருதுகள்

- ஆசிரியர் மற்றும் மாணவர்களின் திறனை மேம்படுத்தும் பணியில் கல்வித் துறைக்கு ஆசிரியர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களின் பங்களிப்பை அங்கீகரிக்க வேண்டிய அவசியத்தை ஐசிடிஏசிடி உணர்ந்துள்ளது.
- “ஐசிடிஏசிடி அகாடெமிக் பார்ட்னர் எக்ஸ்லென்ஸ்” விருதுகள் மற்றும் “ஐசிடிஏசிடி பெஸ்ட் கோ-ஆர்டினேட்டர்”

விருதுகள் ஆகியவை ஐசிடிஏசிடி திட்டங்களில் சிறப்பாக பங்கெடுத்த உறுப்பினர் கல்வி நிறுவனங்களை அங்கீகரிக்கும் முகாமாக வழங்கப்படுவதாகும். ஐசிடிஏசிடி டெக்னோ விருதுகள் கல்வி பயிற்றுவிப்பில் குறிப்பாக தொழில்நுட்பத்தில் சிறப்பான பயன்பாட்டிற்காக வழங்கப் படுகிறது. இவ்விருதுகளுக்கான விண்ணப்பங்கள் நாடு முழுவதிலுமிருந்து ஆண்டுதோறும் வரவேற்கப்படுகின்றன. மேலும், ஐசிடிஏசிடி மாணவ கண்டுபிடிப்பாளர் விருது மாணவர்களின் புத்தாக்கத் திறன்களை ஊக்குவிக்கும் வகையில் வழங்கப்படுகிறது.

- அனைத்து விருதுகளிலும் தேர்வாகும் வெற்றியாளர் களுக்கு ICTACT பிரிட்ஜ் மாநாட்டில் விருதுகள் வழங்கப்படுகின்றன. கடந்த ஐந்தாண்டுகளில் 50-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் இதன் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

**6.4 2016-17-ல் முடிவுபெற்ற அரசுத் திட்டங்கள்**

பயிற்சி அளிக்கும் திறனை ஒருங்கே பெற்ற இந்நிறுவனம், அரசுத்துறை நிறுவனங்களின் பணியாளர்களுக்கு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் மற்றும் மின்னாளுமையில் பயிற்சி அளித்து, அரசுக்கு தனது சீரிய பணியை ஆற்றி வருகிறது. இந்நிறுவனம், அரசுத்துறையின் பல்வேறு திட்டங்களிலும் பங்கெடுத்து வருகிறது. 2016-17-ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட சில திட்டங்கள் பின்வருமாறு :

| வ, எண் | திட்டத்தின் பெயர் | துறை |
|---|---|---|
| 1 | சமூகநலத்துறையால் நடத்தப்படும் விடுதிகளில் உள்ள 100 மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு திறன் பயிற்சி அளிக்கப்பட்டது. (கடித எண்.35720/1(2)/2016, ச.ந (ம) ச.தி துறை, நாள் 21.02.2017) | தமிழக அரசின் சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை (Social Welfare and Nutritious Meal Programme Department), |

| | | |
|---|---|---|
| 2 | 1000 தாழ்த்தப்பட்ட (SC) மற்றும் பழங்குடி இனத்தைச் (ST) சேர்ந்த பட்டப்படிப்பு மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு திறன் பயிற்சி அளிக்கப்பட்டது. ( மத்திய அரசு கடித எண்.DIR/ ICT/003/2014, நாள் 10.09.2015) | மத்திய அரசின் ராஜீவ்காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனம் (RGNIYD), |
| 3 | 300 பட்டப்படிப்பு இறுதியாண்டு மாணவர்களுக்கு "மேம்பட்ட ஐடி/ஐடிஇஎஸ் (IT/ITES) துறைசார் பயிற்சி" அளிக்கப்பட்டது. (அரசாணை நிலை எண்.204, L&E (S2) Dept, நாள் 11.12.2015) | தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனம் (Tamil Nadu Skill Development Corporation) |
| 4 | ராஷ்டிரிய உச்சதார் ஷிக்ஷா அபியான் (RUSA) திட்டத்தின் கீழ் 3332 இறுதியாண்டு மாணவர்களுக்கு தொழில் சார்ந்த வேலைவாய்ப்புத் திறன் பயிற்சி அளிக்கப்பட்டது. (கடித எண். 2862 / SDC-4/2016, TNSDC நாள் 24.04.2017) | தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனம் (Tamil Nadu Skill Development Corporation) |

| | | |
|---|---|---|
| 5 | 100 வேலையில்லா இளைஞர்களுக்கு மென்திறன், ஆங்கிலம் மற்றும் அலுவலக மேலாண்மைத் திறன் பயிற்சி அளிக்கப்பட்டது (கடித எண். Rc.2073 / 14 / B3, TNWC நாள் 30.08.2016) | **தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்** (Tamil Nadu Warehousing Corporation) |
| 6 | 712 ஆதிதிராவிடர் ஆசிரியர்களுக்கு ஆங்கிலம் மற்றும் தகவல் பரிமாற்றம் திறன் பயிற்சிஅளிக்கப்பட்டது (அரசாணை நிலை எண்.19/AD & TW (SCP – 2) Dept, நாள் 24.03.2017) | தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO), தமிழக அரசு |

## 6.5 2017-2018 –ல் நடைமுறையில் உள்ள தமிழக அரசின் திட்டங்கள்

| வ. எண். | திட்டத்தின் பெயர் | துறை |
|---|---|---|
| 1. | மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அறிவிப்பு - 130 அரசு பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தமிழ்நாடு ஐசிடி நிறுவனத்தின் இலவச உறுப்பினராக்குதல் (அரசாணை நிலை எண்.29, த.தொ.நு (நிர்.1) துறை, நாள் 15.12.2016) | தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பவியல் துறை (Information Technology Department) |
| 2. | மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அறிவிப்பு - 1000 பட்டப்படிப்பு இறுதி ஆண்டு மாணவர்களுக்கு தமிழ்நாடு ஐசிடி நிறுவனம் மூலம் தகவல் தொழில்நுட்ப மற்றும் மென்திறன் பயிற்சி வழங்குதல் (அரசாணை நிலை எண்.67 தொ(ம)வே.வா.(S2) துறை, நாள் 12.04.2017) | தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனம் (Tamil Nadu Skill Development Corporation) |

| | | |
|---|---|---|
| 3. | 1200 பட்டப்படிப்பு இறுதியாண்டு மாணவர்களுக்கு வேலை வாய்ப்புத் திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் (கடித எண். | தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகம் (TAHDCO) |
| 4. | தமிழ்நாடு ஹவுஸ் - டெல்லியில் பணிபுரியும் 30 ஊழியர்களுக்கு அடிப்படை கணினி இயக்க பயிற்சித் திட்டம் (கடித எண். K/15/11/2016, நாள் 09.06.2017) | மின்னாளுமை ஆணையரகம் மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, (TNeGA), தமிழக அரசு |

# அத்தியாயம் - VII

# தமிழ் நாடு பைபர்நெட் கார்ப்பரேஷன் லிமிடெட் (TANFINET)

தமிழக அரசு, மத்திய அரசுடன் இணைந்து, மாநிலம் தழுவிய ஒரு கண்ணாடி இழை வட வலையமைப்பை (Optical Fibre Network) உருவாக்கி, அதன் மூலம் அனைத்து இல்லங்களுக்கும் அகன்ற அலைவரிசை இணைப்பினை வழங்கிட உள்ளது. "பாரத்நெட்" மூலம் வட்டாரம் முதல் கிராமம் வரையிலான இணைப்பு மட்டுமே வழங்க இயலும். தமிழக அரசின் தொலை நோக்கு பார்வையின் கீழ், தமிழ் நாடு பைபர்நெட் திட்டம் மூலம், .மாநிலம் முழுவதும் இணைப்பு (Network Connectivity) வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அகன்ற அலைவரிசை இணைப்பின் மூலம், குரல், தரவு, காணொலி போன்ற மூவகைச் சேவைகள், இ-சேவை மையங்களுக்கான அலை வரிசை ஆகிய சேவைகளை அளிக்க முடியும்.

இதுபோன்ற ஒரு வலையமைப்பினை உருவாக்கி, இயக்கி, சொந்தமாக்கி, பராமரிக்க, "தமிழ்நாடு பைபர் நெட் கார்ப்பரேஷன் லிமிடெட்" என்னும் நிறுவனத்தை ரூபாய் 50 இலட்சம் பங்கு மூலதனத்தில் உருவாக்கிட 1.2.2016 அன்று

ஆணைகள் வெளியிடப்பட்டன. இதன் மூலம் நம் மாநிலத்தில் உள்ள வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்தி, மாநிலம் தழுவிய ஒரு தகவல் நெடுஞ்சாலையை குறுகிய நேரத்தில் வணிக ரீதியாக சாத்தியமாக்கக் கூடிய வகையில் TANFINET அமைப்பை உருவாக்குவது அரசின் நோக்கமாகும்.

இதன் தொடர்ச்சியாக, தமிழ்நாட்டில் பாரத்நெட் திட்டத்தை செயல்படுத்துவதற்கு ஏதுவாக, தமிழக அரசு, மத்திய அரசு மற்றும் திருவாளர்கள் பாரத் ப்ராட்பேண்ட் நெட்வொர்க் லிமிடெட் (Bharat Broadband Network Limited) ஆகியவற்றுக்கிடையே முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்திடப்பட்டு ஏப்ரல், 2017-ல் பரிமாறிக்கொள்ளப்பட்டது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பாரத்நெட்டின் இரண்டாம் கட்டத்தில் வட்டார தலைமையகத்திற்கும் கிராம பஞ்சாயத்துகளுக்கும் இடையில் ஆப்டிக் பைபர் கேபிள், மின் கம்பங்கள் வழியாக அமைக்கப்படும். இந்த திட்டத்திற்கு ஆகும் ஆய்வு செலவுகளுக்கான 50 சதவீத தொகையான ரூ.3.85 கோடியை மத்திய அரசு அளித்துள்ளது. தற்சமயம் இத்திட்டத்திற்காக கிராமப்பஞ்சாயத்து சேவை மையங்களிலிருந்து பி.எஸ்.என்.எல் (BSNL) இணைப்பகத்திற்கு நடுவில் உள்ள மின்கம்பங்களை

கணக்கெடுப்பு செய்யும் பணிகள் மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் நடைபெற்று வருகிறது. இந்த ஆய்வுப் பணி முடிந்த பின் விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயார் செய்யப்பட்டு மத்திய அரசுக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்படும். இந்த திட்டத்தின் அடுத்தக் கட்டத்தில் நிலத்தடி வாயிலாகவும் கேபிள் அமைக்கப்படும். இதற்கு பிணையங்களில் எந்தவித இடையூறு இல்லாத நிலையை உருவாக்குவதற்கு ஏதுவாக வளையக் கட்டமைப்பு (Ring Architecture) பயன்படுத்தப்படும்.

4. இத்துறையைச் சார்ந்த தலைசிறந்த ஒரு வல்லுநர் தலைமையில், தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகம் (TNIFMC), தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் (TACTV), தமிழ்நாடு மின் தொடர் அமைப்புக் கழகம் (TANTRANSCO), தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (TANGEDCO) ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளடக்கிய உட்குழு ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது. இக்குழு TANFINET நிறுவன அமைப்பை இறுதி செய்து அரசுக்கு பரிந்துரை செய்யும். மேலும் இந்த நிறுவனத்தின் சங்கப் பதிவு குறிப்பு Memorandum of Association (MoA) மற்றும் சங்க அமைப்பு விதிகள் Articles of Association (AoA)

ஆகியவற்றை உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.



**படம் 22: பாரத்நெட் திட்டம் செயல்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம்**

# அத்தியாயம் - VIII

# விருதுகள்

## 8.1 தமிழக அரசால் வழங்கப்படும் விருதுகள்

### 8.1.1 அரசுத் துறைகளுக்கான மின் ஆளுமைக்கான மாண்புமிகு முதலமைச்சரின் உயரிய விருது

அரசுத் துறைகளில் மின் ஆளுமையின் உபயோகத்தினை உரிய வகையில் அங்கீகரித்து ஊக்குவிக்கும் வகையில் "**மின் ஆளுமைக்கான மாண்புமிகு முதலமைச்சரின் உயரிய விருது**" ஆண்டுதோறும் அரசுத் துறைகளுக்கு வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

அரசுத் துறைகள் மற்றும் மாவட்ட நிர்வாகங்களிடமிருந்து பெறப்பட்ட பரிந்துரைகள் ஆய்வுக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. பரிசீலனைக்குப்பின் விருதினை இறுதி செய்யும் பொருட்டு அவை தேர்வு குழுவிற்கு

சமர்ப்பிக்கப்படும். இதே முறை ஒவ்வொரு வருடமும் பின்பற்றப்படும்.

### 8.1.2 மாணவர்களுக்கான மின் ஆளுமைக்கான மாண்புமிகு முதலமைச்சரின் உயரிய விருது

இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் மின்னாளுமை ஆர்வலர்களிடையே மின்-ஆளுமையின் விழிப்புணர்வை ஊக்குவிக்கும் வகையில் தமிழக அரசு மாணவர்களுக்கான “மாண்புமிகு முதலமைச்சரின் மின்-ஆளுமைக்கான உயரிய விருதினை” அறிவித்துள்ளது.

இவ்விருதுக்கான பரிந்துரைகள் அனைத்து பிரிவுகளுக்கும் கோரப்பட்டது. இவ்விருதுக்கான தெரிவு இரண்டு நிலைகளில் முறையே மாவட்ட மற்றும் மாநில அளவில் நடைபெற்றது.

மாவட்ட அளவிலான தெரிவு நடைபெற்று முடிந்து விட்டது. மாநில அளவிலான விருதுக்கான தெரிவு விரைவில் இறுதி செய்யப்படும்.

**8.1.3 சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான தமிழ்நாடு அரசின் மின்னாளுமை விருது**

சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான தமிழ்நாடு அரசின் மின்னாளுமை விருது அறிவிக்கப்பட்டுள்ளது. சமூக தேவைகளுக்கேற்ப மின்னாளுமை தீர்வுகள் மற்றும் செயல்பாடுகளை கண்டறிந்து அவற்றை ஊக்குவிக்கும் நோக்கத்தில் இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விருதுக்கான பரிந்துரைகள் அனைத்து பிரிவுகளிலும் கோரப்பட்டுள்ளன.

**8.2 தகவல் தொழில்நுட்பவியல் துறையால் பெறப் பட்ட விருதுகள்**

**8.2.1 மாண்புமிகு முதலமைச்சரின் சிறந்த நடை முறைக்கான விருது - 2015**

அரசு இ-சேவை மையங்கள் வழியாக குடிமக்களுக்கு சேவைகள் வழங்கப்படுவதை அங்கீகரித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

நல் ஆளுமைக்கான சிறந்த நடைமுறை விருது, சுதந்திர தின விழா 2015-ன் போது வழங்கப்பட்டது.

**8.2.2 2014-ஆம் ஆண்டிற்கான "வெப் ரத்னா" விருது**

2014-ஆம் ஆண்டுக்கான மத்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறையின் "**வெப் ரத்னா**" தங்க உருவ (Gold Icon) விருது, இணையதளத்தில் மக்களுக்குப் பயன்படும் தகவல்கள் அளித்தல் மற்றும் சிறப்பான மின்ஆளுமை சேவைகளுக்காக தமிழ்நாடு அரசின் www.tn.gov.in இணையதளத்திற்கு வழங்கப் பட்டுள்ளது. இணைய அடிப்படையிலான முன்முயற்சிகள், சிறந்த இணைய சேவை வழங்கும் துறைகளின் தரம் மற்றும் குடிமக்களின் இணைய வாயிலான கேள்விகளுக்கு பதிலளிக்கும் பொறுப்புணர்ச்சி நிலை ஆகியவற்றை தேர்வு தகுதிகளாக இவ்விருது கொண்டுள்ளது. மேலும், பயன்பாடு மற்றும் அணுகுமுறை அம்சங்களும் கருத்தில் கொள்ளப்படுகிறது. மத்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறையினால் இவ்விருது வழங்கப்பட்டது.

### 8.2.3 2016-ஆம் ஆண்டிற்கான “வெப் ரத்னா” விருது

2016-ஆம் ஆண்டிற்கான வெப் ரத்னா விருதினை, தங்க உருவப் பிரிவின் கீழ் தமிழ்நாடு அரசின் இணையதளமான www.tn.gov.in வென்றுள்ளது. இந்த விருது இம்மாநிலத்தின் விரிவான இணைய பயன்பாடு, பொறுப்புடைமை, எண்ணிக்கை, தரம், புதுமைத்தன்மை, பயனரின் மன நிறைவு மற்றும் மக்களை சென்றடைதல் ஆகியவற்றை அங்கீகரிக்கும் விதமாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த இணையதளம் மூலம், தமிழ்நாடு அரசு பல்வேறு அரசு-குடிமக்கள்(G2C), அரசு-வர்த்தகர்கள் (G2B), அரசு-அரசுப்பணியாளர்கள் (G2E) மற்றும் அரசு-அரசு (G2G) சேவைகளை தங்குதடையின்றி செயல்படுத்தியுள்ளது.

இந்த நிகழ்நிலை சேவைகள் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் மக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்யும் வகையிலும் பெற்றுக்கொள்ள ஏதுவாக வடிவமைக்கப் பட்டுள்ளது. தமிழ்நிலம்,

ஓய்வூதியதாரருக்கான ஜீவன் பிரமான் சான்று, குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு வலையமைப்புத் திட்டம், ஆதிதிராவிடர் நலத்துறையின் கல்வித்தொகை மற்றும் கல்லூரிகளுக்கான கல்வித்தொகை திட்டம், மின் மாவட்ட சேவைகள் மற்றும் பதிவுத்துறையின் இணையவழி கட்டணத் திட்டம் போன்ற பல்வேறு சேவைகள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த விருது மத்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறையால் வழங்கப்பட்டுள்ளது.

**8.2.4 அதிக அளவில் ஆதார் அட்டைகள் அச்சிட்டமைக்காக கேபிள் டிவி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட விருது**

மாநிலம் முழுவதிலும் ஆதார் நிரந்தர பதிவு மையங்கள் (PECs) மற்றும் இ-சேவை மையங்களை தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் இயக்கி வருகிறது. இந்நிறுவனம் ஆதார் பிளாஸ்டிக் அட்டை

அச்சுப் பொறியை இம்மையங்களில் நிறுவியுள்ளது. ஆதார் எண்ணை பெற்றுள்ள குடிமக்கள் அனைவரும் இம்மையங்களில் ஆதார் பிளாஸ்டிக் அட்டையை அச்சிட்டு பெற்றுக் கொள்ள முடியும். இதற்கென ரூபாய் 30 கட்டணம் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. அதிக எண்ணிக்கையிலான ஆதார் பிளாஸ்டிக் அட்டை அச்சிட்டு வழங்கியமைக்காக 2016-ஆம் ஆண்டிற்கான விருதை தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வென்றுள்ளது.

### 8.2.5 மின் ஆளுமை இயக்குநரகம் மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை– கனெக்ட் 2016 மின் ஆளுமை விருது

தமிழ்நாடு அரசின் அனைத்து மின் ஆளுமை முயற்சிகளுக்கும் உந்துதலாகவும் உறுதுணை-யாகவும் வழி நடத்தி செல்லும் மாநில ஒருங்கிணைப்பு முகமையாக தமிழ்நாடு மின் ஆளுமை முகமை திகழ்கிறது. அனைத்து அரசு சேவைகளும் மக்களுக்கு நேர்த்தியாகவும் வெளிப்படையாகவும் எளிதில் கிடைக்கும் விதத்தில் மின் ஆளுமைத்

திட்டங்களை தமிழ்நாடு மின் ஆளுமை முகமை செயல்படுத்தி வருகிறது. சென்னை மாநகராட்சியின் மின் ஆளுமை முயற்சியால் 140 பொதுநலத் திட்டங்கள் தகவல் தொழில்நுட்பவியலின் உதவியுடன் தங்கு தடையின்றி மாநிலம் முழுவதிலும் உள்ள 1000 கணினி மையங்கள் மூலம் செம்மையாகவும் நேர்த்தியாகவும் மக்களுக்கும் வர்த்தகர்களுக்கும் வழங்கப்படுகிறது. இதனை அங்கீகரிக்கும் விதமாக இந்திய தொழில் கூட்டமைப்பு கனெக்ட் 2016-க்கான மின் ஆளுமை விருது, மின் ஆளுமை இயக்குநரகம் மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமைக்கு வழங்கப்பட்டுள்ளது.

**டாக்டர். எம். மணிகண்டன்**
**தகவல் தொழில்நுட்பவியல்**
**துறை அமைச்சர்**




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 5.8.2016 அன்று தலைமைச் செயலகத்தில், மாநில அளவிலான குடிமக்கள் தரவுகளை மின்னாக்கம் செய்து பாதுகாப்பான முறையில் நிர்வகிக்கும் வகையில் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலம் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையத்தின் இணையதள பயன்பாட்டினை துவக்கி வைத்தார்கள். மேலும், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலம் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பின் இணையதள பயன்பாட்டினை துவக்கி வைத்தார்கள்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 23.5.2017 அன்று தலைமைச் செயலகத்தில், சேலம், ஜாகீர்அம்மாபாளையத்தில் அமைந்துள்ள தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்ப கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், கோயம்புத்தூர், விளாங்குறிச்சியில் அமைந்துள்ள தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் கட்டப்பட்டுள்ள நிர்வாகக் கட்டடத்தை திறந்து வைத்தார்கள்.